மலர் : 51 இதழ் : 2

தமிழரசு

ஆகஸ்ட் 2020
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

“தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது”
- முதல்வர்

ஆகஸ்ட் 15: சுதந்திர தின திருநாள்

தாய் திருநாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி வல்லரசு நாடாக உயர்த்திட அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி

இந்தியத் திருநாடு ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற்ற இந்த பொன்னான நாளில், நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் அவர்கள் காட்டிய அகிம்சை வழியில், ஆங்கிலேயர்களிடமிருந்து நம் தாய் திருநாட்டிற்கு விடுதலை பெற்றுத் தந்திட தங்கள் இன்னுயிரை நீத்த பல்லாயிரக்கணக்கான சுதந்திரப் போராட்ட வீரர்களின் மகத்தான தியாகத்தைப் போற்றும் நன்னாளாகவும் இச்சுதந்திர தினம் விளங்குகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளை போற்றி பெருமைப்படுத்தும் வகையில், விடுதலை போராட்டத் தியாகிகளுக்கு வழங்கி வரும் மாதாந்திர ஒய்வூதியத்தை 15,000 ரூபாயிலிருந்து 16,000 ரூபாயாகவும், அவர்களது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் குடும்ப ஒய்வூதியத்தை 7,500 ரூபாயிலிருந்து 8,000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கியது, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு விலையில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. மேலும், சுதந்திரப் போராட்ட வீரர்களின் நினைவை போற்றும் வகையிலும், தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்திடும் வகையிலும் நினைவு மண்டபங்கள், திருவுருவச் சிலைகள், நினைவுத் தூண்கள் நிறுவி, அவர்களின் பிறந்த நாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் விழாக்கள் நடத்தி, அவர்களின் புகழுக்கு பெருமை சேர்த்து வருகிறது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக உலக நாடுகள் அனைத்தும் போராடி வரும் இக்காலக் கட்டத்தில், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான், பரிசோதனைகளின் எண்ணிக்கை அதிகம், நோய் தொற்றிலிருந்து குணமடைந்து, இல்லம் திரும்புவோரின் சதவிகிதமும் அதிகம். அதுமட்டுமின்றி உயிர் இழப்போரின் சதவிகிதமும் இந்தியாவில் மட்டுமல்ல, உலகிலேயே தமிழ்நாட்டில்தான் மிகக் குறைவு.

கொரோனா தொற்று பரவலை தடுத்திட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இந்த நெருக்கடியான காலக்கட்டத்திலும், தமிழக மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற உயரிய நோக்கில், பல்வேறு முனைப்பான திட்டங்களை செயல்படுத்தி, தமிழக மக்களை அம்மாவுடைய அரசு காத்து வருகிறது. மக்களின் முழு ஒத்துழைப்போடு, கொரோனா தொற்று பாதிப்பிலிருந்து தமிழ்நாடு முழுமையாக மீண்டு, மீண்டும் வெற்றி நடை போடும் என்பதில் ஐயமில்லை.

இந்த இனிய நாளில், நமது தாய் திருநாட்டை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றி, வல்லரசு நாடாக உயர்த்திடவும், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தொடர்ந்து திகழ செய்திடவும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளமார்ந்த சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி வருடம் : ஆடி – ஆவணி
ஆகஸ்ட் 2020

மலர் : 51 விலை ரூ.20 இதழ் : 2

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **பொ. சங்கர் இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
முனைவர் **இரா. பாஸ்கரன்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
தேச. கலையரசன்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
ச. மஞ்சுளா
மு. மோகனவல்லி
மு. மணிமேகலை
அ. மதன்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் உங்களுக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்

இந்த இதழில்...

★ **“அம்மா வழியில் ஆட்சி, அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி” என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், இந்த அரசு, மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட்டு வருகிறது**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
சுதந்திர தின திருநாளில் ஆற்றிய உரை – 15.08.2020.................5

★ **தொழில் துறை சார்பில் ரூ.2,368 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 24,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கம்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில், 8 நிறுவனங்களின் தொழிற் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், 11 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியையும் துவக்கி வைத்தார்கள்.................17

★ **ஆலந்தூர் மெட்ரோ என்பது “அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ,” என்றும், சென்ட்ரல் மெட்ரோ என்பது “புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ” என்றும், புறநகர் பேருந்து நிலைய மெட்ரோ என்பது “புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம் மெட்ரோ” என்றும் பெயர் மாற்றம் செய்து ஆணை!**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை–31.07.2020.................39

★ **மாண்புமிகு அம்மாவின் அரசு மும்மொழிக் கொள்கையினை தமிழ்நாட்டில் எப்போதும் அனுமதிக்காது, இருமொழிக் கொள்கையை மட்டுமே தொடர்ந்து கடைப்பிடிப்போம்**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 03.08.2020.................59

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
74ஆவது சுதந்திரத் திருநாளையொட்டி 15.08.2020 அன்று தலைமைச் செயலக கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

“அம்மா வழியில் ஆட்சி, அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி” என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், இந்த அரசு, மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் சுதந்திர தின திருநாளில் ஆற்றிய உரை – 15.08.2020

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தையும், இனிய சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த கொடிய வைரஸ் கொரோனா தொற்று பாதிப்பின் காரணமாக, மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், இச்சுதந்திர தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கும் முக்கிய பிரமுகர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எனது சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாற்று சிறப்பு மிக்க, இந்த புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் நம் தாய்த்திரு நாட்டின் மணிக்கொடியை நான்காவது முறையாக ஏற்றி வைத்ததில் நான் பெருமிதம் அடைகிறேன்.

வங்கக் கடலோரம் வீசும் பூங்காற்றில், சுதந்திரமாக பட்டொளி வீசிப் பறக்கும் நம் மணிக் கொடி, இந்திய திருநாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை தியாகம் செய்த பல தியாகச் செம்மல்களின் வரலாற்று பதிவுகளை நம் கண் முன்னே கொண்டு வந்து சேர்கிறது.

ஒவ்வொரு இந்தியனின் உணர்விலும் 'அகிம்சை' எனும் அறம் உள்ளூர கலந்திருப்பதை உணர்ந்த நமது தேசத் தந்தை காந்தியடிகள், அடிமை விலங்கை தகர்த்தெறிய அகிம்சை வழியில் தேசத்தை ஒருங்கிணைத்து, அறப்போராட்டங்களை நடத்தி, நம் தாய்த்திருநாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தார்.

அவ்வழியிலேயே, நம் மாநிலத்தைச் சேர்ந்த பல தியாக சீலர்கள், அடிமை விலங்கை தகர்த்தெறிய, தங்களின் சொந்த நலன்களை பற்றி கொஞ்சமும் சிந்திக்காது, நாட்டு விடுதலைக்காகவே தங்கள் வாழ்நாளை அர்ப்பணித்தனர். அவர்களின் தியாகங்களை நினைவு கூரும் திருநாள் இது.

வீரன் பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், வீரமங்கை வேலுநாச்சியார், மருது சகோதரர்கள், மாவீரன் தீரன் சின்னமலை, பகதூர் வெள்ளையத்தேவன், வீரன் அழகு முத்துக்கோன், தளபதி ஒண்டிவீரன், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார், கொடிகாத்த திருப்பூர் குமரன், வீரத்தாய் குயிலி, விருப்பாச்சி கோபால நாயக்கர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், தியாகி சீனிவாச ராவ், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், தியாகி விசுவநாததாஸ், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், கந்தவராயன், சந்தவராயன், மயூரம் நாகப்ப படையாச்சி, சர்தார் ஆதிகேசவலு நாயக்கர், ரிபல் முத்துராமலிங்க சேதுபதி, வ.வே.சு ஐயர், ஜெய்ஹிந்த் செண்பகராமன், வீரர் சுந்தரலிங்கம், வீரமுரசு சுப்பிரமணிய சிவா, மகாகவி பாரதியார், தந்தை பெரியார், மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், தியாகசீலர் கக்கன், பொதுவுடைமை வீரர் ஜீவா, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, வீர வாஞ்சிநாதன், தில்லையாடி வள்ளியம்மை போன்ற எண்ணற்ற தலைவர்களும், கவிஞர்களும், கலைஞர்களும், இந்திய விடுதலைக்காக எண்ணிலடங்கா தியாகங்களை செய்ததுடன், சுதந்திர உணர்வையும் பரப்பி, இன்னமும் நமது நாட்டின் அடையாளங்களாக திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே –நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

என்ற மகாகவி பாரதியின் பாடல் வரிகளுக்கு ஏற்ப, சமீபத்தில் நமது எல்லைப் பகுதியில் அண்டை நாடு ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டபோது, "நாம் இந்தியர்" என்ற உணர்வோடு நம் படைகளுக்குப்பின் வலுவாக துணை நின்று நிரூபித்தோம். மேலும், நம் நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த மத்திய அரசு எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் நாம் அனைவரும் உறுதுணையாக இருப்போம் என்று உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுதந்திரத்தை பெற்று விடுவது கூட எளிது. அதை பாதுகாப்பது அதைவிடக் கடினம். பாதுகாப்பது கூட எளிது. சுதந்திரத்தால் ஏற்படும் பயன் எல்லோருக்கும் சேரச் செய்வது கடினம்" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், புரட்சித்தலைவி அம்மா, அவர்களின் வழி வந்த எனது

தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு, **அமைதி, வளம், வளர்ச்சி** என்ற முப்பெரும் கோட்பாடுகளின் அடிப்படையில் சுதந்திரத்தின் பயனை அனைவரும் பெறும் வகையிலான பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் அளப்பரிய முன்னேற்றம் கண்டு, ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

இந்த ஆண்டு உலகத்தையே கொரோனா வைரஸ் தொற்று புரட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறது. இந்நோய் தொற்றிலிருந்து தமிழ்நாட்டு மக்களை மீட்பதற்கு சரியான வழிமுறைகளை கடைபிடித்து, உங்களின் மக்கள் நல அரசு நேர்மையுடனும், உண்மையுடனும் செயல்பட்டு, பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து போர்க்கால அடிப்படையில் எடுத்து வருகிறது. குறிப்பாக, நாட்டிலேயே நாளொன்றுக்கு பரிசோதனை செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையும், இதுவரை பரிசோதனை செய்யப்பட்ட மொத்த நபர்களின் எண்ணிக்கையும் தமிழ்நாட்டில்தான் அதிகம். இதனால், விலை மதிக்க முடியாத மனித உயிர்களை நாம் காப்பாற்றியுள்ளோம். எனவேதான் தமிழ்நாட்டில், நோயிலிருந்து குணமடைந்து வீடு திரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும், நோயினால் இறந்தவர்களின் சதவிகிதம் மிகவும் குறைவாகவும் உள்ளது.

"விலகி இருங்கள், விழித்திருங்கள், வீட்டிலேயே இருங்கள்" எனும் எனது கனிவான வேண்டுகோளை ஏற்று, தமிழ்நாட்டு மக்கள் உரிய ஒத்துழைப்பை வழங்கி வருவதை நான் அறிவேன்.

ஊரடங்கு அமல்படுத்தியபோதும், அரசு விவசாய பணிகளுக்கும், சரக்கு போக்குவரத்திற்கும் அனுமதி அளித்து, அத்தியாவசிய பொருட்கள் தட்டுப்பாடு ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது.

- மக்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தி பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி மற்றும் கைகளை முறையாக கழுவுதல் ஆகியவற்றை உறுதிபடுத்தி வருகிறோம்.
- நமது மாநிலத்தில் இருந்து 4 இலட்சத்து 18 ஆயிரத்து 903 புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பத்திரமாக அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். மேலும், 12.08.2020 வரை 64,661 வெளிநாடு வாழ் தமிழர்களை "வந்தே பாரத் மற்றும் சமுத்திர சேது இயக்கத்தின்" மூலம் பத்திரமாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்துள்ளோம்.
- மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரக பஞ்சாயத்துகளில் வாழும் மக்களுக்காக இலவசமாக மறுமுறை உபயோகிக்க தகுந்த முகக் கவசங்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழ்நாடு முழுவதும், தொடர்ந்து வீடு, வீடாக காய்ச்சல் மற்றும் வைரஸ் தொற்றுகளுக்கான அறிகுறிகள் உள்ளவர்களை கண்டறிந்து, RTPCR சோதனை, தனிமைப்படுத்துதல், சிகிச்சை அளித்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகிறோம்.
- தற்போது மாநில அளவில் 1,29,000 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளன. மேலும் இந்த எண்ணிக்கையை அதிகப் படுத்துவதற்கும் ஆக்சிஜன் உடன் கூடிய படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கும் தனி கவனம் செலுத்தப்படுகிறது.
- மருத்துவ பணியாளர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த சுமார் 1,800 மருத்துவர்கள் 7,000 செவிலியர்கள் மற்றும் இதர மருத்துவசார் பணியாளர்கள் புதியதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- நவீன உயிர்காக்கும் மருந்துகள் கொள்முதல் செய்து, அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும்

முதல் தேசியக் கொடியை தயாரித்த தமிழர்

சுதந்திர இந்தியாவில் செங்கோட்டையில் ஏற்றிய முதல் தேசியக் கொடியை தயாரித்து தந்தவர் வேலூர் மாவட்டம், குடியாத்தத்தை சேர்ந்த வெங்கடாசல செட்டியார் என்கின்ற ஒரு தமிழர். மகாத்மா காந்தி அவர்களின் மேல் உள்ள பற்றின் காரணமாக பருத்தித் துணிகளை நெசவு செய்து சந்தைபடுத்தி சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார். அச்சமயம் சுதந்திரம் கிடைக்க சில தினங்களே இருக்கும் சமயத்தில் தேசிய கொடியை தயாரிக்கும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. 10 தினங்களில் 10 இலட்சம் கொடிகளை தயாரித்து கொடுத்த பெருமைக்குரியவராவார்.

அனுப்பப்பட்டுள்ளன. மருந்துகள், பரிசோதனை கருவிகள், N95 முகக்கவசங்கள், பாதுகாப்பு உடைகள், CT ஸ்கேன், X-ray இயந்திரங்கள், கபசுர குடிநீர், ஜிங்க் (Zinc) மற்றும் வைட்டமின் மாத்திரைகள் ஆகியவற்றை கொள்முதல் செய்து, மருத்துவமனைகளுக்கும், களப்பணியாளர்களுக்கும் போதுமான அளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், போதுமான அளவு கையிருப்பிலும் உள்ளன. தற்போது சித்த மருத்துவ முறை சிகிச்சையும் நோயாளிகளுக்கு சிறப்பாக அளிக்கப்பட்டுள்ளது.

- இதுவரை மாண்புமிகு அம்மாவின் அரசு, மாநில அரசின் நிதி ஆதாரத்தை கொண்டு கோவிட் நோய் தொற்று தடுப்பு மற்றும் நிவாரண பணிகளுக்காக சுமார் 6,650 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

- பொது முடக்க காலத்தில், உணவு பாதுகாப்பினை உறுதி செய்ய, ஏழைகள், சிறு தொழில் செய்வோர், சிறு வணிகம் செய்வோர் போன்ற 2.01 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல், மே, ஜூன், ஜூலை மாதங்களுக்கு அரிசி, சர்க்கரை, சமையல் எண்ணெய், பருப்பு போன்ற ரேசன் பொருட்களை விலையில்லாமல் வழங்கிய ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். மேலும், அவர்களுக்கு 1,000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கியதும் தமிழ்நாடு தான்.

- கட்டுமானத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு தொழிலாளர்கள் உள்ளிட்ட 17 அமைப்பு சாரா தொழிலாளர்கள், பட்டாசு தொழிலாளர்கள், நாட்டுப்புறக் கலைஞர்கள், திரைப்படத் தொழிலாளர்கள் உள்ளிட்ட 14 நல வாரிய தொழிலாளர்கள், தீப்பெட்டி தொழிலாளர்கள் என மொத்தம் 35.65 இலட்சம் தொழிலாளர்களுக்கு தலா 2,000 ரூபாய் ரொக்க நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் 13.35 இலட்சம் பேருக்கு தலா 1,000 ரூபாய் ரொக்க நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

- கொரோனா ஊரடங்கு காலத்தில் வெளி மாநில தொழிலாளர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், ஆதரவற்றோர் ஆகியோரின் பசிப் பிணி போக்கும் அட்சய பாத்திரமாக அம்மா உணவகங்கள், சிறப்பு முகாம்கள், சமூக உணவுக்

கூடங்கள் மூலம் தினமும் சுமார் 8 இலட்சம் மக்களுக்கு சூடான, சுவையான, சுகாதாரமான உணவு விலையில்லாமல் வழங்கப்பட்டது.

- தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் கீழ், ஊரகத் தொழில்களை மேம்படுத்தவும், வருமானத்தை பெருக்கவும் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 1 இலட்சத்து 40 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் வகையில், கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

- பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில், கொரோனா தொற்று நோய் சிகிச்சையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைக்கான செலவினை அரசே ஏற்கும். இந்த சலுகை அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதாரப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், உள்ளாட்சித்துறை, வருவாய் துறை, காவல் துறை, தீயணைப்புத்துறை, கூட்டுறவு, உணவு வழங்கல் துறை மற்றும் இதர அரசுத்துறை ஊழியர்கள் அனைவரும் இந்த இக்கட்டான காலத்தில் தன்னலம் பாராமல் அயராது களப்பணி ஆற்றி வருகின்றனர். அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தமிழ்நாட்டு மக்கள் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களை இன்று அழைத்து, விருதுகள் வழங்கி, மாண்புமிகு அம்மாவின் அரசு கௌரவப்படுத்த உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“நமது வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்”

என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப, நாம் அந்நியருக்கு எதிராக நடத்திய சுதந்திரப் போரில், ஒன்றிணைந்து போராடி எப்படி வெற்றி பெற்றோமோ, அதுபோல் மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா தொற்று நோய்க்கு எதிராக, பொதுமக்களின் ஒத்துழைப்புடன் போராடி வெல்லும் என்பதை உறுதிபட தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிக அளவில் தமிழ்நாட்டைச் சார்ந்த கிராமப்புற மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மாணவர்களின் மருத்துவர் ஆகும் கனவை நனவாக்கும் விதமாக, குறுகிய காலத்தில் இராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, அரியலூர், நாகப்பட்டினம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அவை அனைத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு ‘நீட் தேர்வை’ நடத்தக் கூடாது என்று கொள்கை அளவில் தொடர்ந்து எதிர்த்து வருகின்றது. கடந்த 3 ஆண்டுகளாக நீட் தேர்வினால், தமிழ்நாட்டிலுள்ள அரசு பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய மாணவர்கள், மருத்துவ படிப்புகளில் சேர்வது மிகவும் குறைந்து விட்டது என்பதை தெளிவாக ஆராய்ந்து, அதனை நிவர்த்தி செய்யும் விதமாக அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் மருத்துவர் ஆகும் இலட்சியத்தை நிறைவேற்றும் வகையில் அவர்களுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ படிப்பில் உள் ஒதுக்கீடாக 7.5 விழுக்காடு வழங்க மாண்புமிகு அம்மாவின் அரசு முடிவு செய்து, அதையே வரலாற்று சிறப்பு மிக்க சட்டமாக பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசியக் கொடியின் அளவு

தேசியக் கொடிக்கு என்று நீளம், அகலம் குறிப்பிட்ட வீதத்தில் இருத்தல் வேண்டும். நமது தேசியக் கொடியானது 3:2 என்ற வீதத்தில் இருத்தல் வேண்டும்.

கொடியின் நீள, அகல அளவு (மி.மீ)
பின்வரும் அளவுகளில் மட்டுமே தயாரிக்க வேண்டும்

1. 6300 x 4,200	2. 3600 x 2400	3. 2700 x 1800
4. 1800 x 1,200	5. 1350 x 900	6. 900 x 600
7. 450 x 300	8. 225 x 150	9. 150 x 100

“உழுவார் உலகத்தார்க்கு ஆணி”

என்று, உழவர்களே இந்த உலகத்திற்கு அச்சாணி என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அவர்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ஒரு விவசாயியின் தலைமையிலான அரசு. அந்த வகையில் விவசாயத்திற்கு எப்போதுமே முக்கியத்துவம் அளித்து வரும் அரசு, கடந்த 8 ஆண்டுகளில், ஆறு முறை உணவு தானிய உற்பத்தியில் 100 இலட்சம் மெட்ரிக் டன்னை தாண்டி சாதனை படைத்துள்ளது.

மாண்புமிகு அம்மாவும், அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும் டெல்டா விவசாயிகளின் உயிர் பிரச்சினையான காவேரி நதிநீர் பிரச்சினைக்கு பல்வேறு சட்டப் போராட்டங்கள் நடத்தி காவேரி மேலாண்மை ஆணையம் அமைத்து, தொடர்ந்து அவ்வாணையத்தின் மூலமாக காவேரியில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டி வருகிறது.

இவ்வாண்டு டெல்டா விவசாயிகள் குறுவை சாகுபடி செய்வதற்காக, குறித்த நேரத்தில், அதாவது ஜூன் 12 ஆம் தேதியே மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. மேலும், மேட்டூர் அணையில் தண்ணீரை திறப்பதற்கு முன்னரே கடைமடை வரை தூர் வாரப்பட்டு, வழக்கத்திற்கு மாறாக 10 நாட்களுக்கு முன்னரே தண்ணீர் கடைமடை வந்தடைந்தது. இதனால், டெல்டா பகுதியிலுள்ள 4 இலட்சத்து 11 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் தற்பொழுது குறுவை நெல் பயிர் சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்டா விவசாய பெருமக்களின் கோரிக்கையினை உணர்வுபூர்வமாக உணர்ந்தும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாட்டின் உணவு பாதுகாப்பினை உறுதிபடுத்திடவும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களில் உள்ள காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவித்து, குறுகிய காலத்திலேயே வரலாற்று சிறப்பு மிக்க சட்டம் இயற்றி, இப்பகுதிகளில் வேளாண்மைக்கு நேரடியாக பாதிப்பு தரும் எந்த தொழிற்சாலைகளும், திட்டங்களும் செயல்படுத்த முடியாது என்ற நிலையை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கியுள்ளது என்பதனை, விவசாயி என்ற முறையில் மிக்க பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் பெருமக்களுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும், மீனவ நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக சேலம் மாவட்டத்திலுள்ள தலைவாசல் என்ற இடத்தில் சுமார் 1,102 ஏக்கர் நிலப்பரப்பில், 1,023 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலகத்தரம் வாய்ந்த நவீன கால்நடை பூங்காவிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளாகத்தில் தமிழ்நாட்டில் ஐந்தாவது கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

தேனி மாவட்டம், வீரபாண்டி மற்றும் தப்புகுண்டு வருவாய் கிராமங்களில், புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்த ஆண்டு அமைக்க ஆணை வெளியிடப்பட்டு, பணிகள் துவக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையிலும் புதிதாக ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இவ்வாண்டே துவக்கப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள மீனவ சகோதாரர்களின் வாழ்வில் வளம் சேர்த்திட மேற்கொண்ட இத்தீவிர முயற்சிகளினால் 2019–2020ஆம் ஆண்டில் இந்தியாவின் கடல் மீன் உற்பத்தியில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது.

கிராமப்புற ஏழை, எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்திட, இரண்டாம் வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தியவர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். அவர்கள் காட்டிய வழியில் பீடுநடை போடும், மாண்புமிகு அம்மாவின் அரசு, ஆவின் நிறுவனத்தில் வரலாற்றுச் சாதனையாக இந்த ஆண்டு ஜூன் மாதம்

தேசியக் கொடியின் நிறங்கள் எதைக் கூறுகிறது

முதலில் உள்ள காவி நிறம் தியாகத்தையும், தைரியத்தையும் குறிக்கிறது. நடுவில் உள்ள வெண்மை நிறம் அமைதி, உண்மை, தூய்மையைக் குறிக்கிறது. மூன்றாவதாக உள்ள பச்சை நிறம் செழுமையையும், நம்பிக்கை, வீரத்தையும் குறிக்கிறது.

28ஆம் நாள் அன்று 39.1 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்துள்ளது.

"நீர் என்பது உயிருக்கு நேர்"
"ஊர் வளம் பெற, நீர் வளம் காப்போம்"

பருவமழை காலங்களில் கிடைக்கும் நீரை வீணாக்காமல் தேக்கி வைப்பதற்காக குடிமராமத்து திட்டத்தை விவசாயிகளின் பங்களிப்புடன் கடந்த நான்கு ஆண்டுகளில், 1,433 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,278 நீர்நிலைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோன்று, உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் உள்ள 1,315 நீர்நிலைகள் 811.68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், கடந்த மூன்றாண்டுகளில், மாண்புமிகு அம்மாவின் அரசு 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நதிகள், ஓடைகள் ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும், இதுபோன்று, ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 730.4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 31,834 சிறிய தடுப்பணைகளும் கட்டப்பட்டுள்ளன.

காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்திக்கடவு–அவினாசி திட்டம், தாமிரபரணி–கருமேனி ஆறு, நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டம் என பல்வேறு நீர்வள ஆதார திட்டங்களை, நிறைவேற்றி வரும் ஒரே அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு.

அண்டை மாநிலங்களுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு சுமுகமான உறவை பேணி வருவதால், சென்னை நகரின் குடிநீர் தேவைக்காக 8 டிஎம்சி கனஅடி கிருஷ்ணா நதிநீரை ஆந்திர மாநிலம் உடனடியாக விடுவித்தது. அதேபோல், கேரள மாநிலத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக பரம்பிகுளம்–ஆழியாறு, பாண்டியாறு–புன்னம்புழா திட்டங்களில் நிலவி வந்த பிரச்சினைகளுக்கு சுமூகமான தீர்வு காணப்படும் நிலை எட்டப்பட்டுள்ளது.

ஒரு நாடு வளம் பெற வேண்டுமென்றால், அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்கும் நோக்கத்தினை அடைய மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளினால்,

- இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செயல் திறன் தரக் குறியீட்டின்படி பள்ளிகளில் வசதிகளை வழங்குவதில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது.
- கொரோனா பொது முடக்கத்தால், பள்ளிகள் திறக்கப்படாத நிலையில் கூட, 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்களை வீட்டிலிருந்தே தொடர்ந்து கற்றுக் கொள்ள கல்வி தொலைக்காட்சி மூலமாக, காணொலிப் பாடங்கள் ஒலிபரப்பப் படுகின்றன. மேலும், 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டதுடன், அரசு வழங்கியுள்ள விலையில்லா மடிக்கணினிகளில் காணொலிப் பாடங்கள் பதிவிறக்கம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.
- உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் 49 சதவிகிதத்தை எட்டி, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது.
- சமீபத்தில் தேசிய தர நிர்ணயக் கட்டமைப்பு வெளியிட்ட ஆய்வறிக்கையில், உயர் கல்வி தரவரிசைப் பட்டியலில், அகில இந்திய அளவில் உள்ள முதல் 100 பல்கலைக்கழகங்களில், தமிழ்நாட்டைச் சார்ந்த 18 பல்கலைக்கழகங்களும், முதல் 100 பொறியியல் கல்லூரிகளில் தமிழ்நாட்டை சார்ந்த 18 பொறியியல் கல்லூரிகளும், முதல் 100 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 32 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இடம் பெற்று சாதனை படைத்துள்ளன.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஆகியோருக்கான 69 விழுக்காடு இடஒதுக்கீட்டிற்கு எந்தவிதமான இடையூறும் வராமல் இருப்பதற்காக, இந்த ஒதுக்கீட்டினை அரசியலமைப்பு சட்டம் ஒன்பதாவது பிரிவின் கீழ் கொண்டு சேர்த்தது சமூகநீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்கள்தான். பிற்படுத்தப்பட்டோர் சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்காக சமீபத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் மறுசீரமைப்பு செய்து, தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேபோன்று, சீர்மரபினர் நல வாரியத்தின் தலைவர், துணைத்தலைவர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு அவ்வாரியம் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த முயற்சியினால், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அகில இந்திய மருத்துவக் கல்வி ஒதுக்கீட்டில் சாதகமான தீர்ப்பினை பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.

சிறுபான்மையினருக்கு எப்போதும் அரணாக விளங்கும் மாண்புமிகு அம்மாவின் அரசு, அனைத்து மாவட்டங்களிலும், முஸ்லீம் மற்றும் கிருத்துவ மகளிர்

உதவும் சங்கங்களை உருவாக்கியுள்ளது. ஜெருசலம் மற்றும் ஹஜ் புனிதப் பயணம் ஆகியவற்றை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசு ஊக்குவித்து வருகிறது. தேவாலயங்கள் மற்றும் மசூதிகளுக்கு வழங்கப்படும் பழுதுபார்ப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியுதவி இவ்வாண்டு முதல் 5 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் கடந்த மூன்று ஆண்டுகளாக 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்து இந்த ஆண்டு, மேலும் 3,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து ஆதி திராவிட குடியிருப்புகளிலும் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

பெண்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு தொடர்ந்து ஊக்கமளிக்கும் வகையில் 2011ஆம் ஆண்டு முதல் இதுவரை அமைக்கப்பட்ட, 2 இலட்சத்து 20 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, 67 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மங்காப்புகழ் கொண்டு, தனது ஆளுமையால் சரித்திரத்தில் இடம் பெற்ற புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இல்லம், நினைவிடமாக மாற்ற நிலம் எடுப்புப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில், அதனை நிருவகிக்கவும், பராமரிக்கவும், அறநிறுவனம் (Foundation) ஒன்று எனது தலைமையில் நிறுவ ஒரு சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும், புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு மெரீனாவில் நினைவிடம் (Memorial) அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அது விரைவில் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர்களின் நாகரீக தொன்மையை உலகுக்கு பறைசாற்றும் கீழடியில் 12 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகம் அமைக்கும் பணிக்கு நான் சமீபத்தில் அடிக்கல் நாட்டியுள்ளேன். அப்பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, செங்கல்பட்டு ஆகிய 5 புதிய மாவட்டங்களை ஒரே ஆண்டில் தொடங்கிய பெருமை மாண்புமிகு அம்மாவின் அரசையே சாரும். நாகப்பட்டினம் மாவட்டத்தை பிரித்து புதிய மயிலாடுதுறை மாவட்டம் துவங்க பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன என்பதையும் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் 2011ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்கும்போது இருண்டு கிடந்த தமிழ்நாட்டை, தனது அயராத முயற்சியினால் பல்வேறு திட்டங்களை தீட்டி, அவற்றை நிறைவேற்றியதன் காரணமாக, இன்று தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள், 2016இல் வரலாற்று சிறப்புமிக்க வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்தவுடன், ஒவ்வொரு வீட்டு மின் நுகர்வோருக்கும் 100 யூனிட் மின்சாரத்தை இலவசமாக வழங்க ஆணையிட்டார்கள். இதன்மூலம் சுமார் 2.1 கோடி குடும்பங்களுக்கு மேல் பயன்பெற்று வருகின்றனர். குறிப்பாக, 100 யூனிட்டிற்குள் மின் நுகர்வு செய்யும் சுமார் 70 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இன்று வரை தொடர்ந்து விலையில்லா மின்சாரமே வழங்கப்பட்டு வருகிறது. இச்சலுகையை நிறைவேற்ற தமிழ்நாடு அரசு கடந்த 4 வருடங்களாக 11,512 கோடி ரூபாய் மானியமாக வழங்கி உள்ளது.

குடிசையில்லா தமிழ்நாட்டினை உருவாக்க, கடந்த 9 ஆண்டுகளில், சுமார் 2 இலட்சம் அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வீடுகள் 7,540 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட சீர்மிகு நகரத் திட்டத்தின் கீழ் 11 நகரங்களில், 10,451 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் பலகட்ட முன்னேற்ற நிலையில் உள்ளன.

ஒரு நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டுமானால், அதற்கு முக்கியமாக விளங்குவது காவல் துறையின் பணியாகும். குற்றங்கள், களவுகள் மற்றும் விபத்துகள் குறைந்து, சமூக விரோதிகளை சட்டத்தின் பிடியில் நிறுத்தி, பாதுகாப்பான அமைதியான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

கடந்த ஆண்டுகளில் இரண்டு முறை நடந்த உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலமாகவும், நான் கடந்த ஆண்டு இங்கிலாந்து, அமெரிக்கா, துபாய் போன்ற நாடுகளுக்கு நேரடியாகச் சென்று தொழில் முதலீட்டாளர்களை சந்தித்ததன் வாயிலாகவும், தொடர்ந்து தமிழ்நாடு புதிய முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. இம்முயற்சிகளால், கடந்த ஓராண்டில் மட்டும் தமிழ்நாட்டிற்கு 54 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான 107 திட்டங்கள் வந்துள்ளன. இதன் மூலம் 1 இலட்சத்து 54 ஆயிரத்து 849 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கொரோனா பாதிப்பிலிருந்து மீட்டெடுத்து, மறுகட்டமைப்பு செய்ய புகழ்பெற்ற வல்லுநரும், நமது முன்னாள் ரிசர்வ் வங்கி கவர்னருமான முனைவர். ரங்கராஜன் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவையும் மாண்புமிகு அம்மாவின் அரசு அமைத்துள்ளது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முனைந்து எடுத்து வரும் நடவடிக்கைகளின் காரணமாக, மும்பையைச் சேர்ந்த, ப்ராஜெக்ட்ஸ் டுடே (Projects Today) என்ற நிறுவனம், COVID காலத்திலும், அதாவது கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்களில் புதிய முதலீடுகளை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளதால், தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதலிடத்தினைப் பிடித்துள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

கொரோனா காலத்தில் மட்டும், இதுவரை மொத்தம் 41 புதிய தொழில் திட்டங்களை தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், தொழில் நிறுவனங்களுடன் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் 30 ஆயிரத்து 664 கோடி ரூபாய் முதலீடும், 67 ஆயிரத்து 212 நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பெருமளவிலுள்ள தொழில்களுக்கு, குறிப்பாக குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு ஊரடங்கினால் ஏற்பட்ட பாதிப்புகளை களைய, இதுவரை 7,043 கோடி ரூபாய் கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு, தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

எனவே, தமிழ்நாடு பொருளாதாரத்தில் தனது இயல்பு நிலையை வெகு விரைவில் அடைந்து, தொடர்ந்து முன்னிலையில் இருக்கும்.

“அம்மா வழியில் ஆட்சி, அனைத்து துறைகளிலும் வளர்ச்சி” என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் இந்த அரசு பல்வேறு தடைகளை தகர்த்தெறிந்து, ஒவ்வொரு துறையிலும் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பீடு நடைபோட்டு வருகிறது.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக தங்களது இன்னுயிரை ஈந்த தியாக செம்மல்களை சிறப்பிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் 16,000 ரூபாயிலிருந்து 17,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதையும், சுதந்திர போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் மற்றும் சிறப்பு ஊதியம் 8,000 ரூபாயிலிருந்து 8,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் முழு ஆரோக்கியத்துடனும், நலமும், மகிழ்ச்சியும் நிறைந்து வாழ்வதற்காக பொருளாதார, சமூக, சட்ட ரீதியாக உங்களின் அரசு, துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இது மக்களுக்கான அரசாக, மக்களுடன் என்றென்றும் இணைந்திருக்கும் என்பது உறுதி. உங்களின் அன்பையும், ஆதரவினையும் பெற்றுள்ள நான், தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அல்லும் பகலும் உங்களுக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பேன் என்று இந்த நன்னாளில் நான் மீண்டும் உறுதிபட கூறுகிறேன். இன்று கொரோனா வைரஸ் தொற்றினால் உலக மக்கள் அனைவரின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் தொற்றின் பிடியிலிருந்து அனைவரும் விரைவில் மீண்டு, இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப இந்நன்நாளில் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது சுதந்திர தின நல் வாழ்த்துகளை உரித்தாக்குகின்றேன்.

வாழ்க அண்ணா நாமம்! வளர்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் புகழ்! ஓங்குக புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கீர்த்தி! தொடர்க மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சி!

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!

நன்றி! வணக்கம்.

தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரத்தில் உள்ள 24 ஆரங்கள் எதை கூறுகிறது

வெள்ளை நிறத்தில் நடுவில் நீல நிறத்தில் அமைந்துள்ள 24 ஆரங்களைக் கொண்ட அசோகச் சக்கரம் 24 பண்புகளைக் குறிக்கிறது. அவை 1. அன்பு, 2. தைரியம், 3. பொறுமை, 4. அமைதி, 5. பெருந்தன்மை, 6. நன்மை, 7. விஸ்வாசம், 8. மென்மை, 9. சுயநலமின்மை, 10. சுயக் கட்டுப்பாடு, 11. சுய தியாகம், 12. உண்மை தன்மை, 13. நேர்மை, 14. நீதி, 15. கருணை, 16. நன்நடத்தை, 17. பணிவு, 18. பச்சாதாபம், 19. அனுதாபம், 20. உச்ச அறிவு, 21. உச்ச ஞானம், 22. உச்ச அறநெறி, 23. பொது நல பண்பை, 24. நம்பிக்கை என்பவையாகும்.

சுதந்திர தின விழாவில் விருதாளர்கள் பெற்ற விருது

தமிழ்நாடு அரசின் சார்பில் 15.08.2020 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் பின்வரும் விருதுகள், பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை விருதாளர்களுக்கு வழங்கி கௌரவித்தார்கள்.

'**டாக்டர் ஆ.பெ.ஜெ. அப்துல் கலாம் விருது**' ஆனந்தம் இளைஞர் அறக்கட்டளையின் நிறுவனர் திரு.ச.செல்வகுமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

'**துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது**' பெரம்பலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி செந்தமிழ் செல்வி, திருமதி முத்தம்மாள், திருமதி ஆனந்தவள்ளி ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

'**கோவிட்–19க்கான முதலமைச்சரின் சிறப்பு விருது**' ஜெனீவா, உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த முதன்மை ஆராய்ச்சியாளர், மருத்துவர் சௌமியா சுவாமிநாதன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

முதலமைச்சரின் நல் ஆளுமை விருதுகள்

- கருவூல கணக்குத் துறைக்கு மாநிலத்தின் நிதி, கருவூலம், மனிதவள மேலாண்மை மற்றும் ஓய்வூதிய மேலாண்மை ஆகிய பணிகளை கணினிமயமாக்கும் நோக்கோடு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை கருத்துருவாக்கியமைக்காக விருது வழங்கப்பட்டது.
- பெருநகர சென்னை மாநகராட்சி காய்ச்சல் சிகிச்சை முகாம்கள் நடத்தி கோவிட்–19 நோய்த் தொற்றின் சங்கிலியை உடைத்தற்காக விருது வழங்கப்பட்டது.
- வேளாண்மை, தோட்டக்கலை, மலைப் பயிர்கள் மற்றும் வேளாண் பொறியியல் துறைகளுக்கு சொட்டு நீர் பாசனம் மூலம் நீர் ஆதாரத்தினை பேணுவதற்கான புதுமையான உத்திகளை கையாண்டதன் மூலம் நுண்ணீர்ப் பாசனத்தில் நாட்டில் முதலிடத்தை தமிழ்நாடு பெறுவதற்கு உதவியதற்காக விருது வழங்கப்பட்டது.

நல் ஆளுமைக்கான பாராட்டுச் சான்றிதழ்கள்

- தமிழ்நாடு மருத்துவச் சேவைகள் கழகத்திற்கு கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கு மருந்துகள் எவ்வித தங்கு தடைகளுமின்றி கிடைக்கச் செய்வதற்கான வழிமுறைகள் மேற்கொண்டதற்காக இப்பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- தமிழ்நாடு காவல் துறையின் இணையவழி குற்றங்கள் தடுப்புப் பிரிவிற்கு கொரோனா தொற்று உறுதியான நபர்கள் குறித்து கிடைக்கப் பெற்ற விவரங்களை பகுப்பாய்வு செய்து அதன் அடிப்படையில் அவர்களுடன் தொடர்பில் இருந்த நபர்களை கண்டறிய கணினி மாதிரி உருவாக்கியமைக்காக இப்பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள்

சிறந்த தொண்டு நிறுவனத்திற்கான விருது – சென்னை, மயிலாப்பூரில் உள்ள சி.எஸ்.ஐ. காதுகேளாதோர் மேல்நிலைப்பள்ளி பெற்றது.

சிறந்த மருத்துவருக்கான விருது – சேலம், மருத்துவர் க. சியாமளா.

மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக வேலைவாய்ப்பு அளித்த சிறந்த தனியார் நிறுவனத்திற்கான விருது – ஈரோடு, சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

சிறந்த சமூகப் பணியாளர் விருது – திருச்சி, திரு.கி.சாந்தகுமார் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான விருது – சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்பட்டது.

சிறந்த சமூகப் பணியாளர் விருது (மகளிர் நலனுக்காக சிறப்பாகத் தொண்டாற்றியதற்காக) கோயம்புத்தூர் மாவட்டம், திருமதி ஜி.பி.கோதணவள்ளி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த தொண்டு நிறுவனம் விருது (மகளிர் நலனுக்காக சிறப்பாகத் தொண்டாற்றியதற்காக) கடலூர் மாவட்டம், கிராமப்புற கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டு மையம் (கிரீடு), முனைவர் வி.நடனசபாபதி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்காக முதலமைச்சர் விருதுகள்

சிறந்த மாநகராட்சியாக வேலூர் தேர்வு பெற்றது.

சிறந்த நகராட்சிக்கான முதல் பரிசு – விழுப்புரம் நகராட்சி,

இரண்டாம் பரிசு – கரூர் நகராட்சி,

மூன்றாம் பரிசு – கூத்தநல்லூர் நகராட்சி பெற்றது.

சிறந்த பேரூராட்சிகளுக்கான பரிசுகள்

முதல் பரிசு சேலம் மாவட்டம், வனவாசி பேரூராட்சியும், இரண்டாம் பரிசு தேனி மாவட்டம்,

வீரபாண்டி பேரூராட்சியும், மூன்றாம் பரிசு கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை பேரூராட்சியும் பெற்றன.

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள்

ஆண்கள் பிரிவில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எஸ். அருண்குமார், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ஆர். இராம்குமார், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.எஸ். அம்பேத்கர் மற்றும் பெண்கள் பிரிவில் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி மு.புவனேஸ்வரி ஆகியோர் பெற்றனர்.

கோவிட் 19 தடுப்பு பணிக்கான சிறப்பு பதக்கம்

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையில் சென்னை, அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் ராஜேந்திரன், விருதுநகர், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் உமா மகேஸ்வரி, சென்னை, அரும்பாக்கம், அரசு சித்தா மருத்துவமனையைச் சேர்ந்த சித்தா மருத்துவர் சதீஷ் குமார் ஆகியோர் பதக்கங்களை பெற்றனர்.

செவிலியர் பிரிவில் சென்னை, ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த செவிலியர் திருமதி என். ராமு தாய், சென்னை, அரசு ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையைச் சேர்ந்த செவிலியர் திருமதி கிரேஸ் எமையா, கோயம்புத்தூர், ஈ.எஸ்.ஐ.மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த செவிலியர் கண்காணிப்பாளர் (நிலை–III) திருமதி ஆதிலட்சுமி ஆகியோர் பதக்கங்களை பெற்றனர்.

மாநில சுகாதார ஆய்வகம், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரகத்தில் முனைவர் எஸ்.ராஜு, துணை இயக்குநர் அவர்களும், கோயம்புத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.முத்துக்குமார், சுகாதார ஆய்வாளர் அவர்களும், பழனி சுகாதார பகுதி மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம், திரு.ஜீவராஜ், ஆய்வக நுட்புநர் அவர்களும் பதக்கங்களைப் பெற்றனர்.

காவல் துறையில் திருச்சி, மணப்பாறை காவல் நிலையம், காவலர் திரு.எஸ்.சையித் அப்தாகீர், விழுப்புரம், அனந்தபுரம் காவல் நிலையம், காவல் உதவி ஆய்வாளர் திரு.டி.நரசிம்மஜோதி, சென்னை, தலைமைச் செயலக காலனி காவல் நிலையம், சென்னை பெருநகர மகளிர் காவல் ஆய்வாளர் திருமதி இ. ராஜேஸ்வரி ஆகியோர் பதக்கங்களைப் பெற்றனர்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையில் கன்னியாகுமரி, நாகர்கோவில் தீயணைப்பு மீட்புப் பணிகள் நிலையத்தை சேர்ந்த தீயணைப்போர் வாகன ஓட்டி திரு.ஐ.துரை ராபின், பெரம்பலூர், துறையூர் மீட்புப் பணிகள் நிலையத்தை சேர்ந்த தரம் உயர்த்தப்பட்ட முன்னணி தீயணைப்போர் திரு.எஸ்.பழனிசாமி, சென்னை, மணலி தீயணைப்போர் மீட்புப் பணிகள் நிலையத்தை சேர்ந்த முன்னணி தீயணைப்போர் திரு.எஸ்.கருணாநிதி, ஆகியோர் பதக்கங்களைப் பெற்றனர்.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் பேரூராட்சியைச் சேர்ந்த துப்புரவு ஆய்வாளர் திரு.எஸ்.ரகுபதி, கொடைக்கானல் நகராட்சி, துப்புரவு ஆய்வாளர், திரு.பி.பாண்டிச் செல்வம், சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்–8யை சேர்ந்த உதவி பொறியாளர், பிரிவு–102, திரு.எஸ்.கலையரசன், திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிக்குப்பம் பேரூராட்சி, தூய்மைப் பணியாளர் திரு.எம்.ஏசுதாஸ், சென்னை பெருநகர மாநகராட்சி, தூய்மைப் பணியாளர் திரு.ஈ.ஜெய்சங்கர், ஈரோடு மாநகராட்சி, தூய்மைப் பணியாளர் திரு.மா.சங்கர் ஆகியோர் பதக்கங்களைப் பெற்றனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் வட்டாட்சியர் திருமதி எஸ். ஜெயச்சித்ரா, சேலம் மாவட்டத்தில் மண்டல துணை வட்டாட்சியர் திருமதி கே. ஜெயந்தி, விருதுநகர் மாவட்டத்தில் கிராம நிருவாக அலுவலர் திரு.து.பிரத்விராஜ் ஆகியோர் பதக்கங்களைப் பெற்றனர்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் சென்னை, அடையாறு, சென்னை (தெற்கு) மண்டலம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பட்டியல் எழுத்தர் திரு.ஆர்.தியாகமூர்த்தி, சென்னை, சேப்பாக்கம், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலகத்தில் பட்டியல் எழுத்தர் திருமதி பி.ரமாமணி, காஞ்சிபுரம் மாவட்டம், விப்பேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பட்டியல் எழுத்தர் திரு.டி.தமிழ்செல்வன் ஆகியோர் பதக்கங்களைப் பெற்றனர்.

தொழில் துறை சார்பில் ரூ.2,368 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 24,870 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில், 2,368 கோடி ரூபாய் முதலீட்டில் 24,870 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், புதிதாக நிறுவப்படவுள்ள 8 நிறுவனங்களின் தொழிற் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். மேலும், ரூ.3,185 கோடி முதலீட்டில் 6,955 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள 11 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியையும் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக தொடர்ந்து திகழச் செய்யவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் காரணமாக, தொழில் முனைவோர்கள் மற்றும் பெரும் முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழ்நாடு எப்போதும் முன்னிலை வகித்து வருகிறது.

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில்,
தொழில் துறை சார்பில், 8 நிறுவனங்களின்
தொழிற் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும்,
11 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியையும்
துவக்கி வைத்தார்கள்.



தொடர்ந்து மேம்படுத்திடும் வகையில், 27.07.2020 அன்று 8 தொழில் திட்டங்களில், 5 திட்டங்களுக்கு நேரடியாகவும், 3 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

அடிக்கல் நாட்டப்பட்ட திட்டங்களின் விவரம்:

1) செங்கல்பட்டு மாவட்டம், பல்லாவரத்தில், 1,500 கோடி ரூபாய் முதலீட்டில், 23,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், CapitaLand நிறுவனத்தால் கட்டப்படும் International Tech Park Chennai, Radial Road தகவல் தொழில் நுட்ப பூங்கா திட்டம்.

2) கடலூர் மாவட்டம், சிப்காட் தொழிற்பூங்காவில், 350 கோடி ரூபாய் முதலீட்டில், 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், TATA Chemicals நிறுவனத்தின் சிலிக்கா உற்பத்தி திட்டம்.

3) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள மஹிந்திரா ஆரிஜின்ஸ் தொழிற்பூங்காவில், 105 கோடி ரூபாய் முதலீட்டில், 160 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த Nissei Electric நிறுவனத்தின் மின்சார மற்றும் மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம். (இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 26.09.2019 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது).

4) திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரியில் உள்ள மஹிந்திரா ஆரிஜின்ஸ் தொழிற் பூங்காவில், 100 கோடி ரூபாய் முதலீட்டில், 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டினைச் சேர்ந்த Usui Susira நிறுவனத்தின் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி திட்டம்.

5) செங்கல்பட்டு மாவட்டம், Mahindra World City தொழிற் பூங்காவில், 100 கோடி ரூபாய் முதலீட்டில், 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Dinex நிறுவனத்தின் Diesel Engine-களுக்கான Exhaust உற்பத்தி திட்டம். (இந்த திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 25.05.2020 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டது).

6) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 150 கோடி ரூபாய் முதலீட்டில், 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Steel Shoppe நிறுவனத்தின் வாகன தொழிற்சாலைகளுக்கான எஃகு பாகங்கள் உற்பத்தி திட்டம்.

7) கடலூர் மாவட்டம், சிப்காட் தொழிற்பூங்காவில், 47 கோடி ரூபாய் முதலீட்டில், 550 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், MRC Mills நிறுவனத்தின் Textiles processing திட்டம்.

8) விழுப்புரம் மாவட்டம், கம்பூர் கிராமத்தில், 16 கோடி ரூபாய் முதலீட்டில், 160 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Sri Raajarajeshwari Life Care நிறுவனத்தின் மருந்து மற்றும் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி திட்டம். இந்த நிறுவனம் COVID–19 நிவாரண மருந்துப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடவுள்ளது.

என மொத்தம் 8 திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்கு 2,368 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 24,870 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வானூர்தி தொழிற்பூங்காவில், டிட்கோ மற்றும் டைடல் நிறுவனங்களின் கூட்டு முயற்சியால், 250 கோடி ரூபாய் முதலீட்டில் அமையவுள்ள வானூர்தி உற்பத்தி சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு தேவையான உயர் கணினி மற்றும் பொறியியல் வடிவமைப்புக்கான AERO HUB உயர்நுட்ப தொழில் மையத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 3,185 கோடி ரூபாய் முதலீட்டில், 6,955 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் நிறுவப்பட்டுள்ள 11 தொழில் நிறுவனங்களின் வணிக உற்பத்தியை துவக்கி வைத்தார்கள். இந்த 11 திட்டங்களில், 8 திட்டங்கள் நேரடியாகவும், 3 திட்டங்கள் காணொலிக் காட்சி மூலமாகவும் துவக்கி வைக்கப்பட்டது.

துவக்கி வைக்கப்பட்ட திட்டங்களின் விவரம்:

1) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள CapitaLand தொழிற் பூங்காவில் 730 கோடி ரூபாய் முதலீட்டில் 875 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், அமெரிக்காவைச் சேர்ந்த TPI Composites நிறுவனத்தின் Wind blades உற்பத்தி திட்டம்.

2) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 608 கோடி ரூபாய் முதலீட்டில் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Glovis Hyundai நிறுவனத்தின் வாகன உதிரி பாகங்கள் Knitting / Packaging திட்டம்.

3) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீபெரும்புதூரில், 500 கோடி ரூபாய் முதலீட்டில் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த, Sojitz Motherson நிறுவனத்தின் தொழிற் பூங்கா திட்டம்.

4) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தில் 350 கோடி ரூபாய் முதலீட்டில் 625 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 2019ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்ட Rajapalayam Mills நிறுவனத்தின் Textile fabrics உற்பத்தி திட்டம்.

5) திருவள்ளூர் மாவட்டத்தில் 220 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Gulf Oil நிறுவனத்தின் Oil lubricants திட்டம்.

6) காஞ்சிபுரம் மாவட்டத்தில், 80 கோடி ரூபாய் முதலீட்டில் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், JMatadee நிறுவனத்தின், கிடங்கு திட்டம்.

7) செங்கல்பட்டு மாவட்டத்தில், 75 கோடி ரூபாய் முதலீட்டில் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Hibrow Healthcare நிறுவனத்தின், மருந்து மற்றும் மருத்துவப் பொருட்கள் உற்பத்தி திட்டம்.

8) செங்கல்பட்டு மாவட்டம், சிப்காட் சிறுசேரி தொழில் நுட்பப் பூங்காவில், 24 கோடி ரூபாய் முதலீட்டில் 330 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், TCS நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப சேவைகள் (Phase I) திட்டம்.

9) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் 451 கோடி ரூபாய் முதலீட்டில் 1,150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Mothi Spinners, Lucky Yarn Tex மற்றும் Lucky Weavess நிறுவனங்களின் நூல்கள் மற்றும் ஆடைகள் உற்பத்தி திட்டங்கள்.

10) திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள Indospace தொழிற்பூங்காவில், 100 கோடி ரூபாய் முதலீட்டில் 75 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Mahindra Steel Services நிறுவனத்தின் வாகன தொழிற்சாலைகளுக்கான எஃகு பாகங்கள் உற்பத்தி திட்டம்.

11) காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில், 47 கோடி ரூபாய் முதலீட்டில் 950 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Teemage Builders நிறுவனத்தின் கட்டுமான பொருட்கள் உற்பத்தி திட்டம்.

என மொத்தம் 11 திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்கு 3,185 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 6,955 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட 8 திட்டங்களில், 6 திட்டங்கள், 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட திட்டங்கள் ஆகும். அதேபோன்று, வணிக உற்பத்தி துவக்கி வைக்கப்பட்ட 11 திட்டங்களில், 2 திட்டங்கள் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலும், 8 திட்டங்கள் 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட திட்டங்கள் ஆகும்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல், 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. 27.07.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள 8 திட்டங்களையும் சேர்த்து, இதுவரை 81 திட்டங்கள், அதாவது 26.64% திட்டங்கள், தமது வணிக உற்பத்தியை தொடங்கியுள்ளன. மேலும், 191 திட்டங்கள், அதாவது 62.82% திட்டங்கள், பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆக, மொத்த திட்டங்களில் 89.46% (அதாவது 272/304) திட்டங்கள் செயல்பாட்டு நிலையில் உள்ளன.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு – 2015இல், 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 4,70,065 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. 27.07.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள 2 திட்டங்களையும் சேர்த்து, 44 திட்டங்கள் நிறைவு பெற்று வணிக உற்பத்தியை தொடங்கியுள்ளன. 27 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன. ஆக, மொத்த திட்டங்களில், 72% திட்டங்கள் (அதாவது 71/98) செயல்பாட்டு நிலையில் உள்ளன.

> **“உலக முதலீட்டாளர்கள் மாநாடு–2019இல், 3 இலட்சத்து 501 கோடி ரூபாய் முதலீடுகள் மற்றும் 10.50 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. 27.07.2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள 8 திட்டங்களையும் சேர்த்து, இதுவரை 81 திட்டங்கள், அதாவது 26.64% திட்டங்கள், தமது வணிக உற்பத்தியை தொடங்கியுள்ளன. மேலும், 191 திட்டங்கள், அதாவது 62.82% திட்டங்கள், பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.”**

2019–2020ஆம் ஆண்டிற்கான டிட்கோ மற்றும் சிப்காட் நிறுவனங்களின் இடைக்கால பங்கு ஈவுத்தொகை வழங்குதல்

2019–2020ஆம் ஆண்டிற்கான இடைக்கால பங்கு ஈவுத் தொகையாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) சார்பில் 37 கோடியே 3 இலட்சத்து 3 ஆயிரத்து 205 ரூபாய் மற்றும் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (சிப்காட்) சார்பில் 40 கோடி ரூபாய் பங்கு ஈவுத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார்கள். ❋

மலரும் மருந்தாகும்...

பவளமல்லியை நல்லெண்ணெயில் இட்டு காய்ச்சி ஒற்றைத் தலைவலிக்கு உபயோகிக்கலாம்.

தொழில் தொடங்குவதற்கான அனுமதியை “Single Window System” மூலம் குறிப்பிட்ட காலத்திற்குள், மிக விரைவாக அரசு வழங்குகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.08.2020, அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை அதிகமாக நிறுவ வேண்டுமென்பது மாண்புமிகு அம்மா அரசின் முதன்மையான கொள்கை ஆகும்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015ஆம் ஆண்டு சென்னையில் நடத்திய உலக முதலீட்டாளர் மாநாட்டினைத் தொடர்ந்து, 2019ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசும் சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாட்டை நடத்தி பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, புதிய தொழில்கள் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. இந்தக் கொரோனா தொற்று காலத்திலும்கூட, பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுடன் சுமார் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 40 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறோம். இதன்மூலம் சுமார் 67 ஆயிரம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம். இது ஒரு மிகப்பெரிய சாதனை. இந்தச் சோதனையான நேரத்தில் கூட, இந்தியாவிலேயே, அதிக முதலீட்டை ஈர்த்த மாநிலம் தமிழ்நாடுதான். அதேபோல், அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததும் தமிழ்நாடுதான்.

தொழில் நிறுவனங்களின் நிருவாகிகள் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தென்மாவட்டங்களுக்கு மேலும் அதிகமான தொழிற்சாலைகளை கொண்டு வரவேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். அரசின் விருப்பமும் அதுதான். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுதே தென்மாவட்டங்களுக்கென்று தனிச்சிறப்புத் திட்டங்களை அறிவித்து, அதன் வாயிலாக புதிய தொழில்கள் தொடங்குவதற்கு ஏற்பாடுகளை செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே, அம்மாவின் அரசும், தென்மாவட்டங்களில் புதிதாக

தொழில் தொடங்க விரும்பினால், தொழில் துறை செயலாளர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நிலத்தின் மதிப்பில் பாதியளவு மானியமாகக் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், தொழிற்சாலை அமைப்பதற்கும் மானியம் வழங்குகிறோம். தொழில் தொடங்குவதற்கான அனுமதியை Single Window System மூலம் எவ்விதத் தடையுமில்லாமல், குறிப்பிட்ட காலத்திற்குள், மிகவிரைவாக அரசு வழங்குகிறது. இதுபோல பல்வேறு வகைகளில் அரசு உதவி செய்கிறது. எனவே, எவ்வித சிரமமும் இல்லாமல் தொழில் தொடங்கலாம்.

தமிழ்நாட்டில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள், தங்கள் சொந்த மாநிலத்திற்கு திரும்பவேண்டும் என்று விண்ணப்பித்தவர்களை, அவர்களுடைய சொந்த மாநிலங்களுக்கு அரசின் செலவிலேயே இரயில் மூலம் அனுப்பி வைத்துள்ளோம். கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் காரணமாக தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் சென்ற வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழ்நாட்டில் பணிபுரிய விருப்பப்படுவதாக தொழில் நிறுவனத்தினர் தெரிவித்ததாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்ற உத்தரவும் அரசால் வழங்கப்பட்டு உள்ளது. அவ்வாறு வருகை தரும் வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் கொரோனா நோய்த் தொற்றுப் பரிசோதனை செய்து, positive என்றால், அரசால் உரிய சிகிச்சை அளிக்கப்படும், negative என்றால், நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று, அரசின் வழிகாட்டுதல்களின்படி பணியில் அமர்த்திக் கொள்ளலாம்.

இ–பாஸ் முறை எளிமையாக்கப்பட்டுள்ளது. இ–பாஸ் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதவாறு தெளிவான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. இங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம். அவர்களின் பெயர், முகவரி போன்ற விவரங்களை அளித்தால், மாவட்ட ஆட்சித்தலைவர் இ–பாஸ் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார். மாதம் ஒருமுறை அதை புதுப்பித்தால் போதும். அத்தியாவசியப் பணிகள் மேற்கொள்பவர்களுக்கு உடனடியாக இ–பாஸ் வழங்க ஏற்கெனவே ஒரு குழு இயங்கி வருகிறது. தமிழ்நாடு முழுவதும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதலாக ஒரு குழு அமைத்து, இரண்டு குழுக்கள் இயங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இ–பாஸ் வழங்குவதில் எந்தத் தடையும் கிடையாது. ஆனால், உண்மையான காரணங்களுக்காக மட்டும் முறைப்படி இ–பாஸ் பெற்றுச் செல்லலாம்.

போக்குவரத்து வசதியைப் பொறுத்தவரை, ஏற்கெனவே மண்டல அளவில் பொது போக்குவரத்து துவங்க வேண்டுமென்று தான் அரசு முடிவெடுத்து அறிவித்தோம். ஆனால், இப்பொழுது கொரோனா நோய்த் தொற்றை தடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். இது உயிர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. நாம் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்த காரணத்தினால் தான், இந்தியாவிலேயே கொரோனா தடுப்புப் பணிகளில் நாம் முதலிடம் வகித்துக் கொண்டிருக்கிறோம், இறப்பு சதவீதம் குறைந்திருக்கிறது, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அண்டை மாநிலங்களில் இப்பொழுது இறப்பு சதவீதம் அதிகரித்து வருகிறது. அந்த மாநிலங்களில் 25,000 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை மேற்கொண்டால், 10,000 நபர்களுக்கு கொரோனா நோய் அறிகுறி இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அப்படியில்லை. தமிழ்நாடு முழுவதும் ஒரு நாளைக்கு சுமார் 62,000 எண்ணிக்கையிலான கொரோனா வைரஸ் பரிசோதனை செய்வதில், 5,200 நபர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்படுகிறது. இதைப் படிப்படியாக குறைத்து, இயல்பு நிலை திரும்புவதற்குத் தான் அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிலருக்கு கொரோனா நோய்த் தொற்று வந்தால் கூட எந்தவித அறிகுறியும் தெரியாது. விலை மதிப்பில்லாத உயிரை காப்பாற்றுவது அரசினுடைய முதல் கடமை. அதனால் தான் நாங்கள் எச்சரிக்கையாக, படிப்படியாக தளர்வுகளைக் கொண்டுவந்து, இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும் என்பது தான் அரசின் நோக்கம். அதற்குத்தான் இந்தக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறோம். இது மக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு எடுக்கின்ற நடவடிக்கை. மக்களை துன்பப்படுத்துவதற்கு அல்ல.

அதேபோல, தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை பின்பற்றி பணியாற்றினால்தான் இந்த நோய்த் தொற்றிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். அதனால், அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை அனைத்து தொழில் நிறுவனங்களும் பின்பற்றி, சிறப்பான முறையில் தொழிற்சாலைகள் இயங்க வேண்டும். அரசின் அழைப்பை ஏற்று, வருகை தந்து, சிறப்பான கருத்துக்களை தெரிவித்தமைக்கு நன்றி கூறி, என்றைக்கும் எங்கள் அரசு உங்களுக்கு துணை நிற்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.08.2020 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, பொதுப்பணித் துறை மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.31.04 கோடி மதிப்பீட்டிலான 19 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.208.30 கோடி மதிப்பீட்டில் 8 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 07.08.2020 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி வி.எம்.ராஜலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஜி.கே.அருண் சுந்தர் தயாளன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை சார்பில் ரூ.15.86 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள்

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு பழுது நீக்குவதற்கு பயிற்சியளிக்க 53 மின்சார வாகனங்கள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், காணொலிக் காட்சி மூலம் கட்டடங்களை திறந்து வைத்தும், பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்க வாகனம் வழங்கும் திட்டத்தையும் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை சார்பில் 15 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆலத்தூர் மற்றும் சாத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் மற்றும் பயிற்சியாளர் விடுதிக் கட்டடங்கள், தாராபுரம், திருப்பூர் மற்றும் முதுகுளத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்பட்டுள்ள புதிய தொழிற்பிரிவுகளுக்கான கட்டடங்கள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள். மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு மின்சார வாகனங்களை இயக்குவதற்கும், பழுது நீக்குவதற்கும் பயிற்சியளிக்க 53 மின்சார வாகனங்கள் வழங்கும் திட்டத்தை துவக்கியும் வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கல்வி பயில விரும்பும் மாணாக்கர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யவும், தொழில்திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்குவதற்காகவும், புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை துவக்குதல், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், புதிய தொழிற்பிரிவுகளை தோற்றுவித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 4 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் மற்றும் பயிற்சியாளர்கள் விடுதிக் கட்டடம்; விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு 7 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள் மற்றும் பயிற்சியாளர்கள் விடுதிக் கட்டடம்;

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆபரேட்டர் அட்வான்ஸ்டு மெஷின் டூல்ஸ் என்ற புதிய தொழிற்பிரிவிற்கு 82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள்; திருப்பூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் டூல் ¬ டை மேக்கர் என்ற புதிய தொழிற்பிரிவிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள்; இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மெஷினிஸ்ட் என்ற புதிய தொழிற்பிரிவிற்கு 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பணிமனை மற்றும் வகுப்பறை கட்டடங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திற்கு 1 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;

என மொத்தம் 15 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறைக்கான கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

தமிழகத்தில் உள்ள 53 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மெக்கானிக் மோட்டார் வாகனம் தொழிற்பிரிவில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு மின்சார வாகனங்களை இயக்குவதற்கும், பழுது நீக்குவதற்கும் பயிற்சியளிக்க ஏதுவாக 5 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 53 மின்சார வாகனங்கள் வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

“தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில் தனியார் துறை நிறுவனங்களால் பணிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு இணையவழியாக பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையின், வேலைவாய்ப்பு பிரிவால் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட, **‘தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையம்’ (Tamil Nadu Private Job portal)** மூலமாக தனியார் துறை நிறுவனங்களால் பணிக்கு தெரிவு செய்யப்பட்ட 238 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இணையவழியாக 6 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

தனியார் துறையில் பணியாற்ற விரும்பும் இளைஞர்கள் இந்த இணையதளத்தில் நேரடியாக தங்கள் விவரங்களை பதிவு செய்து, தங்கள் கல்வித் தகுதி, பணி முன்அனுபவம் ஆகியவற்றிற்கு ஏற்ற பணிவாய்ப்புகளை பெறுவதற்கும், தனியார் துறையைச் சார்ந்த அனைத்து சிறு, குறு, நடுத்தர மற்றும் பெரு நிறுவனங்கள் தங்கள் நிறுவனத்தின் காலிப் பணியிடங்களை இவ்விணையதளத்தில் பதிவேற்றம் செய்து, தகுதியான நபர்களை தெரிவு செய்து பணி நியமனம் வழங்குவதற்கும் இவ்விணையதளம் வழிவகை செய்கிறது. **இச்சேவை வேலை அளிப்போர் மற்றும் வேலை நாடுநர்களுக்கு கட்டணம் ஏதுமின்றி தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது.**

“வளமிகு வளைகுடா” இறைவனால் கொடுக்கப்பட்ட வரம்

இயற்கை வளங்களை பாதுகாப்போம்! நம் எதிர்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்!

இந்திய கடல் வளம்

சுமார் 8,016 கி.மீ. நீளம் கொண்ட இந்திய கடற்கரை, கிழக்கு கடற்கரை பகுதி (வங்காள விரிகுடா), மேற்கு கடற்கரை பகுதி (அரபிக்கடல்) மற்றும் அந்தமான் நிக்கோபர் தீவுகள், இலட்சத்தீவுகள் உள்ளடங்கியது. இதில் 22.6 விழுக்காடு தீவுப் பகுதிகளைச் சார்ந்தது. இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் சுமார் 2 மில்லியன் கி.மீ. ஆகும்.

தமிழ்நாட்டின் கடல் வளம்

சுமார் 1,060 கி.மீ. நீளம் கொண்ட தமிழ்நாட்டின் கடற்கரை, இந்திய கடற்கரையின் மொத்த நீளத்தில் 17 விழுக்காடு ஆகும். இதில், வங்காள விரிகுடா 355 கி.மீ. அளவிலும், பாக் ஜலசந்தி, மன்னார் வளைகுடா மற்றும் அரபிக்கடல் ஆகியவை 625 கி.மீ அளவிலும் இடம் பெற்றுள்ளன. மணல்பாங்கான கடற்கரை, சதுப்பு நிலங்கள், சதுப்பு நிலக்காடுகள் மற்றும் பவளப்பாறைகள் ஆகியவை தமிழ்நாட்டில் இடம் பெற்றுள்ள முக்கிய வாழிடச் சூழல் வகைகளாகும். பவளப் பாறைகள் இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் உள்ளடங்கிய மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி பகுதிகளில் உள்ளன.

தமிழ்நாட்டில் 13 கடலோர மாவட்டங்கள் உள்ளன. இவை இயற்கை வளத்திற்கேற்ப நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1) சோழ மண்டலக் கடற்கரை, 2) பாக் ஜலசந்தி 3) மன்னார் வளைகுடா 4) மேற்குக் கடற்கரை

வளமிகு “மன்னார் வளைகுடா”

“மன்னார் வளைகுடா” இந்திய கிழக்குக் கடற்கரையில், பாம்பன் தீவிலிருந்து கன்னியாகுமரி முனை வரை பரவி காணப்படுகின்றது. இந்திய–இலங்கை கடற்கரைகளுக்கு இடையே இவ்வளைகுடாவின் தூரம் கிழக்கு மேற்காக ஏறத்தாழ 15 கடல் மைல்களாகும். தீர்க்க ரேகையில் 78° 08’ கிழக்கிலிருந்து 79° 30’ கிழக்கு வரையிலும், அட்ச ரேகை 8° 35’ வடக்கு முதல் 9° 25’ வடக்கு வரையிலும், மன்னார் வளைகுடா பரவி உள்ளது. இவ்வளைகுடா ஒரு தேசிய மற்றும் மாநில கடல் வளம் நிறைந்த இடமாக கருதப்படுகிறது. மன்னார் வளைகுடா நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வரம். இங்கு பல அரிய உயிரினங்கள் வாழ்வதால் இந்த அரிய உயிரினங்கள் அழிந்து விடாமல் பாதுகாப்பதற்காக **நமது இந்திய அரசும், தமிழ்நாடு அரசும் இதனை தேசிய பூங்காவாக அறிவித்துள்ளது. மன்னார் வளைகுடாவை தேசிய பூங்காவாக அறிவிப்பதற்கு மிக முக்கியமான விலங்கினமான பவளப்பாறைகள் இனம்தான். மீன்களின் உறைவிடம் பவளப்பாறைகளாகும்.**

இந்திய–இலங்கை கடற்கரைகளுக்கு இடையே இவ்வளைகுடா உள்ளது. இப்பகுதியில் 21 சிறு பவளப்பாறைத் தீவுகள் உள்ளன. இந்தியாவில் அமைக்கப்பட்ட முதல் தேசிய காப்பகம், மன்னார் வளைகுடா தேசிய கடல்வாழ் உயிரின தேசியக் காப்பகம் ஆகும். இக்காப்பகம் தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அமைந்த முதல் கடல்வள சேமப்பகுதி ஆகும். பல்வேறு விரும்பத்தகாத காரணிகளால் இக்கடல் பகுதிகளில் உள்ள எண்ணற்ற உயிரினங்களின் வாழ்விடங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் இப்பகுதி மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா கடல் வளம்

1980இல் ஏற்படுத்தப்பட்ட மன்னார் வளைகுடா தேசிய பூங்கா, இந்தியா மற்றும் தென் மற்றும் தென்கிழக்கு ஆசியா பகுதியில் ஏற்படுத்தப்பட்ட முதல்

கடல்சார் தேசிய பூங்காவாகும். இப்பூங்கா 560 சதுர கி.மீ. பரப்பில் அமைந்துள்ளது.

மன்னார் வளைகுடா உயிர்க்கோள மண்டலத்தில் 13 வகையான கடற்புல் இனங்கள் உள்ளன. இதில், என்கேலஸ் அக்ராய்ட்ஸ் என்ற தாழைப்புல் இனம், இவ்வுயிர்க்கோள மண்டலத்தில் மட்டுமே உள்ள கடற்புல் வகையாகும். இக்கடற்புற்கள் கடல் ஆமைகள் மற்றும் கடற்பசுக்கள் போன்ற இனங்களுக்கு உணவளிக்கும் முக்கிய வாழிடச் சூழலாகும். தீவுப் பகுதிகளில் 104 வகை கடின பவளப்பாறை இனங்கள் உள்ளன. இக்காப்பகத்தின் ஆழமில்லா கடல் பகுதிகளில் 147 வகையான கடல் பாசிகள் உள்ளன. 160 வகையான இடம் பெயர்ந்து செல்லக்கூடிய பறவை இனங்கள் இக்காப்பகத்தின் தீவுப் பகுதிகளை பல நேரங்களில் பயன்படுத்துகின்றன. இத்தீவுப் பகுதிகள் கடல் ஆமைகள் முட்டையிட உறைவிடம் அளிக்கின்றன.

இந்திய கடலோரப் பகுதிகளில் காணப்படும் 2,200 வகையான மீனினங்களில் 450 இனங்கள் அதாவது 20 விழுக்காடு மன்னார் வளைகுடாவில் தான் காணப்படுகிறது. மேலும், 79க்கும் மேற்பட்ட கணுக்காலிகள், 108 வகை புரையுடலி இனங்கள், 260 வகை மெல்லுடலி இனங்கள் மற்றும் 100 வகை முட்தோலிகள் இப்பகுதிகளில் இடம் பெற்றுள்ளன. இங்குள்ள குருசடை தீவு முதுகெலும்புள்ள மற்றும் முதுகெலும்பற்ற உயிரினங்களுக்கு பரிணாம இணைப்பாக விளங்கும் மற்றும் வாழும் புதைப்பொருள் என அழைக்கப்படும் ''பலனோகுளோஸஸ்'' என்ற அரிய உயிரினத்தின் தனிப்பட்ட உறைவிடமாக உள்ளது.

பவளப் பாறைகள்

மன்னார் வளைகுடாவின் சிறப்பு வாழிட வளங்கள் பவளக் பாறைகள் பவளப் பாறைகள். இவை கடலின் மழைக் காடுகள், பசுமை மாறாக் காடுகள் என்றழைக்கப்படுகின்றன. பவளப் பாறைகள் உயிர்க்கோளத்திற்கும் மனிதர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். இவை மிகவும் அழகாக இருக்கும். பவளப் பாறைகள் கடற்கரைக்குப் பாதுகாப்பைக் கொடுக்கின்றன. உணவுக்காகவும் மருந்திற்காகவும் பயன்படும் மீன்கள், சிப்பிகள் மற்றும் சங்குகள் போன்றவற்றிற்கு இவை புகலிடமாக இருக்கின்றன. பவளப் பாறைகள் கடலிலுள்ள வெப்ப மண்டல கடற்பகுதிகளில் காணப்படுகின்றன. இப்பாறைகள் ஒருவித சுண்ணாம்பு வகை உறைவிடத்தை உருவாக்கும் பிராணிகளால் ஆனது. இவை, ஆழம் குறைந்த கடலின் அடிப்பாகத்திலிருந்து தொடங்கி கடலின் மேல்மட்டம் வரை காணப்படுகிறது. கடலில் மேல் மட்டத்திலுள்ள பாறைகளில் மட்டுமே பவள உயிரிகள் காணப்படும். அதன் கீழே உள்ள பாறைகள் இறந்த பவள உயிரிகளின் கூட்டுப்பகுதிகளாகும். பவளப்பாறைகள் ஒரு வருடத்திற்கு சாதாரணமாக 1 மி.மீட்டரிலிருந்து 10 செ.மீ வரை வளரக்கூடியவை.

கடற்புற்கள்

கடற்புற்களானது கடலின் ஆழமற்ற இடங்கள் மற்றும் நதிமுகத்துவாரங்கள் ஆகியவற்றில் வளரும் பூக்கும் தாவரங்களாகும். உருவ அமைப்பில் கடற்புற்களானது நிலத்தில் வளரும் தாவரங்களுக்கு ஒத்ததாகும். கடற்புற்களின் வேரானது அவற்றை ஓரிடத்தில் தாங்கி நிறுத்துவது மட்டுமன்றி நிலத்திலுள்ள சத்துக்களை உறிஞ்சவும் பயன்படுகிறது. கடற்புற்களுக்கு பலமான தண்டுகளும் கிளைகளும் கிடையாது.

இந்தியாவில் மொத்தம் 14 கடற்புல் இனங்கள் உள்ளன. கடற்புற்களானது கடற்பசு மற்றும் கடல் ஆமை போன்றவற்றிற்குச் சிறந்த உணவாகும். மேலும், சிலவகை மீன்கள், கடல் குதிரைகள், இறால்கள் மற்றும் பல உயிரினங்கள் முட்டையிடுவற்கும் குஞ்சுகள் வளர்வதற்கும் கடற்புற்களைப் பயன்படுத்துகின்றன.

கடல்பாசிகள்

கடல் தாவர இனமான கடல் பாசிகளுக்கு வேர், இலை முதலிய குறிப்பிட்ட பாகங்கள் குறிப்பிட்ட வடிவத்தில் இருப்பதில்லை. இது பாறைகளிலும், பவளப் பாறைகளிலும் ஒட்டி உயிர் வாழ்கின்றது. இது அகார், கேராஜினான், அல்ஜின் ஆகிய வேதிய உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகிறது. 147 வகையான பாசி இனங்கள் இங்கு உயிர் வாழ்கின்றன.

சதுப்புநிலக் காடுகள்

நிலப்பரப்புக்கும் கடலுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரே வனப்பகுதி வகை சதுப்புநிலக் காடுகள் ஆகும். இவை உலகளவில் உள்ள வனம் மிகுந்த இயற்கை நிலைகளில் ஒன்றாகும். இவை கடலோர உயிர்ப்பல்வகைமையை அதிகரிக்கச் செய்வதோடு, வனப் பொருட்களைக் கொடுப்பதிலும், கடலோரத்தைப் பாதுகாப்பதிலும், கடலோர மீன்வள

ஆதாரத்திற்கும் உதவுகிறது. எந்த ஒரு வனப்பகுதிக்கும் இல்லாத சிறப்பம்சமாக கடுமையான சூழ்நிலைகளான உயரிய உப்புத் தன்மை, வெப்பநிலை, கடல் ஏற்ற இறக்கம், பலத்த காற்று மற்றும் சகதியான மற்றும் பிராண வாயுவற்ற மணலமைப்பு ஆகியவற்றை சமாளிக்கும் தகவமைப்பைப் பெற்றுள்ளது. இந்தியாவில் சதுப்புநிலக் காடுகள் 4,461 சதுர கி.மீ. வரை பரவியுள்ளன. இவை கிழக்கு கடற்கரைப் பகுதியில் (வங்காள விரிகுடா) 59 சதவிகிதமும் மேற்குக் கடற்கரைப் பகுதியில் (அரபிக்கடல்) 23 சதவிகிதமும் மற்றும் தீவுப் பகுதிகளில் (அந்தமான் நிக்கோபர் தீவுகள்) 18 சதவிகிதமும் பரவியுள்ளன.

மன்னார் வளைகுடாவின் அரிய உயிரின வளங்கள்

கடல் பசு

கடல்வாழ் பாலூட்டி வகைகளில் கடற்பசு மிகவும் மாறுபட்டது. கடல்வாழ் உயிரிகளில் மிகப் பெரிய தாவர உண்ணியான இவை புற்களை உண்ணும். இவை மிகவும் சாதுவான, அமைதியை நாடும் கடல் விலங்குகளுள் கடற்பசுவும் ஒன்றாகும். இந்திய கடற்கரையில் குறிப்பாக மண்டபம் பகுதிகளில் இவை அதிகம் காணப்படுகின்றன.

கடல் குதிரை

கடல் குதிரையின் தலையானது, குதிரையின் தலை போன்று அமைந்திருப்பதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. இவை ஆழம் குறைந்த கடலில் காணப்படும். வால் நீண்டு சுருண்டு காணப்படும். இந்த வாலின் மூலம், கடற்தாவரங்கள், கடற்பஞ்சு போன்றவற்றைப் பற்றிக்கொண்டு இருக்கும். கடற்புற்கள் அடந்த பகுதிகளில் சூழல் சுகாதாரம் பேணுவதில் கடல் குதிரைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதன் மூலம், ருசி மிகுந்த சாறு வகைகளும், மருத்துவப் பொருள்களும் தயாரிக்கின்றனர். குழந்தைகளுக்கு உண்டாகும் கக்குவான் இருமலுக்கு பயன்படுத்துகின்றனர். நெருப்பில் சுட்ட உலர்ந்த கடற்குதிரையை தேங்காய் எண்ணெயில் கலந்து வெட்டு காயங்களுக்கும் இப்பகுதி மக்கள் பயன்படுத்துகின்றனர்.



கடல் ஆமைகள்

கடல் ஆமைகளில் மாமிசம் மற்றும் முட்டைகள் உணவாக பயன்படுத்தப்படுகின்றன. ஆமைகளிலிருந்து பெறப்படும் எண்ணெயிலிருந்து மருந்துப் பொருட்கள், வாசனை திரவியங்கள் மற்றும் சோப்பு போன்ற பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றின் இரத்தம் மூல நோய்க்கு அருமருந்தாக கருதப்படுகிறது. ஆமைகளின் ஓடுகளிலிருந்து அலங்காரப் பொருட்களும் காலணிகளும் தயாரிக்கப்படுகின்றன.

கடல் அட்டை

பொதுவாக ஆழம் குறைந்த கடற்பகுதி, உப்பங்கழிகளில் காணப்படுகின்றன. இவை கடலிலே வாழ்கின்றன. சுமார் 3 மீ. ஆழம் முதல் 15 மீ. ஆழம் வரை காணப்படுகின்றது. சில இனங்கள் பவளப்பாறை உள்ள பகுதிகள் அல்லது மணற்பாங்கான கடல் அல்லது களிமண் நிறைந்த கடற்பகுதிகளில் காணப்படுகின்றன. இவை, கடலடியில் படியும் அனைத்து கழிவுகளையும் உட்கொண்டு, கடல் சூழலின் தூய்மையையும், சுகாதாரத்தையும் பேணிக்காப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

கடல் பஞ்சு

புரையுடலிகள் (Sponges) என்பது நீர் நிலைகளில், குறிப்பாக கடலின் அடிப்பகுதியில் வாழும் முதுகெலும்பற்ற உயிரினமாகும். இதன் உடல் பல செல்களால் ஆனது. ஒவ்வொரு செல்லும் தனித்து இயங்கும் தன்மையுடையது. ஆனால், திசு அல்லது உறுப்பு மண்டலமோ கிடையாது. குறிப்பாக நமக்கு இருப்பது போன்று உணவு மண்டலம், நரம்பு மண்டலம் எல்லாம் புரையுடலிகளில் கிடையாது. எல்லா வேலைகளையும் தனித்தனி செல்களே செய்து கொள்ளும். உடல் பஞ்சு போன்று இருப்பதால் இவற்றை கடற்பஞ்சு எனவும், கடல் நுரைகள் எனவும் அழைக்கின்றனர். கடற்பஞ்சுகள் அவற்றின் மேல்புறம் சிறுசிறு துளைகளிருப்பதைக் கொண்டு பொரிபெரா என்று

சொல்லப்படுகின்ற புரையுடலிகள் அல்லது துளையுடலிகள் என்ற தொகுப்பின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. இவைகள் சுமார் 7,000 இனங்களிருப்பதாகக் கண்டறிப்பட்டுள்ளது.

திமிங்கலம்

கடலில் வாழும் உயிரினங்களுள், திமிங்கலங்கள் மிகவும் பெரியவை. திமிங்கலங்கள் கடற்பாலூட்டிகள். வளிமண்டலக் காற்றை நம்மைப்போல் நுரையீரல் மூலம் சுவாசிக்கின்றன. திமிங்கலங்கள் பொதுவாக ஆழமான ஆர்டிக் மற்றும் அண்டார்டிக் கடற்பகுதிகளில் பரவியுள்ளன. பெரும்பாலான திமிங்கலங்கள் குளிர் காலங்களில் வெப்ப மண்டலக் கடற்பகுதிகளில் உணவைத் தேடியும் இடம் பெயர்கின்றன.

ஓங்கிகள்(டால்பின்கள்)

ஓங்கிகள் (டால்பின்கள்) கடற்கரைகளில் பெரும்பாலும் விரைந்து செல்லும் படகுகளின் முன்னும் பின்னும் நீந்தி வரும் நீர்வாழ் பாலூட்டியாகும். டால்பின்கள் மீன்கள் போன்று உடல் அமைப்புக் கொண்டிருப்பினும் இவற்றை நாம் மீன்கள் என அழைக்க முடியாது. சுவாசிப்பது மீன் போலன்றி நுரையீரல் மூலம் நடைபெறுவதாலும் அழகாக துள்ளிக் குதித்து நீந்தும் இவை கடலில் பெரும்பாலும் வாழ்வதாலும், குட்டிப்போட்டு பாலூட்டுவதாலும் இவற்றைப் பாலூட்டிகள் என அழைக்கலாம்.

வண்ண மீன்கள்

கடல் சூழலில் காணப்படும் கண்கவர் அழகிய உயிரினங்களில் வண்ண மீன்களும் ஒரு வகையாகும். பவளப்பாறை, அதனைச் சுற்றியுள்ள தாழ்வு நீர் பகுதிகளில் இந்த வண்ண மீன்கள் அதிகம் காணப்படுகின்றன. இவை கடல் சூழல் பாதுகாப்பிற்கும், மேம்பாட்டிற்கும் பல்வேறு இயற்கை செயற்பணிகளில் ஈடுபடுகின்றன. இவற்றின் அழகுக்காக இவற்றை அதிக அளவில் சேகரித்து விற்பனை செய்கின்றனர். பவளப்பாறை பகுதிகளில் கூடு வைத்து மீன் பிடிப்பதன் மூலம் இவை சேகரிக்கப்படுகின்றன.

முத்துச் சிப்பி

இந்தியாவில் முத்துச்சிப்பி வளம் சிறப்புற்று விளங்கும் மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் குஜராத் மாநிலங்கள் தான். மன்னார் வளைகுடாவில் கடற்கரை ஓரத்திலிருந்து 10 முதல் 20 கிலோ மீட்டர் தூரத்தில் 14 முதல் 24 மீ. வரை ஆழப் பகுதிகளில் முத்துச்சிப்பி படுக்கைகள் காணப்படுகின்றன. முத்துச்சிப்பிகள் ஒட்டி வளர மன்னார் வளைகுடாவில் காணப்படும் கடலடிப்பாறைகள் தகுந்த பகுதிகளாக உள்ளன. இப்பகுதியில் சேறு அதிகம் இல்லாததால் கடல் நீர் கலங்கவோ, சிப்பிகளின் வளர்ச்சி குறையவோ வழியில்லை. சிப்பிகளுக்குத் தேவையான இயற்கையுணவும் தாவர (நுண்ணுயிர் மிதவைகள்) உயிர்வளியும் இங்கு போதிய அளவில் உள்ளன. முத்தெடுப்புக் காலத்தில் தினமும் குறைந்தது 2 இலட்சம் முத்துச்சிப்பிகள் சேகரிக்கப்படும்.

கடல் பாம்புகள்

கடல் பாம்புகள் ஊர்வன இனத்தை சார்ந்தவை. இதன் வாழ்விடமாக கருதப்படுவது சதுப்பு நிலக் காடுகள். ஆழம் இல்லாத கடல் பகுதி மற்றும் தீவுகளை சுற்றிக் காணப்படுகின்றன. நாம் கடல் பாம்பை விஷத் தன்மை உடையதா அல்லது விஷத் தன்மை அற்றவையா என்பதை கண்டறிவது மிகவும் முக்கியமானதாகும். பாம்பின் வால் பகுதி தட்டையாக இருந்தால் அது விஷத் தன்மை உடைய பாம்பு. கூர்மையான வால் பகுதி இருந்தால் அது விஷத் தன்மை இல்லாத என கருதப்படுகிறது. மன்னார் வளைகுடாவில் பாம்பு தீண்டியதால் யாரும் இறந்ததாக எந்த தகவலும் இல்லை.

மன்னார் வளைகுடா ஒரு தேசிய மற்றும் மாநில கடல் வளம் நிறைந்த இடமாக கருதப்படுகிறது. மன்னார் வளைகுடா நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வரம். இவ்வளமிக்க மன்னார் வளைகுடாவை பாதுகாப்பது நமது தலையாய கடமை ஆகும்.

கூட்டு முயற்சியால் கடல் வளம் பேணிக் காப்போம்!

பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 30 சிறிய அதிநவீன எல்.இ.டி. வீடியோ வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்று குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 30 சிறிய அதிநவீன எல்.இ.டி. வீடியோ வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும், சென்னை பெருநகரில் 10 இலட்சம் இல்லங்களுக்கு மூன்று கட்டங்களாக 30 இலட்சம் இல்லங்களுக்கு கொரோனா, டெங்கு மற்றும் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கும் பணி, **கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, குணமடைந்து வீடு திரும்பிய 1 இலட்சம் நபர்களுக்கு கைப்பேசி மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து தெரிவித்தல்**, நேப்பியர் பாலம் மற்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மேம்பாலம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள மாறும் வண்ண விளக்குகள் ஆகியவற்றை துவக்கி வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் 38,198 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள்
14.08.2020 அன்று
தலைமைச் செயலகத்தில்,
வீடியோ வாகன சேவையை
கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்

பெருநகர சென்னை மாநகராட்சியில் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை மேற்கொள்ள 44 மாதிரி சேகரிக்கும் மையங்கள், 10 நடமாடும் மையங்கள் என மொத்தம் 54 மையங்கள் உள்ளன. இதுமட்டுமின்றி, வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட நபர்களின் இல்லங்களுக்கே சென்று கொரோனா தொற்று பரிசோதனைகள் செய்ய ஏதுவாக 50 ஆட்டோக்கள் மூலமாகவும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 8,21,000 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டுள்ளன. நாட்டிலேயே அதிக பரிசோதனைகள் மேற்கொண்ட பெருநகரங்களில், பெருநகர சென்னை மாநகராட்சி முதலிடம் வகிக்கிறது. சென்னையில் மட்டும் நாள்தோறும் 12,000 முதல் 14,000 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 51 கோவிட் பாதுகாப்பு மையங்களில் 18,614 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தொற்று பாதித்த நபர்களை மருத்துவமனை அல்லது கோவிட் பரிசோதனை மையங்களுக்கு அழைத்து செல்ல 289 வாகனங்கள் உள்ளன. சென்னை மாநகர குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களிடையே வைரஸ் தொற்று கண்டறியப்பட்டால், அவர்களோடு தொடர்பில் உள்ள தொற்றால் பாதிக்கப்படாதவர்களை தனிமைப்படுத்த ஏதுவாக 30,000 நபர்கள் தங்கக்கூடிய வகையில் மையங்கள் அனைத்து வசதிகளுடன் தயார்நிலையில் உள்ளன. தொற்று உள்ளவர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அவர்களுக்கு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக நாளொன்றிற்கு 500 முதல் 550 சிறப்பு காய்ச்சல் முகாம்கள் வைரஸ் தொற்று அதிகம் கண்டறியப்பட்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 31,702 சிறப்பு காய்ச்சல் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 17,86,970 நபர்கள் பயனடைந்துள்ளனர். வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நோயாளிகளை கைப்பேசியின் மூலமாக கண்காணிக்கும் திட்டம் மாநகராட்சியின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **சென்னை சமூக களப்பணித் திட்டம்** (Chennai Community Intervention Program) **என்ற சிறப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகள், துண்டு பிரசுரங்கள் போன்ற நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.**

அதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், கொரோனா வைரஸ் தொற்று குறித்து **பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மண்டலத்திற்கு 2 வாகனங்கள் வீதம், 15 மண்டலங்களுக்கு, மொத்தம் 30 சிறிய அதிநவீன எல்.இ.டி. வீடியோ வாகனங்களின் சேவைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.** இவ்வாகனங்களில், கொரோனா வைரஸ் தொற்று குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விழிப்புணர்வு உரை, சுகாதாரத் துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கொரோனா விழிப்புணர்வு குறும்படங்கள் போன்றவை ஒளிபரப்பப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்தவும், கொரோனா தொற்று பரிசோதனைகளை அதிகரிக்கவும், கொரோனா தொற்று அறிகுறிகளான காய்ச்சல், இருமல் மற்றும் சளி போன்றவை குறித்து கணக்கெடுக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 12,000 களப்பணியாளர்கள் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சியில் 10 இலட்சம் இல்லங்களில் வழங்கவுள்ள 10 இலட்சம் கொரோனா வைரஸ் தொற்று விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், பருவமழை துவங்கியுள்ள நிலையில் 10 இலட்சம் டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் மற்றும் பொழிகின்ற மழைநீரை வீணாக்காமல் சேகரிக்க பயன்படும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளின் அவசியம் குறித்த 10 இலட்சம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள், ஆகியவற்றை வழங்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் களப் பணியாளர்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு,





குணமடைந்து வீடு திரும்பிய 1 இலட்சம் நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்து தெரிவிக்கும் விதமாக, குணமடைந்து வீடு திரும்பியவர்களின் கைப்பேசி எண்கள் மூலமாக தனது வாழ்த்துகளை தெரிவித்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 37 இடங்களில் உள்ள மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளுக்கு மாறும் வண்ண மின்விளக்குகள் அமைக்கும் திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக நேப்பியர் பாலம் மற்றும் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை மேம்பாலம் ஆகியவற்றில் அமைக்கப்பட்டுள்ள மாறும் வண்ண விளக்குகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) 2019–2020ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் இடைக்கால ஈவுத் தொகையான 7 கோடியே 44 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்கள் வழங்கினார்.

தீரன் சின்னமலை

ஆகஸ்ட் 2 : தீரன் சின்னமலை நினைவு நாள்

எந்த ஒரு காரியத்தை எடுத்தாலும் அதில் திறம்படச் செய்வதில் தீரன் சின்னமலை மிகவும் கெட்டிக்காரர். திப்புவின் படையில் சேர்ந்த சில நாட்களில் தீரன் சின்னமலையும், அவரது சகோதரர்களும் மற்ற கொங்கு நாட்டு வீரர்களும் மிகுந்த படைப் பயிற்சியைப் பெற்றார்கள். இவர்களுடைய வீரத்தை கண்ட திப்பு, தீரன் சின்னமலையை படைத் தலைவராக ஆக்கினார். ஒரு சமயம் தீரன் சின்னமலை படை நடத்தும் திறனை கண்டு, திப்பு பாராட்டியதோடு நில்லாமல் சேனைத் தலைவர் பதவியையும் கொடுத்தார். தீரன் சின்னமலையின் தீரமிக்கச் செயல்களினால் திப்புவிற்க்குப் பல வெற்றிகள் குவிந்தன தீரன் சின்னமலைச் சேனைத் தலைவராக இருந்தாலும் தனது படை வீரர்களைத் தனது சகோதரர்களைப் போல பாவித்தார். அனைவருக்கும் படைப் பயிற்சியை அளித்ததோடு நாட்டுப்பற்றையும் ஊட்டினார். கொங்கு நாட்டு வீரர்களுக்கு தீரன் சின்னமலையின் மீதும் அவரது உறுதியான எண்ணத்தின் மீதும், அவர்களையும் அறியாமல் ஒருவிதப் பற்றும் பாசமும் ஏற்பட்டது. இது சமயம் மாலவல்லி என்ற இடத்தில் நடந்த போரில் ஆங்கிலப் படையை தீரன் சின்னமலையின் படை திணற அடித்து ஓட ஓட விரட்டியது.

தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.08.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கூட்டமைப்பு நிருவாகிகளுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்.

திண்டுக்கல் மாவட்டத்தின் பிரதானத் தொழில் வேளாண்மை. மேலும், இங்கு 41 நூற்பாலைகள் உள்ளதாகவும், அதில் சுமார் 18 ஆயிரம் நபர்கள் பணிபுரிவதாகவும் தொழில் துறை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. தொழில் கூட்டமைப்பு நிருவாகிகள் வைத்துள்ள பல்வேறு கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில், அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ள, தோல் பதனிடும்

தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற சிரமங்களைக் களைவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குறு, சிறு தொழில்கள் நடத்துவதிலுள்ள சிக்கல்கள் குறித்து கவனத்தில் கொள்ளப்படும். இ–பாஸ் வழங்குவதில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாதவாறு தெளிவான உத்தரவை அரசு வழங்கியுள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரிகின்ற அனைவருடைய பெயரையும், முகவரியையும் எழுதிக் கொடுத்தால் உடனடியாக அவர்களுக்கு மாவட்ட நிருவாகம் அடையாள அட்டை கொடுப்பார்கள், அதை காண்பித்து நீங்கள் தொழிற்சாலைகளுக்கு வரலாம். மாதம் ஒருமுறை அதை புதுப்பித்தால் போதும்.

சிறு தொழில் புரிபவர்களுக்கும் அதேபோலத்தான். இங்குள்ள தொழில் நிறுவனங்களில் பணிபுரிந்த வெளிமாநிலத் தொழிலாளர்கள் மீண்டும் தமிழகத்தில் பணியாற்ற விரும்பினால் அவர்களை தாராளமாக அழைத்து வரலாம். அவர்கள் குறித்த விவரங்களை அளித்தால், மாவட்ட ஆட்சித்தலைவர் இ–பாஸ் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வார்கள். மேலும், அவர்களுக்கு கொரோனா நோய்த் தொற்றுப் பரிசோதனை செய்து, positive என்றால், அரசால் சிகிச்சை அளிக்கப்படும், negative என்றால், நிறுவனத்திற்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு பணி வழங்கலாம். அதேபோல, இன்னும் பல்வேறு கோரிக்கைகள் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறீர்கள், அரசு உயரதிகாரிகளுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய அழைப்பை ஏற்று, இங்கு வருகை தந்த அனைத்து தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த உரிமையாளர்களுக்கும், தொழிற் கூட்டமைப்பைச் சேர்ந்த நிருவாகிகளுக்கும் அரசின் சார்பாக மனமார்ந்த, உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பகவத் கீதையின் போதனைகளை மக்கள் அனைவரும் வாழ்வில் பின்பற்றி மகிழ்வுடன் வாழ்ந்திட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
“ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி” திருநாள் வாழ்த்துச் செய்தி

“அறம் பிறழ்கின்ற போது நான் இவ்வுலகில் அவதரிப்பேன்” என்றுரைத்த பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த தினமான ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி திருநாளை கொண்டாடும் மக்கள் அனைவருக்கும் எனது உளம் கனிந்த ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

“கண்ணன் பிறந்தான் – எங்கள் கண்ணன் பிறந்தான்
இந்தக் காற்றதை யெட்டுத் திசையிலுங் கூறிடும்
திண்ணமுடையான் – மணி வண்ணமுடையான்
உயர் தேவர் தலைவன் புவிமிசைத் தோன்றினன்”

என்று மகாகவி பாரதியார் அவர்கள், தெய்வக் குழந்தையாம் கண்ணனின் பிறப்பை போற்றி பாடுகிறார். பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் அவதார தினமான ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி திருநாளன்று, மக்கள் தங்கள் இல்லங்களில் ஸ்ரீகிருஷ்ணருக்கு மிகவும் பிடித்த வெண்ணெய், தயிர், பழங்கள், பலகாரங்கள் போன்றவற்றை படைத்து, சின்னக் குழந்தைகளின் பிஞ்சு காலடிகளை மாவில் நனைத்து, இல்லம் நெடுக பதித்து, குழந்தை ஸ்ரீகிருஷ்ணனே தங்கள் இல்லத்திற்கு வந்ததாக பாவித்து மகிழ்ச்சியுடன் இறைவனை வழிபடுவார்கள்.

ஒப்பற்ற ஞான நூலான பகவத் கீதையை உலகிற்கு அருளிய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அவதரித்த இத்திருநாளில், பகவத் கீதையின் போதனைகளான அனைவரிடத்திலும் அன்பு செலுத்துதல், பலன் கருதாது கடமையை செய்தல், பற்றற்று இருத்தல், எளிமையாக அடக்கத்துடன் வாழ்தல் போன்றவற்றை மக்கள் அனைவரும் வாழ்வில் பின்பற்றி, மகிழ்வுடன் வாழ்ந்திட வேண்டும் என்று வாழ்த்தி, அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.08.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டிலான 18 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகளின் சார்பில் 8.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 42 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.08.2020 அன்று திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர்கள், திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு. விஜயலட்சுமி. இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



ஆகஸ்ட் 13 : சர்வதேச உடல் உறுப்பு தான தினம்

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து ஐந்தாவது முறையாக தமிழ்நாடு முதலிடம் வகித்து, மத்திய அரசின் விருதுகளை பெற்று வருகிறது

"உடல் உறுப்புகளை தானம் செய்வோம்! இறந்த பின்பும் உயிர் வாழ்வோம்!"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
"சர்வதேச உடல் உறுப்பு தான தின"
வாழ்த்துச் செய்தி

உடல் உறுப்பு தானம் குறித்து மக்களிடம் நிலவி வரும் அறியாமையை அகற்றி, விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உடல் உறுப்பு தானம் செய்திட ஊக்குவிக்கும் வகையிலும் ஆண்டுதோறும் ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாள் சர்வதேச உடல் உறுப்பு தான தினமாக அனுசரிக்கப்படுகிறது.

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழ்நாட்டில், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையம் (TRANSTAN) என்ற முன்னோடி அமைப்பை 12.12.2014 அன்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள். அதன்பயனாக, தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 1,382 கொடையாளர்களிடமிருந்து 8,163 உறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. உடல் உறுப்பு தானம் மற்றும் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து ஐந்தாவது முறையாக தமிழ்நாடு முதலிடம் வகித்து, மத்திய அரசின் விருதுகளை பெற்றுள்ளது.

ஏழை, எளிய மக்கள், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள, அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, உடல் உறுப்பு தானம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட, பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது. கடந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற உடல் உறுப்பு தான விழிப்புணர்வு மாரத்தான் போட்டியில் 12,000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டது ஆசிய சாதனை புத்தகத்தில் (Asia Book of Records) இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட நோயாளிகளின் நலனை கண்காணித்து, அறுவை சிகிச்சை செய்த மருத்துவமனைகளிலிருந்து அதற்கான விவரங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் (3 மாதங்கள், 6 மாதங்கள், 1 ஆண்டு) பெற்று, ஆய்வு செய்ய 10 ஆண்டுகளுக்கான தரவுகளை தேசிய அளவில் சேகரித்த முதல் மாநிலமாகவும் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் மூளைத் தண்டு மரணத்தின் மூலம் பெறப்படும் உறுப்புகளை வீணாக்காமல் மருத்துவ காரணங்களுக்காக பயன்படுத்த இயலாத உறுப்புகள் தவிர மற்ற அனைத்து உறுப்புகளையும் தேவையுள்ள, மரணத் தருவாயில் இருக்கும் நோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் விழுக்காடு பிற மாநிலங்களை விடவும், சர்வதேச அளவை விடவும் தமிழ்நாட்டில் தான் அதிகமாக உள்ளது.

மூளைத் தண்டுச் சாவு அடைந்தவரின் உறுப்புகளைத் தானம் அளிப்பதின் மூலம் 8 நபர்களுக்கு வாழ்வளிக்க முடியும். எனவே, உடல் உறுப்பு தானத்தின் உன்னதத்தை மக்கள் அனைவரும் மனதில் நிறுத்தி, உடல் உறுப்பு தானம் செய்திட முன்வர வேண்டும் என்று இத்தருணத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய குழுக்களுக்கு சமுதாய ஆழ்துளை கிணறு, பம்பு செட்டுகளுடன் பாசன வசதியை உருவாக்கித் தரும் திட்டம்

தமிழ்நாட்டில் பாசன நீர் ஆதாரங்களை புதிதாக உருவாக்கி அதன் மூலம் சாகுபடிப் பரப்பை அதிகரித்து, விவசாயிகள் அதிக வருமானம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளை ஒன்றிணைத்து விவசாய குழுக்களை உருவாக்கி, பம்பு செட்டுகளுடன் சமுதாய ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு, ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்படும் என மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவித்தார்கள். அதன்படி, முதற்கட்டமாக, 2020–2021ஆம் நிதி ஆண்டில் 14 மாவட்டங்களில் பாசன வசதி இல்லாத இடங்களில் சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகள் அடங்கிய 118 விவசாய குழுக்கள் பயன்பெறும் பொருட்டு, தமிழ்நாடு அரசு ரூ.10.19 கோடி நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்துவதற்கும், முதல் தவணையாக ரூ.6.11 கோடியை நிதி வழங்குவதற்குமான அரசாணையினை 10.07.2020 அன்று வெளியிட்டுள்ளது.

அதன்படி, அரியலூர், கடலூர், கிருஷ்ணகிரி, கன்னியாகுமரி, செங்கல்பட்டு, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, திருவள்ளூர், விருதுநகர், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய 14 மாவட்டங்களில் பொதுப்பணித் துறையினால் நிலத்தடி நீர் பாதுகாப்பான குறுவட்டம் என கண்டறியப்பட்ட 47 குறுவட்டங்களில் 1,233 சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகளை கண்டறிந்து, பாசன நீர் ஆதாரங்களை உருவாக்கி அவற்றின் மூலம் கிடைக்கும் நீரினை விவசாயிகளுக்கிடையே பங்கிட்டுப் பயன்பெறும் வகையில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், குழு உறுப்பினர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், குழாய் கிணறு /

ஆழ்துளை கிணறு / திறந்தவெளி கிணறு அமைத்தல், நீரினை இறைப்பதற்கு சூரிய சக்தி / மின் சக்தி மூலம் இயங்கக்கூடிய பம்பு செட்டுகள் அமைத்தல், பாசன நீரினை வீணாக்காமல் நேரடியாக வயலுக்கு அருகில் கொண்டு செல்வதற்கு பாசனநீர் குழாய்களை நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 90 மீட்டர் ஆழத்தில் குழாய் கிணறு அமைக்க அதிகபட்சமாக ரூ.3 இலட்சமும், 100 மீட்டர் ஆழத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க அதிகபட்சமாக ரூ.1.1 இலட்சமும், 20 மீட்டர் ஆழத்தில் திறந்தவெளி கிணறு அமைப்பதற்கு அதிகபட்சமாக ரூ.6.5 இலட்சமும், சூரிய சக்தி மூலம் இயங்கும் 5 குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டு அமைப்பதற்கு அதிகபட்சமாக ரூ.3.25 இலட்சமும், மின்சார சக்தி மூலம் இயங்கும் 5 குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் அமைப்பதற்கு அதிகபட்சமாக ரூ.75 ஆயிரமும், நீர் விநியோக குழாய்கள் நிறுவுவதற்கு அதிகபட்சமாக ரூ.20 ஆயிரமும் வழங்கப்படும். அந்தந்த பகுதியின் தேவைக்கேற்ப மேற்காணும் பாசன வசதிகள் உருவாக்கித் தரப்படும்.

கூடுதல் செலவுகளை குழுக்கள் ஏற்க வேண்டும்

நிருணயிக்கப்பட்ட ஆழத்திற்கு மேல் கிணறு அமைக்கவோ அல்லது கூடுதல் குதிரைத்திறன் கொண்ட பம்பு செட்டுகள் அமைக்கவோ குழு உறுப்பினர்கள் விரும்பினால், அதற்கான கூடுதல் செலவினை அக்குழுக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெற நிபந்தனைகள்

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் விவசாய குழுக்கள் கூட்டுறவு சங்க வழிமுறைகளின்படி தங்கள் குழுக்களை பதிவு செய்திருக்க வேண்டும். இத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் பாசன வசதியின் மூலம் கிடைக்கும் நீரினை முறையாக இவ்விவசாய குழு உறுப்பினர்கள் அனைவரும் சாகுபடிப் பரப்புக்கேற்றவாறு பங்கிட்டுக் கொள்ள வேண்டும். மேலும், பாசன அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் அதற்கான மின்சார செலவினை இவ்விவசாயக் குழு உறுப்பினர்களே பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும், இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் நிலங்களில் நீர் செறிவூட்டும் கட்டமைப்புகளை உருவாக்கி, நவீன நுண்ணீர்ப்பாசன அமைப்புகளை முழு மானியத்தில் அமைத்துத் தரப்படும். தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக, 2020–2021ஆம் ஆண்டில், 1,233 சிறு, குறு, ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் பெண் விவசாயிகள் ஒன்றிணைந்து சாகுபடியினை மேற்கொண்டு அவர்களின் பொருளாதார நிலை மேம்பட வழிவகை ஏற்பட்டுள்ளது. தேவைக்கேற்ப இத்திட்டத்தை இதர மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்துவதற்கு தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளை ஏற்று பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட உத்தரவு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 28.07.2020

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு கொடிவேரி விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால் பகுதியில் உள்ள 24,504 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் முதல் போக பாசனத்திற்கு 01.08.2020 முதல் 28.11.2020 வரை 120 நாட்களுக்கு 8,812.80 மி.கன அடி தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், ஈரோடு மாவட்டத்தில் கோபி, பவானி மற்றும் அந்தியூர் வட்டங்களில் உள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின்
அறிக்கை-31.07.2020

ஆலந்தூர் மெட்ரோ என்பது “அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ,” என்றும், சென்ட்ரல் மெட்ரோ என்பது “புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ” என்றும், புறநகர் பேருந்து நிலைய மெட்ரோ என்பது “புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம் மெட்ரோ” என்றும் பெயர் மாற்றம் செய்து ஆணை!

2003ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசால் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையில் வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான 23 கிலோ மீட்டர் தூர வழித் தடம் மற்றும் சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான 22 கிலோ மீட்டர் தூர வழித் தடம் என இரு வழித்தடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது. 18,380 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டத்தை முழுவீச்சில் செயல்படுத்துவதற்கு தேவையான மாநில அரசின் நிலங்கள் மற்றும் நிதி பங்களிப்பினை

கோப்பு படம்

வழங்கிய பெருமை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களையே சாரும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை செம்மையாக செயல்படுத்துவதற்காக, தொடர் ஆய்வுகளை நடத்தி, கீழ்க்கண்டவாறு பணிகளையும், பயணிகள் சேவைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் துவக்கி வைத்துள்ளார்கள்.

★ 29.06.2015 அன்று, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான 10.15 கிலோ மீட்டர் உயர்த்தப்பட்ட வழித்தடத்தில் பயணிகள் சேவை துவக்கப்பட்டு, கோயம்பேடு பணிமனையுடன், கோயம்பேடு, சென்னை புறநகர் பேருந்து நிலையம் (CMBT), அரும்பாக்கம், வடபழனி, அசோக் நகர், ஈக்காட்டுத்தாங்கல் மற்றும் ஆலந்தூர் ஆகிய 7 மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டன.

★ 23.07.2016 அன்று வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் – விம்கோ நகர் வரையிலான 3,770 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில், 9.05 கிலோ மீட்டர் நீளமுள்ள

கோப்பு படம்

சென்னை மெட்ரோ இரயிலின் முதல் கட்ட நீட்டிப்புத் திட்டத்திற்கான பணிகள் துவக்கப்பட்டன.

★ 21.09.2016 அன்று சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையிலான 8.6 கிலோ மீட்டர் நீளத்திலான வழித்தட பகுதி மற்றும் ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் 1.2 கிலோ மீட்டர் நீளத்திலான

கோப்பு படம்

வழித்தடப் பகுதிகளில் பயணிகள் சேவை துவக்கப்பட்டு, சென்னை விமான நிலையம், மீனம்பாக்கம், நங்கநல்லூர் சாலை, கிண்டி, சின்னமலை மற்றும் பரங்கிமலை ஆகிய 6 மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டன.

★ சென்னை பெருநகர் பகுதியில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கு 54 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்–I மற்றும் கட்டம்–Iஇன் நீட்டிப்பு வழித்தடங்கள்

கோப்பு படம்

போதாது என்பதால், கட்டம்–II க்கான விரிவான சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு செப்டம்பர் 2014இல் ஆணைகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு அம்மாவை தொடர்ந்து மாண்புமிகு அம்மாவின் அரசும்,

★ 14.05.2017 அன்று கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையிலான 7.4 கிலோ மீட்டர் நீளத்திலான முதல் சுரங்க வழித்தடப் பகுதியில் பயணிகள் சேவை துவக்கப்பட்டு, திருமங்கலம், அண்ணாநகர் கோபுரம், அண்ணாநகர் கிழக்கு, செனாய் நகர், பச்சையப்பன்

கோப்பு படம்

கல்லூரி, கீழ்ப்பாக்கம் மற்றும் நேரு பூங்கா ஆகிய 7 மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டன.

★ 25.05.2018 அன்று, நேரு பூங்கா முதல் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையம் வரையிலான 2.5 கிலோ மீட்டர் நீளத்திலான சுரங்க வழித்தடத்திலும், சின்னமலை முதல் ஏ.ஜி.–டி.எம்.எஸ் வரையிலான 4.35 கிலோ மீட்டர் நீளத்திலான சுரங்க வழித்தடத்திலும் பயணிகள் சேவை துவக்கப்பட்டு, எழும்பூர் மெட்ரோ, சென்ட்ரல் மெட்ரோ, சைதாப்பேட்டை மெட்ரோ, நந்தனம், தேனாம்பேட்டை

கோப்பு படம்

மற்றும் ஏ.ஜி.–டி.எம்.எஸ் ஆகிய 6 மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டன.

✶ 10.02.2019 அன்று திருப்பூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களால் காணொலிக் காட்சி மூலம் ஏ.ஜி.–டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான 10.9 கிலோ மீட்டர் நீளத்திலான சுரங்க வழித்தடத்தில் பயணிகள் சேவை துவக்கப்பட்டு, ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி, அரசினர் தோட்டம், சென்ட்ரல் மெட்ரோ, உயர்நீதிமன்றம், மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய 7 மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டன.

✶ கட்டம்–IIஇல் மாதவரம் முதல் சிப்காட் வரையிலும், கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரையிலும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான மூன்று வழித்தடங்கள் மற்றும் 128 மெட்ரோ நிலையங்களுடன் 61,843 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் மற்றும் நிதி பங்களிப்பு கோரப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம்–Iஇன் கீழ், ஆலந்தூர் மெட்ரோ, சென்ட்ரல் மெட்ரோ மற்றும் புறநகர் பேருந்து நிலையம் மெட்ரோ நிலையங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவும், பயணிகள் அதிக அளவில் பயன்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.மேற்கண்ட மெட்ரோ நிலையங்களின் பெயர்களை நமது மாநிலத்தின் மறைந்த முன்னாள் முதலமைச்சர்கள் அறிஞர் அண்ணா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மற்றும் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா ஆகியோரை சிறப்பிக்கும் வகையில் மாற்றி அமைக்கலாம் என்ற உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை ஏற்று,

சென்னை பன்னாட்டு விமான நிலையத்திற்கு அண்ணா பன்னாட்டு முனையம் என்று பெயரிட்டதைப் போல், **ஆலந்தூர் மெட்ரோ Alandur Metro என்பது "அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ" – "Arignar Anna Alandur Metro" என்றும் ;**

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு 'புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் மத்திய இரயில் நிலையம்' என்று பெயர் வைத்ததைப் போல **சென்ட்ரல் மெட்ரோ – Central Metro என்பது "புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ" – "Puratchi Thalaivar Dr.M.G.Ramachandran Central Metro" என்றும் ;**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ஆசியாவில் மிகப்பெரிய பேருந்து முனையமான சென்னை புறநகர் பேருந்து நிலையத்தையும், அங்கு அமைந்துள்ள மெட்ரோ நிலையத்தையும் திறந்து வைத்ததாலும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட எடுத்த பல்வேறு நடவடிக்கைகளை நினைவு கூறும் வகையில், **புறநகர் பேருந்து நிலைய மெட்ரோ (CMBT Metro) என்பது "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம் மெட்ரோ" "Puratchi Thalaivi Dr.J.Jayalalithaa CMBT Metro"**என்றும் பெயர் மாற்றங்கள் செய்து நான் ஆணையிட்டுள்ளேன்.

மலரும் மருந்தாகும்...

சாதாரணமாக சிறு குழந்தைகளுக்கு கணைச் சூட்டினால் மலக்கட்டு ஏற்படுவது உண்டு. தினமும் இரவில் படுக்கும் முன்னர் 3 அல்லது 4 மணி நேரம் நீரில் ஊறிய நாட்டு ரோஜா, இதழ்கள் நான்கை இரண்டு உலர்ந்த அங்கூர் திராட்சையுடன் சேர்த்துக் கொடுங்கள் குழந்தையின் மலக்கட்டு நீங்கும். 2 வயதுக்கு மேலான குழந்தைகளுக்கு ரோஜா இதழில் செய்யப்படும் குல்கந்து கொடுக்கலாம். பெரியவர்களுக்கு பன்னீர்ப்பூ லேகியம் தரலாம். இவையெல்லாம் மலக்கட்டு நீங்க உதவும்.

நாட்டு ரோஜா

50 செய்தி - மக்கள் தொடர்புத்துறை
தமிழரசு
1970-2020

அரசின் ஆக்கப்பணிகளை அழகுறக் காட்டிடும் காலச் சுவடு!

1970 முதல்... 50 ஆண்டுகளாக படிக்கவும். பாதுகாக்கவும். பயன்பெறவும் தனது அயரா பணிகளைச் செய்து வருகிறது

தமிழரசு

பன்னூறாண்டு நிலைத்திருக்கும் நூற்றாண்டு மலர்கள்

ஆங்கிலேயரிடமிருந்து நாம் சுதந்திரத்தை பெறுவதை குறிக்கும் அடையாளமாக தமிழ்நாட்டிலிருந்து திருவாவடுதுறை ஆதீனம் மூலம் செங்கோல் பெறப்பட்டு நேருவிடம் வழங்கப்பட்டது

1947 ஆகஸ்ட் 15 முறைப்படி நாம் எப்படி சுதந்திரம் பெற்றோம் தெரியுமா ? மவுண்ட்பேட்டன் நேருவை அழைத்து “உங்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறோம். அதை எப்படி கொடுப்பது” என்று கேட்க எதை அடையாளமாக வைத்து பெறுவது என்று நேருவுக்கு குழப்பமாக இருந்தது.

உடனே, மூதறிஞர் இராஜாஜி அவர்களை அணுகி “எனக்கு இந்த நடைமுறைகள் தெரியாது. அதனால் தாங்கள் தான் தீர்வுகூற வேண்டும்” என்றார்.

உடனே இராஜாஜி “கவலை வேண்டாம் எங்கள் தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது இராஜகுருவாக இருப்பவர் செங்கோலை புதியதாக பொறுப்பேற்கும் மன்னருக்கு கொடுத்து ஆட்சி மாற்றம் செய்வர். நாமும் அந்நியனின் கையால் சுதந்திரம் பெறுவதை விட குருமார்கள் கையால் செங்கோலை பெற்று ஆட்சி மாற்றம் அடையலாம்” என்றார்.

நேருவும் “நேரம் குறைவாக உள்ளது உடனே ஏற்பாட்டை செய்யுங்கள்” என்று கேட்டுக்கொண்டார்.

இராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத்தை தொடர்புக் கொண்டு இதைத் தெரிவிக்க அப்போது கடும் காய்ச்சலில் இருந்த ஆதீனம் குருமகா சன்னிதானம் அவர்கள் உடனே, முறையாக வெள்ளியில் செங்கோல் தயாரித்து தங்க முலாம் பூசி, இளைய ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து கூடவே ஓதுவார் மூர்த்திகளையும் (தேவாரத்தில் இருந்து பதிகம் பதினோரு பாடல்களை குறித்து கொடுத்து இந்த பாடல்களை பாடவேண்டும்.) உடன் அனுப்பி வைத்தார், திருவாவடுதுறை குருமகா சந்நிதானம்.

இராஜாஜி அனுப்பிய தனி விமானத்தில் டெல்லி போய் சேர்ந்தனர். அப்போது ஆயிரம் ஆண்டு அடிமைத்தளையில் இருந்து பாரதத்தின் விடுதலை பெறும் விழாவிற்காக எல்லோரும் காத்திருந்தனர்.

அந்த சுதந்திர வைபவ தினத்தில் மவுண்ட்பேட்டனிடம் இருந்து செங்கோலை குருமகா சன்னிதானம் திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகள் பெற்று, செங்கோலுக்கு புனிதநீர் தெளித்து ஓதுவார் மூர்த்திகள் *“வேயிறு தோளிபங்கன் என்று துவங்குகிற”* கோளறு பதிகம் தேவார திருப்பதிகத்தை பாட பதினோராவது பாடலின் கடைசி வரி *“அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே”* என்று பாடி முடிக்கும் போதுதான் சுவாமிகள் செங்கோலை நேருவிடத்தில் கொடுத்தார்.

அந்த நிகழ்வை தான் நாம் சுதந்திர தினமாக கொண்டாடுகிறோம்.

மலரும் மருந்தாகும்...

செம்பரத்தைப் பூ, இதயத்தைப் பலப்படுத்தக் கூடியது. இதய நோயாளிகள் நாட்டுச் செம்பரத்தை இதழ்களை இரண்டு அல்லது மூன்று எடுத்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிடலாம். வறண்ட கேசம் உடையவர்கள், செம்பரத்தைப் பூவை சிகைக்காயுடன் சேர்த்து அரைத்து தலைக்கு தேய்த்துக் குளிக்கலாம். கூந்தல் தைலங்கள் காய்ச்சும்போதும் செம்பரத்தைப் பூவை சேர்க்க வேண்டும்.

செம்பரத்தைப் பூ

கோவிட்- 19 காலத்திலும் அகில இந்திய அளவில் அதிகமான முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதலிடத்தினைப் பிடித்துள்ளது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் முன்னிலையில் 23.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில், 16 திட்டங்களில் 6 திட்டங்கள் நேரடியாகவும், 10 திட்டங்கள் காணொலிக்காட்சி மூலமாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் 23.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 16 தொழில் நிறுவனங்கள் தங்கள் புதிய முதலீட்டுத் திட்டங்களை ரூ.5,137 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 6,555 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்திடவும், தொழில்துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழச் செய்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதல்களின்படி,

27.05.2020 அன்று, தொழில்துறை சார்பில், ஜெர்மனி, ஃபின்லாந்து, தைவான், பிரான்ஸ், கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மேலும், புதிய முதலீடுகளை ஈர்க்க தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்நிலைக் குழு அமைத்தது, தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்திட ஏற்படுத்தப்பட்ட நாடுகளுக்கான அமைவுகள், அனுமதிகளை உடனுக்குடன் வழங்க ஒற்றைச் சாளர முறை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான உயர்நிலைக் குழு என பல வழிமுறைகள் ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன.

மும்பையைச் சேர்ந்த, ப்ராஜெக்ட்ஸ் டுடே (Projects Today) என்ற நிறுவனம், கோவிட் – 19 காலத்திலும், அதாவது கடந்த ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்களில், அகில இந்திய அளவில் அதிகமான முதலீடுகளை ஈர்த்ததன் மூலம், தமிழ்நாடு, மஹாராஷ்டிரா மாநிலத்தினை பின்னுக்குத் தள்ளி, முதலிடத்தினைப் பிடித்துள்ளது என்று தனது ஆய்வில் குறிப்பிட்டுள்ளது.

27.05.2020 அன்று, தொழில்துறை சார்பில், ஜெர்மனி, ஃபின்லாந்து, தைவான், பிரான்ஸ், கொரியா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 17 தொழில் நிறுவனங்களுடன் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் சுமார் 47,150 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் 20.07.2020 அன்று 8 தொழில் நிறுவனங்களுடன் 10,399 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 13,507 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

23.07.2020 அன்று 16 புதிய தொழில் திட்டங்களை, தமிழ்நாட்டில் துவங்குவதற்கான பின்வரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன. இத்திட்டங்கள் மூலம், 5,137 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 6,555 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

தற்போது நிலவிவரும் சூழ்நிலையின் காரணமாக, இந்த 16 திட்டங்களில், 6 திட்டங்களுக்கு நேரடியாகவும், 10 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இத்திட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு:

★ செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில், ரூ.2,300 கோடி முதலீட்டில், சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Adani Enterprises Limited நிறுவனத்தின், தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில், Super Auto Forge நிறுவனம், ரூ.500 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Forged steel and Aluminium parts உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில் உள்ள, Airflow Equipments நிறுவனம், ரூ.320 கோடி முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், போக்குவரத்து உபகரணங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ திருநெல்வேலி மாவட்டம், சிப்காட் கங்கை கொண்டான் தொழிற்பூங்காவில், ரூ.250 கோடி முதலீட்டில், சுமார் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ATC Tires நிறுவனத்தின் தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டத்திற்கான (Technology Enhancement Project) புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில், அமெரிக்காவைச் சேர்ந்த Visteon நிறுவனம், மோட்டார் வாகன மின் உதிரி பாகங்கள் உற்பத்தி திறனை அதிகரித்திட, ரூ.100 கோடி முதலீட்டு திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ திண்டுக்கல் மாவட்டத்தில், Top Anil Marketing நிறுவனம், ரூ.100 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 1,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சேமியா உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரியில், ரூ.750 கோடி முதலீட்டில், சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிங்கப்பூரை சேர்ந்த Princeton நிறுவனத்தின், தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ BPL-FTA Energies நிறுவனம், ரூ.500 கோடி முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்னனு வாகனத்திற்கான Lithium Ion Battery உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்நிறுவனம் காஞ்சிபுரம் அல்லது செய்யார் பகுதியில் நிலம் தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

★ ரூ.150 கோடி முதலீட்டில், சுமார் 2,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Srivaru Motors Pvt. Ltd நிறுவனத்தின் மின்சார பைக்குகள் (E-Bike) உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டு பயணத்தின்போது, வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக, "யாதும் ஊரே" திட்டத்தினை அமெரிக்காவில் துவங்கி வைத்தார்கள். அந்த திட்டத்தின் கீழ், அமெரிக்காவில் உள்ள அமெரிக்க தொழில் முனைவோர் சங்கத்தின் (American Tamil Entrepreneurs Association) மூலமாக, கீழ்க்கண்ட 7 தொழில்நுட்ப திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாக புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

★ அமெரிக்காவைச் சேர்ந்த Cloud Enablers நிறுவனம், ரூ.35 கோடி முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது Autonomous and Continuous Governance for the Enterprise Cloud திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த Tire1 Network Solutions Inc. நிறுவனம், ரூ.25 கோடி முதலீட்டில், சுமார் 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது Artificial Intelligence powered Food & Agri Supply Chain திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த SwirePay நிறுவனம், ரூ.23 கோடி முதலீட்டில், சுமார் 30 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது Digital Payments திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

எந்த வேலையைச் செய்யத் தனக்குத் தகுதி உள்ளது என்பதை அறிந்து அந்த வேலையைச் செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்வதே இன்பத்திற்கான முதல் திறவுகோல்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த Plethy நிறுவனம், ரூ.22 கோடி முதலீட்டில், சுமார் 20 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது Digital Health திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த Bitwise Academy நிறுவனம், ரூ.21 கோடி முதலீட்டில், சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது E-Learning திட்டத்தினை, கோயம்புத்தூரில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த, Radus Digital (for Harmoney Artificial Intelligence) நிறுவனம், ரூ.21 கோடி முதலீட்டில், சுமார் 100 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது Fintech & Fitness Applications திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த Continube நிறுவனம், ரூ.20 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 35 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தனது SaaS based Enterprise Risk Automation திட்டத்தினை, சென்னையில் நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

என மொத்தம், 16 திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்கு ரூ.5,137 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 6,555 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்தின் www.investingintamilnadu.com என்ற புதிய இணையதளத்தினை துவக்கி வைத்தார்கள். முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்பினை முற்றிலும் பூர்த்தி செய்திடும் வகையில், துறைசார் கவனம், மண்டல தொலைதொடர் திட்டம், ஏற்றுமதி மேம்பாடு போன்ற சிறப்பம்சங்களை உள்ளடக்கி, இந்த இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது.

செவ்வாழைப் பழம்

செவ்வாழையில் நியூட்டின் (Nutein), ஸியான்தினின் (zeaxanthin), பீட்டா கரோட்டின், வைட்டமின் ஏ ஆகிய சத்துக்கள் அதிகம். இவை கண்களின் செல்களில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைச் சரி செய்யக்கூடியவை. வேலை, படிப்பு எனப் பெரியவர்களிலிருந்து குழந்தைகள் வரை இன்றைக்கு கம்ப்யூட்டரையும், செல்போனையும் சார்ந்தே வாழ வேண்டியிருக்கிறது. தொடர்ந்து கம்ப்யூட்டர் பார்ப்பதால் உடனடியாக வருகிற பிரச்சினைகளான கண்கள் சிவந்துபோதல், கண்களில் எரிச்சல், நீர் வடிதல் போன்றவற்றை தடுக்கவும், வயதின் காரணமாகக் கண்களில் உள் அடுக்களில் இருக்கிற தசைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தடுக்கவும் உதவுகிறது.

நரம்பு மண்டலம் பலவீனமாக இருப்பவர்கள், தினமும் காலை 6 மணிக்கு ஒரு செவ்வாழைப்பழம் என 48 நாட்கள் சாப்பிட கை, கால் நடுக்கம், கை, கால் மரத்துப்போதல் போன்ற நரம்பு சம்பந்தப்பட்ட பலவீனங்கள் சரியாகும். நரம்பினுடைய கடைசிப் பகுதியில் ஏற்படக்கூடிய பாதிப்பினால் கைகளில் அனல்படுவது போல ஓர் உணர்வு ஏற்படும். இப்பிரச்சினையை சரி செய்யக்கூடிய சத்துக்கள் செவ்வாழைப் பழத்தில் இருக்கின்றன. இப்பழத்தை உண்பதால் உடலை இளமையாகவும், வலுவாகவும் வைக்கும்.

செவ்வாழையில் இருக்கிற பொட்டாசியம் இரத்த அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்கும். மூளையின் செயல்பாடு, இதயத்தின் செயல்பாடு, இரத்த ஓட்டம், இரத்த உற்பத்தி, சிறுநீரகத்தின் இயக்கம், குடலின் இயக்கம் ஆகியவற்றுக்குத் தேவையான சத்துகள் நிறைந்தது. செவ்வாழைப்பழத்தை காலையில் சாப்பிட வேண்டும். இந்த நேரத்தில் முடியவில்லையென்றால் பகல் 11 மணி அளவிலோ அல்லது மாலை 4 மணி அளவிலோ எடுத்துக் கொள்ளலாம். உணவு சாப்பிட்டவுடன் செவ்வாழையைச் சாப்பிட்டால் மந்தமாக உணர்வதுடன், இதனுடைய முழு சத்துகளும் நமக்குக் கிடைக்காது.

குடும்பம் என்பது நமக்காக பூமியில் ஏற்பாடு செய்யப்பட்ட சொர்க்கம்

ஒரு மனிதர் சாலை ஓரத்தில் ஒடிக் கொண்டிருந்தபோது தெரியாமல் இன்னொரு நபர் மீது இடித்துவிட்டார்.

ஐயோ! தெரியாமல் இடித்து விட்டேன் மன்னித்து விடுங்கள் என்று இவர் சொல்ல, பரவாயில்லை என்று அவர் சொல்ல இருவருமே கண்ணியத்துடனும் புன்னகையுடனும் விடைபெற்றார்கள். அவர்களிடையே மனஸ்தாபத்துக்கான காரணமில்லாமல் போயிற்று.

அன்று அவர் வீட்டுக்கு வந்தார். இரவு உணவு முடித்து திரும்புகையில் அவருடைய மகன் அவருக்குப் பின்னால் நின்றிருந்தான், கைகளைப் பின்னால் கட்டியபடி. தந்தை திரும்புகையில் அவனைத் தெரியாமல் இடித்து விட்டார்.

“வழியில் நிற்காதே.. ஓரமாய்ப் போ..”

அவருடைய வார்த்தையில் அனலடித்தது. சிறுவன் முகம் வாடிப்போய் விலகினான். அவனுடைய கண்களில் சோகத்தின் நதி முளைத்தது. அது இமை ஓரங்களை இடித்து தரையிறங்கத் துவங்கியது.

இரவு தூங்குகையில் அவர் மனதுக்குள் ஒரு சிந்தனை ஓடியது.

வழியில் யாரோ ஒருவரிடம் நாகரீகமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளத் தெரிந்த எனக்கு சொந்த மகனிடம் அப்படி நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்று மனதுக்குள் எண்ணினார்.

நேராக எழுந்து மகனின் படுக்கையறைக்குச் சென்றார்.

உள்ளே மகன் தூங்காமல் விசும்பிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. அவனருகில் மண்டியிட்ட தந்தை “என்னை மன்னித்துவிடு நான் உன்னிடம் அப்படிப் பேசியிருக்கக் கூடாது..” என்றார்.

சிறுவன் திரும்பினான்.

சிறுவனின் கண்களிலிருந்த கவலை சட்டென்று மறைந்தது. எழுந்து உட்கார்ந்தான். வேகமாக கட்டிலிலிருந்து கீழே குதித்து கட்டிலினடியில் வைத்திருந்த பூங்கொத்தை தந்தையின் கையில் வைத்தான்.

“இதென்ன ?” தந்தை வியந்தார்.

“இன்றைக்கு வெளியே நடந்து கொண்டிருந்தபோது இந்தப் பூக்களைப் பார்த்தேன். பல நிறங்களில் இருந்த பூக்களை எடுத்து உங்களுக்காக ஒரு மலர்க்கொத்து செய்தேன். அதிலும் குறிப்பாக உங்களுக்கு நீல நிறம் பிடிக்கும் என்பதற்காக அதை நிறைய சேகரித்தேன். அதை உங்களிடம் இரகசியமாகச் கொடுப்பதற்காகத் தான் உங்கள் பின்னால் வந்து நின்றேன்”

சிறுவன் சொல்ல தந்தை மனம் உடைந்தார்.

சிறுவனையும் மலர்களையும் ஒருசேர அணைத்த அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது.

ஒரு மழலையின் அன்பைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தான் இருந்ததற்காக அவர் வருந்தினார்.

குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.

அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது.

பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு வேளை, நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டுபிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.

ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.

வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படாவிட்டால், அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது இன்றைய தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது. எனவே தான் ஏழைகளால் மகிழ்ச்சியாய் இருக்க முடிந்த அளவுக்கு பணக்காரர்களால் நிம்மதியாக இருக்க முடிவதில்லை.

குடும்பங்களில் அதிக நேரம் செலவிடுங்கள்.

அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு அம்மா கிச்சன் மூலம் மூன்று வேளையும் சத்தான உணவு தயாரிக்கப்பட்டு, வழங்கப்படுவது பெருமைக்குரியது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் தலைமையில் 06.08.2020 அன்று, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

அனைவருக்கும் வணக்கம்.

உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இந்தியாவிலும், தமிழகத்திலும் பரவியுள்ளது. மதுரை மாவட்டத்தில் முதலில் குறைவாக இருந்தது. ஆனால், படிப்படியாக உயர்ந்து, மாவட்ட நிருவாகம் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக தற்போது கட்டுப்பாட்டிற்குள் உள்ளது.

உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ICMR மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற ஆலோசனைகளின் அடிப்படையில் அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று படிப்படியாகக் குறையத் தொடங்கியிருக்கிறது. **மதுரை மாவட்டத்தில் சற்று அதிகமாக இருந்ததை குறைப்பதற்கு சுகாதாரத்துறை, உள்ளாட்சி துறை மூலம் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக தற்போது குறைந்துள்ளது. மதுரை மாவட்டத்தில் நாள் ஒன்றிற்கு 124 காய்ச்சல் முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மாநகராட்சிப் பகுதிகளில் மட்டும் இதுவரை சுமார் 4,000 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன, புறநகரில் சுமார் 8,000 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டிருகின்றன.**

இதனால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை நாளொன்றுக்கு 400ஆக இருந்தது படிப்படியாகக் குறைந்து, தற்பொழுது 200க்கும் கீழ் உள்ளது. மதுரை மாநகரில் 35 கட்டுப்பாட்டுப் பகுதிகள், புறநகரில் 49 கட்டுப்பாட்டுப் பகுதிகள், என மொத்தம் 84 பகுதிகள் கட்டுப்பாட்டுப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டு தடுப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வந்தாலும், பொதுமக்களின் முழு ஒத்துழைப்பு மிக, மிக அவசியம். பொதுமக்களுடைய ஒத்துழைப்பிற்கேற்ப இந்த நோயின் தாக்கம் குறையும், நோய் பரவாமல் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். கொரோனா வைரஸ் நோய் அறிகுறி தென்பட்டவுடன், உடனடியாக மருத்துவமனைக்கு சென்று, பரிசோதனை செய்து, பாசிட்டிவ் என்றால், மருத்துவர்கள் உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்வார்கள். பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வீட்டிலுள்ளவர்களுக்கு காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இப்பணிகளை தொடர்ந்து மேற்கொண்ட காரணத்தினால்தான் மதுரை மாநகரத்திலும், புறநகர்ப் பகுதிகளும் இத்தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதற்கான அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை 3. இங்கு 1,518 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் 1,124 படுக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசின் சார்பாக 1,150 படுக்கை வசதிகளுடன் கூடிய கோவிட் கேர் சென்டர் மூன்றும், தனியார் சார்பாக 520 படுக்கை வசதிகளுடன் கூடிய கோவிட் கேர் சென்டர் ஒன்றும் உள்ளது. மேலும், தயார் நிலையில் தேர்வு செய்யப்பட்ட அரசு மருத்துவமனைகளில் இருக்கின்ற படுக்கை வசதிகள் 419. கோவிட் கேர் சென்டர் தயார் நிலையில் தேர்வு செய்யப்பட்டு வைக்கப்பட்ட படுக்கை வசதிகள் 900. தனியார் கோவிட் கேர் சென்டரில் 1,490. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உரிய சிகிச்சை அளிக்க போதிய படுக்கை வசதிகள் சுகாதாரத்துறை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மதுரை மாநகரைப் பொறுத்தவரை, நேற்றைய நிலவரப்படி, பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 11,593. குணமடைந்து வீடு திரும்பியவர்கள் எண்ணிக்கை 9,219. இறந்தவர்கள் எண்ணிக்கை 264. தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் எண்ணிக்கை 2,107. மதுரை மாவட்டத்தில் 05.08.2020 வரை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 1,63,492 நபர்கள்.

மதுரை சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ரூ.150 கோடி மதிப்பீட்டில் 350 படுக்கை வசதிகளுடன் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் தென் மாவட்டங்களின் தலைநகரமாக விளங்கி கொண்டிருக்கிறது. அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் இருக்கின்ற மக்களுக்கும், மதுரை மாவட்ட மக்களுக்கும் உயர்தர சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று விரும்பினார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் நேரடியாக வந்து எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தப் பணிகளும் விரைவில் தொடங்கவுள்ளது. ஜப்பான் பன்னாட்டு வங்கியிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகி, நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்ற செய்தி மத்திய அரசிடமிருந்து கிடைக்கப் பெற்றிருக்கிறது.

கேன்சரால் பாதிக்கப்பட்ட ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளில் அதிகக் கட்டணத்தில் சிகிச்சை பெற இயலாத காரணத்தால், குறைந்த கட்டணத்தில் உரிய சிகிச்சை அளிப்பதற்கு மதுரை அரசு மருத்துவமனையில் ரூ.20 கோடியில் உபகரணங்கள், ரூ.5 கோடியில் கட்டடம், என மொத்தம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புற்றுநோய் சிகிச்சை கட்டுப்படுத்தும் மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் அந்தப் பணி நிறைவு பெறும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு, மக்களின் அரசு என்பதற்கேற்ப, சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டம் உருவாக்கப்படும் என அறிவித்தேன். அதன்படி, **மதுரை மாவட்டத்தில் 21,600 மனுக்கள் பெறப்பட்டு, அதில் 12,360 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதில், 5,906 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது, 1,652 நபர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.**

அதேபோல, புதிய வட்டம் தோற்றுவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, 2018ஆம் ஆண்டு கள்ளிக்குடியில் புதிய வட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

திருமங்கலம் பகுதியில் வருவாய் கோட்டம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை அம்மா அரசு 2019ஆம் ஆண்டு நிறைவேற்றியிருக்கிறது. நூறு நாள் வேலைத் திட்டமும் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மதுரை மாவட்டத்தில் 10,956 சுயஉதவிக் குழுக்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இக்குழுக்களுக்கு சுமார் ரூ.150 கோடி கடனுதவி வழங்கப்பட்டு இருக்கிறது. உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் 9,329 மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனம் வழங்கப்பட்டிருக்கிறது. மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ.784 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது. வைகை அணையை ஆதாரமாகக்கொண்டு, உசிலம்பட்டி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.73 கோடி மதிப்பீட்டிலும், சோழவந்தான் பேரூராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ரூ.5.53 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளது. பெரியார் பேருந்து நிலையத்தை மேம்படுத்த ரூ.167 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழச் சந்தைகளை மேம்படுத்த ரூ.12 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. புராதனச் சின்னங்களை புனரமைக்க ரூ.42.65 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நான்கு மாசி வீதி சிறப்புச் சாலை அமைக்கப்பட்டு, சீரான குடிநீர் வழங்க ரூ.53.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் பல்லடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க ரூ.41.96 கோடி, வைகை ஆற்றினை மேம்படுத்த ரூ.84 கோடி, தமுக்கம் மைதானத்தில் கலாச்சார மையம் அமைக்க ரூ.47.7 கோடி, பாதாளச் சாக்கடை ஏற்படுத்துவதற்கு ரூ.275.8 கோடி, திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு ரூ.25.22 கோடி, தெருவிளக்குகள் அமைப்பதற்கு ரூ.30.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு லோயர் கேம்ப் பகுதியிலிருந்து மதுரை மாநகரின் 100 வார்டு பகுதிகளுக்கும் ரூ.1,250 கோடி மதிப்பீட்டில் இரும்புக் குழாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளின் மூலம் ஏற்கெனவே அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் அம்மாவின் அரசால் விலையில்லா அரிசி, சர்க்கரை, எண்ணெய், பருப்பு மற்றும் ரூ.1,000 வழங்கப்பட்டது. மதுரை மாநகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளுக்கு மீண்டும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. இந்தப் பகுதிலுள்ள அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு மீண்டும் தலா ரூ.1,000 வழங்கப்பட்டது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் ரூ.2,000 வழங்கப்பட்டுள்ளது. வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும் விலையில்லா அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன. இப்படி வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்கின்ற திட்டங்களையெல்லாம் அம்மாவின் அரசு நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை கே.புதூர் தொழிற்பேட்டை, கப்பலூர் தொழிற்பேட்டை மற்றும் கப்பலூர் மகளிர் தொழிற்பேட்டை என மூன்று தொழிற்பேட்டைகளில் 535 தொழிற்கூடங்கள் இயங்கி வருகின்றன. அங்கு 20,000 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மாண்புமிகு அம்மாவின் அரசின் உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம், ரூ.500 கோடி முதலீட்டில் TAFE நிறுவனம் டிராக்டர் உற்பத்தியை துவங்கியுள்ளது. எச்.சி.எல் நிறுவனம் ரூ.500 கோடி முதலீட்டில் 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் மென்பொருள் உற்பத்தி நிறுவனத்தை துவங்கியுள்ளது. Penguin Apparels நிறுவனம் ரூ.12 கோடி முதலீட்டில் ரெடிமேட் கார்மெண்ட்ஸ் உற்பத்தியை துவங்கியுள்ளது. Chainsys Software Exports Pvt. Ltd., நிறுவனம் ரூ.34 கோடி முதலீட்டில் மென்பொருள் உற்பத்தியைத் துவங்கியுள்ளது.

அவசரகால கூடுதல் கடன் திட்டத்தின் கீழ் ரூ.153.42 கோடி மதிப்பீட்டில் 10,951 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 73 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு Covid நிவாரணமாக ரூ.7.45 கோடி கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்கின்றன.

மலரும் மருந்தாகும்...

‘மெட்ராஸ் ஐ’ என்பது கண்ணோடு கண்ணாக வரும் நோய். இதற்கு ஒரே சிறப்பு மருந்து நந்தியாவட்டைப் பூ தான். இந்த மலரின் சாறை ஒரிருதுளி கண்ணில் விடலாம். அல்லது மலரையே கண்ணில் வைத்து கட்டிக் கொள்ளலாம். இதனால் மெட்ராஸ் ஐ நோயின் கண்ணெரிச்சல் காணாமல் போகும்.

நந்தியாவட்டைப் பூ

மேலும், 356.46 இலட்சம் மதிப்பீட்டில் கே.புதூர் தொழிற்பேட்டையில் திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாகவும், பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காகவும் இதுபோன்று பல தொழிற்சாலைகளை துவங்கி, ஆயிரக்கணக்கானவர்கள் பணிபுரிகின்ற சூழ்நிலையை அம்மாவின் அரசு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்தில், பல்வேறு தடுப்பணைகள் அறிவிக்கப்பட்டு பல திட்டங்கள் துவங்கப்பட்டிருக்கின்றன, இன்னும் பல திட்டங்கள் துவங்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. அனைத்து திட்டங்களும் நிறைவேறுகின்றபொழுது, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமிக்கப்பட்டு, கோடை காலத்தில் அனைவருக்கும் தேவையான நீர் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்திருக்கிறது.

அதேபோல், குடிமராமத்துத் திட்டம் என்ற அற்புதமான திட்டத்தின் மூலம், மதுரை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் உள்ள ஏரிகள், ஊரணிகள், குட்டைகள், குளங்களை தூர் வாரும் பணிகள் விவசாயிகளின் பங்களிப்போடு நிறைவேற்றப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரம், கோரிப்பாளையம் சந்திப்பில் மேம்பாலம் கட்டுவதற்கு ரூ.164.28 கோடி மதிப்பீட்டில் நில எடுப்புப் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல நகரின் முக்கிய பகுதியில் ரூ.47.50 கோடி மதிப்பீட்டில் மையத் தடுப்புகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து வாரணாசி – கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் உயர்த்தப்பட்ட நடைபாதை அமைக்கும் பணி 15(1) நோட்டீஸ் அரசின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. மதுரை விமான நிலைய சாலையை அகலப்படுத்துவதற்காக சீரமைக்கின்ற பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. செல்லூர் இரயில்வே மேம்பாலம் முதல் திண்டுக்கல் சாலை வரை இணைக்கும் கூடுதல் சாலை அமைக்கும் பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. வைகை ஆறு வடகரை பகுதி முதல் அண்ணா நகர் – விரகனூர் சுற்றுச் சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணி மற்றும் அணுகு சாலைகள் அமைத்தல், தடுப்பு சுவர் கட்டும் பணி மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணி ரூ.26.60 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இன்னும் பல மேம்பாலங்கள் கட்டுவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலிருந்து கப்பலூர் வரையில் ரூ.217 கோடி மதிப்பீட்டில் புறவழிச்சாலை அமைக்கும் பணி நிறைவு பெற்று, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சோழவந்தான்–வளையப்பட்டி சாலை, பரவை–மதுரை– மேலக்கால் சாலையில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்டும் பணி, துவரிமான் பக்கம் அணுகுசாலை அமைக்கும் பணி, பரவை பக்கம் அணுகுசாலை நில எடுப்புப்பணி முடிந்தவுடன், சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இப்படி பல்வேறு சாலைப் பணிகளும், உயர்மட்டப் பாலங்களும் கட்டுவதற்கு அம்மாவின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு, நுண்ணுயிர் பாசனத் திட்டத்தின் கீழ் ரூ.43 கோடியே 44 இலட்சம் செலவில் நுண்ணுயிர் பாசன இணைப்பு 34,441 ஏக்கர் பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. நடப்பாண்டில், ரூ.44 கோடியே 93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, உசிலம்பட்டி, திருமங்கலம், வாடிப்பட்டி மற்றும் மேலூர் விவசாயிகளின் நலனுக்காக, இந்தப் பகுதியிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் தலா 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் ரூ.5 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளன. பிரதான் மந்திரி கிசான் சம்மான் நிதித் திட்டத்தின் கீழ் இதுவரை 1,36,696 விவசாயிகளுக்கு ரூ.111 கோடி அளவிற்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்கன் படைப்புழுவால் பாதிக்கப்பட்ட 11,312 மக்காச்சோள விவசாயிகளின் நலன் காக்கும் பொருட்டு, அம்மாவின் அரசால் நிவாரணமாக ரூ.7 கோடியே 12 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கடந்த நான்காண்டுகளில் மட்டும் 79,470 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, இதுவரை 35,200 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.60 கோடி வழங்கப்பட்டுள்ளது. மல்லிகை விவசாயிகள் நலனுக்காக பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் மதுரையில் நிறுவப்பட உள்ளது.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, ரூ.289 கோடி செலவில் 573 ஏக்கர் நிலத்தில் துணைக்கோள் நகரம் அமைக்கும் பணி நடைபெற்று

வருகிறது. **இதில் 9,557 மனைகள், பள்ளிக்கூடம், பேருந்து நிலையம், சுகாதார மையம் மற்றும் சிறுவர் பூங்கா அமைப்பது போன்ற பணிகளும் நடைபெற்று வருகின்றன.** தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக, ரூ.427.22 கோடி செலவில் 4,740 வீடுகள் கட்டுவதற்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மதுரை மாவட்டத்தில் பூங்காநகர், ராஜாக்கூர், கருத்தபுளியம்பட்டி, ஆத்திக்குளம், கரடிக்கல், உச்சப்பட்டி தோப்பூர் மற்றும் மஞ்சள்மேடு ஆகிய பகுதிகளில் வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. அம்மாவின் அரசு மக்களுடைய அரசு, அதனால் மக்களுடைய திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. எனவே, வேளாண் பணி, புதிய, புதிய தொழிற்சாலைகள் கொண்டு வருவது போன்றவற்றில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்ட அமைச்சர் பெருமக்கள் இருவரும் இரவு, பகல் பாராமல் கொரோனா தடுப்புப் பணியில் மாவட்ட நிருவாகத்தோடு இணைந்து செயல்பட்டு வருகின்றார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால், **அம்மா கிச்சன் உருவாக்கப்பட்டு, சத்தான உணவுகள் தயாரிக்கப்பட்டு, மதுரை மாநகரில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கப்படுவது பெருமைக்குரியது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். முழுவதும் அவர்களுடைய சொந்தச் செலவில் இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறார்கள்.** கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்ட நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கான பணிகளை மேற்கொண்ட மாவட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருந்தபொழுது நம்முடைய நிருவாகிகள் எப்படி வேகமாக, துரிதமாக மக்களுக்கு நன்மை செய்தார்களோ, அதேபோல, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சியில் ஏழை, எளிய மக்கள் பாதிக்கப்படும் போது, எந்தவித அறிவிப்பும் இல்லாமல் தானாக முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கியமைக்கு அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இந்த கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அலுவலர்களுக்கும், நோய்ப் பரவல் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், பிற துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை அரசின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

விளாம்பழம்

விளாம்பழம் அதீத மருத்துவ குணங்கள் கொண்ட பழங்களில் ஒன்று. இதில் ஏராளமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருக்கின்றன. விளாம்பழத்தில் அதிக அளவில் இரும்புச் சத்தும், சுண்ணாம்புச் சத்தும் இருக்கின்றன. வைட்டமின் "ஏ" அதிக அளவில் நிறைந்திருக்கின்றன. விளாம்பழத்தில் அமிலத் தன்மையும், பழுக்காத காயில் துவர்ப்பு தன்மையும் இருக்கிறது.

விளாம்பழத்தில் வைட்டமின் பி2 மற்றும் கால்சியம் அதிகமாக இருப்பதால் பல் எலும்புகளை வலுவடைய செய்கிறது. தயிருடன் விளாங்காயை பச்சடிபோல் செய்து சாப்பிட்டால் வாய்ப்புண், அல்சர் குணமடையும், வெல்லத்துடன் விளாம்பழத்தை பிசறி சாப்பிட்டுவர, நரம்பு தளர்ச்சி விரைவில் குணமடையும். விளாம்பழத்துடன் பனங்கற்கண்டை கலந்து சாப்பிட பித்தக் கோளாறுகளால் ஏற்படும் வாந்தி, தலை சுற்றல் நீங்கும். தினமும் குழந்தைகளுக்கு கொடுத்துவர நினைவாற்றல் அதிகரிக்கும். விளா மர இலையை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து குடிக்க வாயுத் தொல்லை நீங்கும். விளாங்காயை அரைத்து மோரில் கலந்து குடிக்க நாள்பட்ட பேதி சரியாகும். விளா மரப் பட்டையைப் பொடித்து தண்ணீரில் போட்டு கொதிக்க வைக்கவும். இந்த கசாயத்தை வடிகட்டிக் குடிக்க, வறட்டு இருமல், மூச்சு இழுப்பு, வாய் கசப்பு போன்றவை குணமாகும்.

மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.08.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, பள்ளிக் கல்வித் துறை, பதிவுத் துறை, போக்குவரத்துத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.21.57 கோடி மதிப்பீட்டிலான 32 முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் ரூ.304.55 கோடி மதிப்பீட்டில் 31 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 06.08.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

சோர்வுக்கு மருந்தாகவும், அடுத்தநாள் வேலைக்கு வித்தாகவும் இருப்பது நிம்மதியான தூக்கம்

தூக்கம் மனிதனுக்கு அவசியத் தேவை. ஒருவருடைய ஆழ்ந்த தூக்கமே அவரை எப்போதும் விழிப்பு உடையவராக இருக்கச் செய்யும்.

ஆழ்ந்த தூக்கம்தான் மனிதனை ஆரோக்கியத்துடன் இருக்கச் செய்து, உடலில் வளர்சிதை மாற்றம் நன்கு நடை பெற்று, உடல் வளர்ச்சி அடைய பெரிதும் உதவுகிறது. அனைத்து உறுப்புகளும் புத்துணர்வும் பலமும் பெற ஏதுவாகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துகிறது. நரம்பு, தசை, எலும்பு சம்பந்தப்பட்ட மண்டலங்களை பலப்படுத்துகிறது. மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எது சரியில்லாமல் போனாலும் முதலில் பறிபோவது தூக்கம் தான்.

தூக்கம் என்பது மனிதர்களுக்கு மிகவும் அவசியமான ஒன்று. ஒரு நாளின் வெற்றி என்பது அதற்கு முந்தைய இரவில் நாம் எவ்வளவு நேரம் தூங்கினோம் என்பதை பொருத்தே அமைகிறது.

இரவு சரியாக தூங்கவில்லை என்றால் அடுத்த நாள் முழுவதும் பதற்றத்துடனும், கோபத்துடனும் பெரும்பாலானவர்களுக்கு அந்த நாள் செல்கிறது.

அன்றைய நாளின் சோர்வுக்கு மருந்தாகவும், அடுத்த நாள் வேலைக்கு விதையாகவும் இருப்பது நிம்மதியான தூக்கம் தான். தூக்கம் போனாலே நிம்மதி போய் விடும். ஆரோக்கியம் கெட்டுவிடும்.

இன்று இலட்சக்கணக்கானோர் தூக்கத்தைத் தொலைத்த வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். நிம்மதியான ஆழ்ந்த தூக்கத்திற்கு பல வழி முறைகள் உள்ளன. அவை,

★ இரவு தூக்கம் தான் நல்லது. பகலில் சாப்பிட்ட பிறகு 20 நிமிடங்களுக்குத் தூங்கலாம். ஆனால், நீண்ட நேரம் தூங்கக் கூடாது.

★ மனித ஆரோக்கியத்தையே ஆட்டிப் பார்க்கும் தூக்கத்தைப் பெற முறையான உணவும், உடற் பயிற்சியும் அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள்.

★ நிம்மதியான தூக்கத்தைப் பெற நினைப்பவர்கள், அமைதியான, காற்று வசதி நன்கு கொண்ட அறையில் தூங்க வேண்டும்.

★ மெத்தை மற்றும் தலையணைகள் சரியான நிலையில் இருக்க வேண்டும். காலையில் எழும் போது முதுகு வலி, கழுத்து வலி, உடல் வலி போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டால் உங்கள் படுக்கை சரியில்லை என அர்த்தம்.

★ சத்தம் இல்லாத சுற்றுச் சூழலில் தூங்குவதும் முக்கியம். விளக்கு வெளிச்சத்தில் தூங்காமல், இருள் நிறைந்த அறையில் தூங்க வேண்டியது அவசியம்.

★ இரவு நேரத்தில் அதிக நீர் அருந்துவது உங்கள் தூக்கத்தை கெடுக்க கூடியது. தாகத்தால் தூக்கம் கெடாமலிருக்க தூங்குவதற்கு முன்னரே போதுமான அளவு தண்ணீர் குடித்து விட வேண்டும்.

★ அதே நேரம் இரவில் உடலில் அதிகமாக சேர்ந்துள்ள சிறுநீரை வெளியேற்ற நீங்கள் எழ வேண்டி இருக்கும். உடலின் கடிகாரத்தை முதலில் சீராக்குங்கள். சாப்பிடுவது, படுக்கைக்குச் செல்வது, எழுவது என அனைத்தையும் குறிப்பிட்ட நேரத்தில் செய்வதை வழக்கமாக்குங்கள்.

நேரத்திலேயே உறங்கி நேரத்திலேயே எழும் பழக்கத்தை உருவாக்குங்கள். முறையான நேரப்படி, சரியான உணவுகளைத் தேர்ந்தெடுத்து சாப்பிட்டால் தூக்கமின்மை தொந்தரவு தீரும்.

மன அழுத்தத்தையும் குறைக்க வேண்டும். இல்லை என்றால் தூக்கமின்மை தீராத துன்பத்தை கொண்டு வந்து சேர்த்து விடும்.

மனித வாழ்வில் மூன்றில் ஒரு பகுதி தூக்கம் தான். நாம் பகல் நேரத்தில் சுறு சுறுப்பாக இருக்க உதவுவது , இரவில் நாம் மேற்கொள்ளும் ஆழமான தூக்கம் தான்.

உடலும், மனமும் ஒருங்கே ஓய்வு எடுத்தால் தான் சிறந்த தூக்கம் உண்டாகும். களைப்புற்ற உடல் உறுப்புகள் மற்றும் மனதிற்கு இயற்கை கொடுத்த ஓய்வு தான் தூக்கம்.

முறையான தூக்கத்தை மேற்கொண்டு ஆனந்தமாகவும், நல்ல ஆரோக்கியமாகவும் வாழலாம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூ.109.68 கோடி மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியில் 109 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 18 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை நீங்கலாக, தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்கில் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்கு திட்டமிடுதல், ஆய்வு, வடிவமைப்பு, செயலாக்கம் மற்றும் பயன்பாட்டுக்கு கொண்டு வருதல், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், குடிநீர் தரக் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, குடிநீர் ஆதாரங்களின் நீடித்த நிலைத்தன்மைக்கான செயல்பாடுகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2016–2017ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையில், நகர்ப்புர உள்ளாட்சிகளில் உள்ள குடியிருப்புகள் அனைத்திற்கும் உரிய அழுத்தத்துடன் குழாய்கள் மூலம் பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்குதல் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசின் முதன்மையான நோக்கமாகும். அதன்படி திருத்தணி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி நகராட்சியில் 109 கோடியே 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். இந்த குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தை செயல்படுத்தப்படுவதன் மூலம், திருத்தணி நகராட்சியில் வசிக்கும் சுமார் 52 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் திருவொற்றியூர் மண்டலம் – திருவொற்றியூர் மெயின் ரோடு, தண்டையார்பேட்டை மண்டலம் – வி.ஆர். நகர், திரு.வி.க. நகர் மண்டலம் – புளியந்தோப்பு மற்றும் ஜி.கே.எம். காலனி, பெருங்குடி மண்டலம் – மடிப்பாக்கம் ஆகிய இடங்களில் 6 கோடியே

38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையக் கட்டடங்கள்; மணலி மண்டலம் – மணலி விரைவு சாலையில் 9 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகள் கொண்ட நகர்ப்புர சமுதாய மையம்; இராயபுரம் மண்டலம் – எழும்பூர், வேப்பேரி மற்றும் என்.எஸ்.சி. போஸ் சாலை ஆகிய இடங்களில் 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 சிறப்பு காப்பகங்கள், என மொத்தம் 18 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சுமார் 210 சிறிய குளங்கள், ஏரிகள், நீரோடைகள், ஆகியவற்றில் உள்ள ஆகாயத் தாமரைகள் மற்றும் மிதக்கும் கழிவுகள் ஆகியவற்றை அகற்றி கொசு உற்பத்தியை தடுத்திட 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு மினி ஆம்பிபியன் உபகரணம், பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3.5 மீட்டருக்கும் குறைவான அகலமுள்ள கால்வாய்களில் உள்ள ஆகாயத் தாமரைகள், தாவரங்கள், மிதக்கும் பொருட்கள், கழிவுகள் ஆகியவற்றை அகற்ற 6 கோடியே 49 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ரோபோட்டிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் உபகரணம், பெரிய கால்வாய்களை தொய்வின்றி தூய்மைப்படுத்தி, சுற்றுப்புறத்தை மேம்படுத்தவும், கொசு உற்பத்தியை தடுக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டும், 7 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு ஆம்பிபியன் உபகரணம் ஆகிய 3 உபகரணங்களை பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உபகரணங்களுக்கான சாவிகளை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்கள்.

படமும்/ செய்தியும்

"அம்மா Covid-19 வீட்டுப் பராமரிப்பு" பெட்டகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு வீட்டில் தனிமைப்படுத்திக் கொள்ள அறிவுறுத்தப்பட்டவர்கள் மற்றும் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் அம்மா முழு உடல் பரிசோதனை மையம் மூலமாக "அம்மா Covid–19 வீட்டுப் பராமரிப்பு" சேவை திட்டத்தின் கீழ், சலுகை விலையான 2,500 ரூபாயில், 14 நாட்களுக்கான மருத்துவ தொகுப்புகள் அடங்கிய பெட்டகங்களை வழங்கிடும் அடையாளமாக, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் ஒருங்கிணைப்பு அலுவலருக்கு பெட்டகத்தை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மாவின் அரசு மும்மொழிக் கொள்கையினை தமிழ்நாட்டில் எப்போதும் அனுமதிக்காது, இருமொழிக் கொள்கையை மட்டுமே தொடர்ந்து கடைப்பிடிப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 03.08.2020

தமிழக மக்கள் கடந்த 80 ஆண்டு காலமாக இருமொழிக் கொள்கையில் உறுதியாக உள்ளனர். இது தொடர்பாக, பல காலகட்டங்களில், தங்களது உணர்வை பல்வேறு போராட்டங்கள் மூலமாக வெளிப்படுத்தியுள்ளனர்.

1963ஆம் ஆண்டைய அலுவல் மொழிகள் சட்டத்தின் 3ஆவது பிரிவில், இந்தியை அலுவல் மொழியாக பின்பற்றாத மாநிலங்களை பொறுத்த வரையில், மத்திய, மாநில அரசுகளுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் ஆங்கில மொழியில் தான் இருக்க வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்த போதும், 1965ஆம் ஆண்டில் இந்தியை அலுவல் மொழியாக மாற்ற அப்போதைய காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து, மாணவர்களும், மக்களும், தமிழ்நாட்டில் பல்வேறு போராட்டங்களை தீவிரமாக நடத்தினர்.

மக்களிடையே மும்மொழிக் கொள்கையைப் பற்றிய கவலைகள் நீங்காததால், பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் 23.01.1968 அன்று "தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றி விட்டு தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது" என்று வரலாறு போற்றத்தக்க தீர்மானத்தை நிறைவேற்றினார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் இந்தி மொழி, பாட திட்டத்தில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்களால் தெளிவுற உரைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையைச் செயல்படுத்துவதுதான் மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் உறுதியான கொள்கையாக இருந்தது.

அதன்படியே, அவர் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, அதாவது, 13.11.1986 அன்று, இருமொழிக் கொள்கையை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள், "இந்தி பேசாத மாநில மக்கள் மீது இந்தியை திணிக்கக் கூடாது என்பதிலும், அவ்வாறு எடுக்கப்படும் முயற்சியை எதிர்த்து முறியடிப்பதிலும் உறுதியாக உள்ளோம்" என்று சூளுரைத்தார். மேலும், இந்தியாவில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும், சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக அறிவிக்க வேண்டும் என்றும், மாண்புமிகு அம்மா அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

இவ்வாறு மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களும், இந்தி திணிப்பை ஆணித்தரமாக எதிர்த்து வந்தனர்.

இப்படிப்பட்ட மாபெரும் தலைவர்கள் வழி வந்த மாண்புமிகு அம்மாவின் அரசும், மத்திய அரசு, வரைவு தேசிய கல்விக் கொள்கையை வெளியிட்ட போதே, அதில் மும்மொழிக் கொள்கை இடம் பெற்றதை சுட்டிக் காட்டி, அதனை தீவிரமாக எதிர்த்தது. மேலும், தமிழ்நாட்டை பொறுத்தமட்டில், இருமொழிக் கொள்கையையே கடைப்பிடிப்போம் என

உறுதிபட தெரிவித்து **26.06.2019** அன்றே மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை வலியுறுத்தி நான் கடிதம் எழுதினேன். இருமொழிக் கொள்கையையே மாண்புமிகு அம்மாவின் அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதை கடந்த ஆண்டு எனது சுதந்திர தின உரையிலும், சட்டமன்றத்தில் நடைபெற்ற பல்வேறு விவாதங்களின் போதும் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளேன்.

தற்போது மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள புதிய கல்விக் கொள்கையில், மும்மொழிக் கொள்கை இடம் பெற்று இருந்தாலும், மாண்புமிகு அம்மாவின் அரசு, மும்மொழிக் கொள்கையினை தமிழ்நாட்டில் எப்போதும் அனுமதிக்காது என்றும், இருமொழிக் கல்விக் கொள்கையை மட்டுமே தொடர்ந்து பின்பற்றும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஒட்டுமொத்த மக்களின் உணர்வும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட பெரும்பாலான அரசியல் கட்சிகளும், இருமொழிக் கொள்கையை பின்பற்றுவதையே கொள்கையாக கொண்டுள்ளனர். இந்த சூழ்நிலையில், மத்திய அரசு அறிவித்த தனது புதிய கல்விக் கொள்கையில் மும்மொழிக் கல்வி இடம் பெற்றிருப்பது வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கின்றது.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் உணர்வை ஏற்று, மத்திய அரசு அறிவித்த மும்மொழிக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, அந்தந்த மாநிலங்கள் தங்களின் கொள்கைக்கு ஏற்ப செயல்படுத்திக் கொள்ள மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மொழிக்கோ, தமிழர்களுக்கோ, பாதிப்பு ஏற்படும் போது, அந்த பாதிப்பினைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கும் அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு தான் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

படமும்/செய்தியும் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவுநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 02.08.2020 அன்று சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **ஓ. பன்னீர்செல்வம்** அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் ரூ.280.90 கோடி மதிப்பீட்டில் 22 திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 31.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், 22 திட்டப் பணிகளுக்கு காணொலிக் காட்சி மூலம் அடிக்கல் நாட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 31.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையின் கீழ் செயல்படும் நீர்வள ஆதாரத் துறை சார்பில் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கண்டரக்கோட்டை கிராமத்தில், பெண்ணையாற்றின் குறுக்கே 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். மேலும், தமிழ்நாட்டில் உள்ள 17 மாவட்டங்களில் 247 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 21 திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்கள்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் விவசாயத்தை மேம்படுத்தும் வகையிலும், மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், கிடைக்கப்பெறும் நீரை வீணாக்காமல் நீர்நிலைகளில் தேக்கி வைக்கும் பொருட்டும், புதிய நீராதாரங்களை உருவாக்கிடவும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, நீர்வள ஆதாரத் துறை மூலமாக பல்வேறு பாசன மேம்பாட்டுத் திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், கண்டரக்கோட்டை கிராமத்தில், பெண்ணையாற்றின் குறுக்கே 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள். புதிதாக கட்டப்படவுள்ள இத்தடுப்பணையின் நீளம் 575 மீட்டர், உயரம் 1.50 மீட்டர் மற்றும் கொள்ளளவு 28.58 மில்லியன் கன அடி ஆகும். மேலும், தடுப்பணையின் மேற்புறம் 1,500 மீட்டர் மற்றும் கீழ்புறம் 500 மீட்டர் தூரத்திற்கு இருபுறமும் வெள்ளத்தடுப்பு கரைகள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த தடுப்பணை கட்டுவதன் மூலம் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு, நிலத்தடிநீர் மட்டம் வெகுவாக உயரும். இதனால் விவசாய உற்பத்தி அதிகரிப்பதோடு குடிநீரின் தரமும் உயரும். இதனால் இப்பகுதியிலுள்ள 728 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 2,912 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், மீஞ்சூர் ஒன்றியத்திற்குட்பட்ட 1,602 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில், காட்டூர் தத்தமஞ்ஜி இரட்டை ஏரிகளை இணைத்து, கொள்ளளவினை மேம்படுத்தி, நீர்தேக்கத்தை உருவாக்கிட 62 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம்:

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், பழைய சீவரம் கிராமத்தில் உள்ளாவூர் அருகில், பாலாற்றின் குறுக்கே 42 கோடியே 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி;

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், எலந்தம்பட்டு கிராமத்தில், கெடிலம் ஆற்றின் குறுக்கே 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி;

கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில், உளுந்தூர்பேட்டை மற்றும் பண்ருட்டி வட்டங்களில், மலட்டாற்றினை தொலைகல் 24,000 மீட்டர் முதல் 40,000 மீட்டர் வரை 15 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து மேம்படுத்தும் பணி;

நாகபட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருநகரி கிராமத்தில், வெள்ளப்பள்ளம் உப்பனாற்றின் குறுக்கே தொலைகல் 21.200 கிலோ மீட்டரில், 30 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடைமடை நீரொழுங்கி கட்டும் பணி;

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள உப்பாற்றை சீரமைத்து, உப்பாற்றின் குறுக்கே, குறுக்கு கட்டுமான கட்டமைப்புகளை 14 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி;

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஒன்றியம், சாத்தக்கோன் வலசை கிராமம், சீனியப்பா தர்கா அருகே மன்னார் வளைகுடா கடலோரப் பகுதியில் 11 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி மற்றும் திருவாடனை வட்டம், முள்ளிமுனை கிராமம் அருகே மன்னார் வளைகுடா கடலோரப் பகுதியில் 4 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி;

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமம், புது அணைக்கட்டு வாய்க்காலினை 10 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் பணி மற்றும் போடிநாயக்கனூர் வட்டம், போடிநாயக்கனூர் கிராமம், அணைப்பிள்ளையார் கோவில் அருகில் உள்ள இராஜவாய்க்கால் அணைக்கட்டை புனரமைத்தல் மற்றும் இராஜவாய்க்கால் அணைக்கட்டின் மேல்புறம் மற்றும் கீழ்புறத்தில் 4 கோடியே 91 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புச்சுவர் கட்டும் பணி;

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில், திருக்கோவிலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டங்களில் மலட்டாறு வாய்க்காலினை 0 மீட்டர் முதல் 24,000 மீட்டர் வரை 7 கோடியே 53 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி;

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், நம்பியாற்றின் குறுக்கே கண்ணநல்லூர் கிராமத்தில் 4 கோடியே 26 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி;

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அரக்கன்கோட்டை கால்வாய் மற்றும் கிளை வாய்க்கால்களில் மைல் 1/2 முதல் 20/1 வரையிலான பாசன மதகுகள் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி;

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் கிராமம், திருமணிமுத்தாற்றின் குறுக்கே, காட்டுப் பெரியகுளம் அணைக்கட்டினை 3 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுகட்டுமானம் செய்யும் பணி, குஜிலியம்பாறை வட்டம், பாளையம் கிராமம், விராலிப்பட்டி கிராமத்திலுள்ள கசிவு நீர் குட்டையினை 2 கோடியே 92 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி மற்றும் ஒட்டன்சத்திரம் வட்டம், தங்கச்சியம்மாபட்டி கிராமம் புல எண். 487இல் நங்காஞ்சியாற்றின் குறுக்கே 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணி;

புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம், மதயானைப்பட்டி கிராமம் அருகில் பேராம்பூர் வாரியின் குறுக்கே 2 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அணைக்கட்டு கட்டும் பணி;

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள உடுமலைக்கால்வாய் தொலைகல் 16.600 கி.மீ முதல் 23.170 கி.மீ வரை மற்றும் அதன் பகிர்மானக் கால்வாய்களில் விடுபட்டுள்ள கால்வாயினை 2 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி;

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் வட்டம், திருக்கண்ணமங்கை வாய்க்காலில் உள்ள கட்டுமானங்களை 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைத்தல் மற்றும் கரைகளை பலப்படுத்தி புனரமைக்கும் பணி;

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டம், எஸ்.அம்மாபட்டி மற்றும் வடுகபட்டி கிராமங்களில் (ஸ்ரீ சங்கிலி கருப்பசாமி கோவில் அருகில்) அர்ஜுனா நதியின் குறுக்கே 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் அமைத்துள்ள பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயினை தொலைகல் 36 கி.மீ முதல் 39.50 கி.மீ வரை 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கும் பணி;

என மொத்தம் 280 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 22 திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு ஒன்றியம், ஆசூர் கிராமத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கும் திட்டத்தின் கீழ், தரிசுநில மேம்பாட்டு பணிகள், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கும் திட்டத்தின் கீழ், வீரிய ரக மக்காச்சோள விதைகள், வீரிய ரக உளுந்து விதைகளை விவசாயிகளுக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் செ. ராஜூ அவர்கள் வழங்கினார்கள்.

தூத்துக்குடி மாவட்டத்தின் வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் செ. ராஜூ அவர்கள் தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து கூறியதாவது...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா தொற்று நோய் பாதிப்பினால் மக்களுக்கான வளர்ச்சி திட்ட பணிகளில் தொய்வு ஏற்பட்டுவிடக் கூடாது என வலியுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் தூத்துக்குடி மாவட்டத்தில், மக்களுக்கு தேவையான வளர்ச்சி திட்ட பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் விளாத்திகுளத்தில் ரூ.2.75 கோடி மதிப்பில் புதிய வட்டாட்சியர் அலுவலக கட்டுமான பணிகள் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், கோவில்பட்டி ஒன்றியம் பாண்டவர்மங்கலம் ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று, எனது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.11 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடை கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வாங்கப்பட்ட ரூ.17.36 இலட்சம் மதிப்பில் 7 பேட்டரி வாகனங்கள் மூலம் குப்பை சேகரிக்கும் பணிகளும் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் ‘ஈழுவா’ மற்றும் ‘தீயா’ வகுப்பினர்களுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பு சாதிச் சான்றிதழ் வழங்க ஆணை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு ஈழுவா, தீயா சங்கங்களின் கூட்டமைப்பின் நிருவாகிகளிடம் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் வாழும் “ஈழுவா” வகுப்பினருக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பு சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான ஆணையினையும், “தீயா” வகுப்பினரை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கான ஆணையினையும் தமிழ்நாடு ஈழுவா, தீயா சங்கங்களின் கூட்டமைப்பின் நிருவாகிகளிடம் வழங்கினார்கள்.

ஈழுவா மற்றும் தீயா வகுப்பினர்களை பிற்படுத்தப்பட்டோர் வகுப்பில் சேர்ப்பதற்கு பல்வேறு கோரிக்கைகள் அரசுக்கு வரப்பெற்றன. அதனை ஆய்வு செய்ததில், மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டபோது, கன்னியாகுமரி மாவட்டமும், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டமும், திருவாங்கூர்–கொச்சி சமஸ்தானத்திலிருந்து பிரிக்கப்பட்டு தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட்டன. அந்த சமஸ்தானத்தில் சலுகைகள் பெற்று வந்த சாதிகளுக்கு தமிழ்நாட்டிலும் அச்சலுகைகள் வழங்க முடிவு செய்யப்பட்டதை தொடர்ந்து, ஈழுவா வகுப்பு கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக (BC) வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் இதர பகுதிகளில் வாழும் ஈழுவா வகுப்பினருக்கும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு சான்றிதழ் வழங்குவது குறித்தான கோரிக்கையின் மீதும், தீயா வகுப்பினரை பிற்படுத்தப்பட்ட வகுப்பு பட்டியலில் சேர்ப்பது குறித்தான கோரிக்கையின் மீதும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் அறிக்கை பெறப்பட்டது. அதன் பின்னர், இதனை ஆய்வு செய்ய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் வாழும் ஈழுவா வகுப்பினருக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பு சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான ஆணையினையும், தீயா வகுப்பினரை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்ட வகுப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டதற்கான ஆணையினையும் தமிழ்நாடு ஈழுவா, தீயா சங்கங்களின் கூட்டமைப்பின் நிருவாகிகளிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேர்வு நடத்த இயலாத நிலையில் கல்லூரி மாணாக்கர்களுக்கு தேர்விலிருந்து விலக்கு அளித்து அடுத்த கல்வி ஆண்டிற்குச் செல்ல அனுமதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 23.07.2020

தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணாக்கர்கள், பொறியியல் பட்டப்படிப்பு மற்றும் பலவகை தொழில்நுட்பப் பட்டயப்படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு தற்போதுள்ள சூழ்நிலையில் பருவத் தேர்வு நடத்துவது குறித்து ஆராய உயர்மட்டக் குழு ஒன்று தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தேர்வு நடத்த இயலாத நிலை உள்ளதாக அக்குழு தன்னுடைய பரிந்துரையை தெரிவித்துள்ளது.

மாணாக்கர்களின் நலன் கருதி, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) மற்றும் அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு (AICTE) ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி, மதிப்பெண்கள் வழங்கி,

- முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு கலை மற்றும் அறிவியல் இளங்கலை பட்டப்படிப்பில் பயிலும் மாணாக்கர்களுக்கும் மற்றும் பலவகை தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கும்,
- முதுகலைப் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்,
- இளநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்
- முதுநிலை பொறியியல் பட்டப்படிப்பில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்,
- அதேபோன்று, எம்.சி.ஏ. முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்களுக்கும்

இந்தப் பருவத்திற்கு மட்டும் தேர்வில் இருந்து விலக்கு அளித்து அடுத்த கல்வி ஆண்டிற்குச் செல்ல அனுமதிக்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

இது குறித்து விரிவான ஒரு அரசாணையை வெளியிட உயர்கல்வித் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

மலரும் மருந்தாகும்

பூக்கும் பருவத்தில் வேப்ப மரத்திலிருந்து ஏராளமாய் வேப்பம் பூ உதிரும். இவற்றைச் சேகரித்து ரசத்தில் போட்டு சமைத்துச் சாப்பிட வயிற்றுப் புழுக்கள் முழுவதும் நீங்கும்.

வேப்பம் பூ

ஆவின் நிறுவனம் கொரோனா பேரிடர் காலத்தில் ஆட்டோ, டாக்ஸி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தை பெருக்க நடமாடும் பால் வண்டி முகவர்களாக நியமனம்

தமிழகத்தில் கொரோனா பெருந்தொற்று பரவி வரும் நிலையில் ஆட்டோ / டாக்ஸி உரிமையாளர்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்கு உள்ளாகாத வண்ணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அவர்களின் வாழ்வாதாரம் காக்கும் வகையில் ஆவின் பால் மற்றும் உப பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு முதல் கட்டமாக திருநெல்வேலி மற்றும் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஆட்டோ ஓட்டுநர் மற்றும் உரிமையாளர்களை நடமாடும் பால் வண்டி முகவர்களாக ஆவின் நிறுவனம் நியமனம் செய்துள்ளது.

தற்போது நாள் ஒன்றுக்கு சுமார் 40 இலட்சம் லிட்டர் பால் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும், நாள் ஒன்றுக்கு 25 இலட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கொரோனா காலத்திற்கு முன்பு முகவர்கள் ஆவதற்காக வைப்புத் தொகை ரூ.10,000/– இருந்த நிலையில், தற்போது வைப்புத் தொகை ரூ.1,000/– ஆக ஆவின் நிறுவனம் குறைத்துள்ளதால், 575 புதிய முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆவின் நிறுவனம் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஆட்டோ ஓட்டுநர்களை பால் முகவர்களாக நியமனம் செய்தது.

தமிழகம் முழுவதும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனையை தீவிரப்படுத்தும் வகையில் வாழ்வாதாரம் இழந்திருக்கும் ஆட்டோ / டாக்ஸி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்களை நடமாடும் பால் வண்டி முகவர்களாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஆவின் பொது மேலாளர் அலுவலகங்களில் ரூ.1,000/– பணமாகவோ அல்லது காசோலையாகவோ வைப்புத் தொகையாகவோ செலுத்தி உடனடியாக நடமாடும் பால் வண்டி முகவர்களாக நியமனம் பெற்றுக்கொள்ளலாம்.

ஆவின் நிறுவனம் நீலகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் ஆட்டோ ஓட்டுநர்களை பால் முகவர்களாக நியமனம் செய்தது.

சென்னை பெருநகர மாநகரத்திற்கு ஆவின் தலைமை அலுவலகத்தில் உள்ள பொதுமேலாளர் (விற்பனை) அவர்களிடம் வைப்புத் தொகையினை பணமாகவோ அல்லது காசோலையாகவோ செலுத்தலாம்.

இதனால் பால் முகவர்களாக மாறும் ஆட்டோ / டாக்ஸி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் நடமாடும் பால் வண்டி முகவர்களாக மாதம் சுமார் ரூ.15,000/– குறையாமல் வருமானம் கிடைக்க ஆவின் நிருவாகம் வழிவகை செய்துள்ளது. எனவே, இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள அனைவரும் வருக வருக என ஆவின் நிருவாகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும் ஊரடங்கு உத்தரவு 31.08.2020 வரை நீட்டிப்பு செய்யப்படுகிறது!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் அறிக்கை–30.07.2020

இந்தியா முழுவதும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுப்பதற்காக, மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்து வருகிறது. நான் பல்வேறு தினங்களில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையிலும், மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட 12 ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், பல்வேறு தினங்களில் மாவட்ட ஆட்சியர்களின் காணொலிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் நடத்தப்பட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலும், மத்திய அரசின் அறிவுரைகளின் படியும், தமிழகத்தில் 31.07.2020 முடிய ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து நீட்டிக்கப்பட்டது. இருப்பினும், பொது மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்கத்திலும், பெருநகர சென்னை காவல்துறையின் எல்லைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் தமிழ்நாட்டின் பிற பகுதிகளில் பல்வேறு பணிகளுக்கு வரைமுறைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு, கொரோனா நோய்த் தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தும், சிகிச்சைகளை வழங்கியும், நிவாரணங்களை வழங்கியும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. அதனால் தான், தமிழ்நாட்டில் சிகிச்சைக்குப் பின் குணமடைந்து வீடு திரும்புவோர் சதவீதம் நாட்டிலேயே அதிகமாகவும், நோய்த் தொற்றினால் ஏற்படும் உயிரிழப்பு மிகக் குறைவாகவும் இருந்து வருகிறது.

பல்வேறு தினங்களில் நான் நடத்திய ஆய்வுக் கூட்டங்களின் அடிப்படையில், குறிப்பாக 29.07.2020 அன்று நடத்தப்பட்ட காணொலிக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலும், மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொது சுகாதார வல்லுநர்கள் குழுவுடன் 30.07.2020 அன்று நடத்தப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையிலும், மூத்த அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தும், கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை தடுப்பதற்காக தேசிய பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், 31.07.2020 முடிய தற்போதுள்ள ஊரடங்கு உத்தரவு, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளுடனும், தளர்வுகளுடனும், 31.08.2020 நள்ளிரவு 12 மணி வரை

தமிழ்நாடு முழுவதும் மேலும் நீட்டிப்பு செய்யப்படுகிறது. மேலும், ஆகஸ்ட் மாதத்தில் உள்ள அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் (02.08.2020, 09.08.2020, 16.08.2020, 23.08.2020 & 30.08.2020) எவ்வித தளர்வுகளும் இன்றி, தமிழ்நாடு முழுவதும் முழு ஊரடங்கு அமல்படுத்தப்படும்.

பெருநகர சென்னை காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நோய் கட்டுப்பாட்டு பகுதி தவிர மற்ற பகுதிகளில் (Except Containment Zones) ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கீழ்க்காணும் பணிகளுக்கும் 01.08.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

1) தற்போது 50 சதவீத பணியாளர்களுடன் செயல்படும் அனைத்து தொழில் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள், 75 சதவீத பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

2) உணவகங்கள் மற்றும் தேநீர்க் கடைகளுக்கென அரசால் ஏற்கெனவே வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகளில் உள்ள மொத்த இருக்கைகளில், 50 விழுக்காடு இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை உணவு அருந்த அனுமதிக்கப்படுகிறது. எனினும், உணவகங்களில் குளிர்சாதனவசதி இருப்பினும், அவை இயக்கப்படக் கூடாது. உணவகங்களில் முன்பு இருந்தது (31.07.2020 வரை) போன்று காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்படும்.

3) ஏற்கெனவே அரசு அறிவித்துள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளை (Standard Operating Procedure) பின்பற்றி, ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள சிறிய திருக்கோவில்கள், அதாவது 10,000 ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள திருக்கோவில்களிலும், சிறிய மசூதிகளிலும், தர்காக்களிலும், தேவலாயங்களிலும் மட்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியுடன் பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்படும். பெரிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும், பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்பட மாட்டாது.

4) காய்கறி கடைகள், மளிகைக் கடைகள் ஆகியவை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்க அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது இக்கடைகள் காலை 6 மணி முதல் இரவு 7 மணி வரை இயங்க அனுமதிக்கப்படுகிறது.

5) ஏற்கெனவே காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை இயங்க அனுமதிக்கப்பட்ட மற்ற கடைகள், தற்போது காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை இயங்க அனுமதிக்கப்படும்.

6) அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களையும், மின் வணிக நிறுவனங்கள் (E-Commerce) மூலமாக வழங்க அனுமதிக்கப்படுகிறது.

பெருநகர சென்னை காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதி தவிர, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட பகுதிகளிலும் நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் தவிர மற்ற பகுதிகளில் (Except Containment Zones), ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட பணிகளுடன் கீழ்க்காணும் பணிகளுக்கு 01.08.2020 முதல் அனுமதி அளிக்கப்படுகிறது:

அரசு ஏற்கெனவே வெளியிட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் (Standing Operating Procedure) பின்பற்றி, ஏற்கெனவே ஊராட்சிப் பகுதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள சிறிய திருக்கோவில்கள், அதாவது 10,000 ரூபாய்க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள திருக்கோவில்களிலும், சிறிய மசூதிகளிலும், தர்காக்களிலும், தேவலாயங்களிலும் மட்டும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அனுமதியுடன் பொதுமக்கள் தரிசனம் அனுமதிக்கப்படும். பெரிய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும், பொது மக்கள் தரிசனம் அனுமதிக்கப்பட மாட்டாது.

பொது

- குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 144இன் கீழ் பொது இடங்களில் ஐந்து நபர்களுக்கு மேல் கூடக் கூடாது என்ற நடைமுறை தொடர்ந்து அமலில் இருக்கும்.
- தமிழ்நாடு முழுவதும் நோய்க் கட்டுப்பாட்டு பகுதிகளில் (Containment Zones) தற்போதுள்ள நடைமுறைகளின்படி, எந்த விதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.
- அனைத்து, தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் தங்களது ஊழியர்கள் / பணியாளர்களை வீட்டிலிருந்தபடி பணிபுரிய ஊக்குவிப்பதோடு, தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில்

நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

- இரயில் மற்றும் விமான போக்குவரத்தைப் பொறுத்தவரை தற்போதுள்ள நிலையே தொடரும்.
- ஏற்கெனவே உள்ள நடைமுறைப்படி, மாவட்டம் விட்டு மாவட்டம் செல்லும்போதும், வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் போதும், சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் / சென்னை மாநகராட்சி ஆணையரிடம் முறைப்படி e-pass பெற வேண்டும்.
- தமிழ்நாடு முழுவதும் ஆகஸ்ட் 15ஆம் தேதி, மத்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி, சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல் போன்றவற்றை கடைபிடித்து சுதந்திர தின விழா கொண்டாடப்படும்.

ஏற்கெனவே நடைமுறையில் உள்ள கீழ்க்காணும் செயல்பாடுகளுக்கான தடைகள், மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும்:–

- மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து வழிபாட்டுத்தலங்களிலும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும் உள்ள பெரிய வழிபாட்டு தலங்களிலும் பொதுமக்கள் வழிபாடு.
- அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள்.
- நீலகிரி மாவட்டத்திற்கும், கொடைக்கானல், ஏற்காடு போன்ற அனைத்து சுற்றுலா தலங்களுக்கும், வெளியூர் சுற்றுலா பயணிகள் செல்ல தடை தொடரும்.
- தங்கும் வசதியுடன் கூடிய ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள், பிற விருந்தோம்பல் சேவைகளுக்கு தடை தொடரும். எனினும், மருத்துவத் துறை, காவல் துறை உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் வெளி மாநிலத்தவர்களை தனிமைப்படுத்துவதற்கு மட்டும் விலக்கு அளிக்கப்படுகிறது.
- வணிக வளாகங்கள் (Shopping Malls).
- பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்துக் கல்வி நிறுவனங்கள். எனினும், இந்நிறுவனங்கள் இணைய வழிக் கல்வி கற்றல் தொடர்வதுடன், அதனை ஊக்குவிக்கலாம்.
- மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர சர்வதேச விமான போக்குவரத்திற்கான தடை நீடிக்கும்.
- மெட்ரோ இரயில் / மின்சார இரயில்.
- திரையரங்குகள், உடற்பயிற்சிக் கூடங்கள், நீச்சல் குளங்கள், கேளிக்கைக் கூடங்கள், மதுக்கூடங்கள் (Bar), பெரிய அரங்குகள், கூட்ட அரங்குகள், கடற்கரை, சுற்றுலாத் தலங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள் போன்ற பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள்.
- அனைத்து வகையான சமுதாய, அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கலாச்சார நிகழ்வுகள், சமய, கல்வி, விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள்.
- மாநிலங்களுக்குள் உள்ள பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான பொது மற்றும் தனியார் பேருந்து போக்குவரத்து.

மேற்கண்ட கட்டுப்பாடுகளில், தொற்றின் தன்மைக்கேற்றவாறு, படிப்படியாக தளர்வுகள் அளிக்கப்படும்.

அரசு ஊரடங்கை அமல்படுத்தினாலும், பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தாலும், மக்களின் ஒத்துழைப்பு இல்லையென்றால், இந்த நோய் பரவலை தடுக்க இயலாது. பொதுமக்கள் வெளியில் செல்லும்போதும், பொது இடங்களிலும் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வீட்டிலும், பணிபுரியும் இடங்களிலும் அடிக்கடி சோப்பை பயன்படுத்தி கை கழுவுவதையும், வெளியிடங்களில் முகக்கவசத்தை அணிந்து செல்வதையும், சமூக இடைவெளியை தவறாமல் கடைபிடித்தும், அவசிய தேவை இல்லாமல் வெளியில் செல்வதைத் தவிர்த்தும், அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கினால் தான், இந்த நோய்த் தொற்றை கட்டுப்படுத்த முடியும். மாண்புமிகு அம்மாவின் அரசு அமல்படுத்தி வரும் ஊரடங்கு மற்றும் நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் தீவிர பரிசோதனை மூலம் நோய்த்தொற்று அதிகரிக்கும் வேகம் குறைந்திருந்தாலும், நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை கணிசமாக உள்ள நிலையில் மக்களைக் காக்க தற்போதுள்ள ஊரடங்கு நடைமுறையை மேலும் தொடர வேண்டிய நிலையில் அரசு உள்ளது. இதனால் நோய்ப்பரவலை மேலும் கட்டுப்படுத்த இயலும். எனவே, பொதுமக்கள் அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு நல்க கேட்டுக் கொள்கிறேன். நோய்த் தொற்றின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பையும், நோய்த் தொற்றின் நிலையையும் கருத்தில் கொண்டு அவ்வப்போது படிப்படியாக தளர்வுகள் வழங்கப்படும்.

ஊரடங்கு காலத்தில் வேளாண்மைத் துறை விவசாயப் பெருமக்களுக்கும், பொதுமக்களுக்கும் செய்த மகத்தான சேவை

கொரோனா நோய் தடுப்பு ஊரடங்கு அமலில் இருந்த போதிலும், பயிர் சாகுபடிப் பணிகள், வேளாண் இடுபொருட்கள் விநியோகம் மற்றும் விளைபொருட்கள் விற்பனை போன்ற வேளாண் சார்ந்த பணிகள் அனைத்தும் இந்த ஊரடங்கு காலத்தில் எவ்வித தடையுமின்றி தொடரவேண்டும் என்ற நோக்கத்தில் இத்தகைய வேளாண் தொடர்பான அனைத்துப் பணிகளுக்கும் தமிழ்நாடு அரசும், மத்திய அரசும் விலக்களித்து ஆணையிட்டது. இக்காலத்தில் இதுவரை நெல் 3,65,000 ஏக்கர், சிறுதானியங்கள் 1,57,000 ஏக்கர், பயறு வகை 1,03,000 ஏக்கர் ஆக மொத்தம் 7,94,000 ஏக்கரில் வேளாண்மை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், ராபி மற்றும் கோடை பயிர்கள் 7,74,000 ஏக்கர் வேளாண் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டுள்ளன.

நெல் கொள்முதல் நிலையங்கள்

நெல், நிலக்கடலை மற்றும் எள் போன்ற பயிர்கள் அறுவடை இயந்திரங்கள் மூலம் அறுவடை பணிகள் தொய்வின்றி நடக்க உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் 1,276 பண்ணை இயந்திரங்களை வேளாண் சார்ந்த செயல்பாடுகளுக்கு, கொரோனா பற்றிய விழிப்புணர்வுடன் விவசாயிகள் அறுவடை பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டனர். அறுவடை செய்துள்ள தானியங்களை எவ்வித இடையூறும் இல்லாமல், விற்பனை செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, தேவைப்படும் இடங்களில் 519 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் கொள்முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறுவை சாகுபடிக்கு சமுதாய நாற்றங்கால்

மேலும், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடிக்குத் தேவையான சமுதாய நாற்றங்கால்களை உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் தயாரித்து உழவர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இதுவரை 255 ஏக்கர் பரப்பில் நாற்றங்கால் வளர்க்கப்பட்டு 8,674 ஏக்கர் பரப்பில் நாற்றங்கால் நடவு செய்யப்பட்டுள்ளது.

உழவன் இ–சந்தையின் மூலம் விற்பனை

வியாபாரிகளும், விவசாயிகளும் விளைபொருட்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் ஏதுவாக கட்டணமில்லா உழவன் இ–சந்தை எனும் சேவை உழவன் செயலியில் உருவாக்கப்பட்டது. இச்சேவையின் மூலம் இதுவரை 318 விவசாயிகள் அவர்களது விளைபொருட்களை விற்பனை செய்துள்ளனர். உழவன் இ சந்தை மூலம் நெல் மற்றும் சிறுதானியங்கள் 1,80,000 கிலோ, எண்ணெய் வித்துக்கள் 20,500 கிலோ, பழங்கள் 21,000 கிலோ மற்றும் காய்கறிகள் 36,000 கிலோ விற்பனையாகியுள்ளது. அறுவடை செய்யப்படும் தேங்காய்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக கிசான் ரத் செயலி மூலம் தேசிய அளவிலான வியாபாரிகளை தொடர்பு கொண்டு விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

நடமாடும் வேளாண்மை விரிவாக்க மையம்

கார் / குறுவை / சொர்ணவாரி பருவம் மற்றும் காரீப் பருவம் தொடங்கி உள்ள நிலையில் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுக்கான சான்று விதைகள் விவசாயிகளுக்கு விநியோகிக்க முன் உரிய ஆணை வழங்கப்பட்டு சான்று விதைகள் மானியத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. குறுவை சாகுபடிக்கு தேவையான நெல் விதைகள் மற்றும் சித்திரை பட்டத்திற்கு தேவையான உளுந்து விதைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் விதைப்பு பணிகள் பாதிக்கப்படாமல் இருக்க நடமாடும் மற்றும் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் வாயிலாக 2,486 மெட்ரிக் டன் விதைகள் விநியோகம் செய்யப்பட்டு, 21,932 மெட்ரிக் டன் விதைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் 11,030 மெட்ரிக் டன் விதைகள் ஆக மொத்தம் 32,962 மெட்ரிக் டன் விதைகள் மற்றும் தேவையான அளவு இதர இடுபொருட்கள் விவசாயிகளுக்கு உரியநேரத்தில் கிடைக்க அரசு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது .

தமிழக அரசு விவசாயிகளின் நலன் கருதி தொடக்க கூட்டுறவு மையங்கள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்கள் வாயிலாக விவசாயிகளின் தேவைக்காக ஊரடங்கு காலத்தில் காலை 8 மணி முதல் மதியம் 12.30 மணிவரை உரங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போது இரவு ஏழு மணி வரை விற்பனை நேரம் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

நடமாடும் உர விற்பனை ஊர்திகள்

விவசாயிகள் உரக்கடைகளை நாடிச் செல்வதில் உள்ள சிரமங்களை கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் நடமாடும் உர விற்பனை ஊர்திகள் மூலம் விவசாயிகளின் வீடுகளுக்கே சென்று நேரடியாக உரங்கள் விற்பனை செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் சாகுபடிக்கு தேவையான இரசாயன உரங்கள் யூரியா 1,12,000 மெட்ரிக் டன், டிஏபி 63,000 மெட்ரிக் டன், பொட்டாஷ் 54,000 ஆயிரம் மெட்ரிக் டன் மற்றும் காம்ப்ளக்ஸ் 1,67,000 மெட்ரிக் டன் உடனடி விநியோகத்திற்கு இருப்பில் உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையான பயிர் பாதுகாப்பு மருந்துகளை வாங்கிட 4,912 பூச்சி மருந்து விற்பனை நிலையங்கள் தமிழகம் முழுவதும் அன்றாடம் செயல்படுத்தப்பட்டது.

தென்னையைக் காக்க ரூ.5.25 கோடி ஒதுக்கீடு

இத்தகைய சூழ்நிலையிலும் தென்னையில் 25 ஆயிரம் எக்டர் பரப்பில் காணப்பட்ட சுருள் வெள்ளை ஈதாக்குதலை கட்டுப்படுத்த, தமிழக அரசு ரூ.5.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து திட்டத்தினை விரைந்து செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் தொகை முன்கூட்டியே வழங்கப்பட்டது

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் பிரதம மந்திரி கௌரவ நிதித் திட்டத்தின் கீழ், ஏப்ரல் 2020 முதல் ஜூலை 2020 வரையிலான நான்கு மாதங்களுக்குரிய தவணைத் தொகை ரூ.2,000 விவசாயிகளுக்கு முன் கூட்டியே வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி கொரோனா தடுப்பு ஊரடங்கு காலத்தில் (ஏப்ரல் 2020 முதல் இதுநாள் வரை) ரூ.8.89 கோடி, அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு விவசாயிகள் தொடர்ந்து சாகுபடி மேற்கொள்ள தேவையான இடுபொருட்கள் வாங்க வழிவகை செய்யப்பட்டது.

வாடகையின்றி வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு வழங்கியது

தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை மற்றும் டாபே (TAFE) நிறுவனம் இணைந்து, மாஸே பர்குசன் மற்றும் எய்சர் டிராக்டர்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை அனைத்து விதமான விவசாய பணிகளை மேற்கொள்வதற்காக சிறு, குறு விவசாயிகள் வாடகையின்றி உபயோகப்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. 03.04.2020 முதல் தொடங்கப்பட்ட இச்சேவை 90 நாட்கள் வரை அதாவது 2020 ஜூன் 30 வரை செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 38,950 விவசாயிகளுக்கு 98,293 ஏக்கர் பரப்பளவில் 14,540 வேளாண் இயந்திரங்களை கொண்டு இயந்திர வாடகையின்றி வேளாண் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன.

உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் உழவர் சந்தை மற்றும் நடமாடும் காய்கறி வண்டிகள் மூலம் பொதுமக்களுக்கு கிடைக்க செய்தது

அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் மூலம் காய்கறி, பழங்கள்,

மளிகைப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்யப்பட்டது. 1,352 உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் இதுவரை 12,567 மெட்ரிக் டன் காய்கறிகளை உழவர் சந்தை மற்றும் நடமாடும் காய்கறி வண்டிகள் மூலம் விற்பனை செய்துள்ளனர். உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் 1,383 பண்ணை இயந்திரங்களை வேளாண் சார்ந்த செயல்பாடுகளுக்கும், 153 தெளிப்பான்களை கிருமிநாசிகள் மூலம் பொது இடங்களை சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்தி உள்ளனர். மேலும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் பால் விற்பனை, மாட்டுத் தீவன விற்பனை, கபசுர குடிநீர் விநியோகம், முகக்கவசம் தயாரித்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர். அரசு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், கிராம ஊராட்சிக்கு உட்பட்ட அரசு கட்டடங்கள் ஆகியவற்றிற்கு கிருமிநாசினிகளைக் கொண்டு சுத்தம் செய்யும் பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

விவசாய தொழிலாளர் மற்றும் கருவிகள் தங்கு தடையின்றி அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் செல்ல வேளாண்மைத் துறை அதிகாரிகளால் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டது. கொரோனா நோய் தடுப்பு ஊரடங்கு காலம் முழுமையிலுமே கோவிட்–19 வழிமுறைகளை பின்பற்றிட அனைத்து விவசாயிகளுக்கும், பணியாளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

படமும்/ செய்தியும்

நியாய விலைக் கடைகள் மூலம் முகக்கவசம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 27.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், முதற்கட்டமாக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சி பகுதிகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி தவிர) வசிக்கும் 69.09 இலட்சம் குடும்பங்களுக்கு 4.44 கோடி முகக்கவசங்கள் நியாய விலைக் கடைகள் மூலமாக வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 5 நபர்களுக்கு முகக்கவசங்களை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

தைத் திங்கள் திருவள்ளுவர் திருநாளில் விருதுகள் வழங்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன



மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நெறியில் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் பாடுபடும் தமிழறிஞர்களையும் தமிழுக்குத் தொண்டாற்றுகின்றவர்களையும் சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரையில்லாத அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின் அரசு எண்ணற்ற விருதுகளைத் தோற்றுவித்து வழங்கி வருகிறது. அவ்வகையில் தைத் திங்கள் திருவள்ளுவர் திருநாளில் கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்படவுள்ளன. இவ்விருதுகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பப் படிவம் தமிழ் வளர்ச்சித் துறையின் www.tamilvalarchithurai.com என்ற வலைத்தளத்தில் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். **விண்ணப்பிப்பவர்கள் தன்விவரக் குறிப்புகளுடன் நிழற்படம் இரண்டு, எழுதிய நூல்களின் பெயர்ப்பட்டியலுடன் அந்நூல்களில் ஒருபடி வீதம் தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம், தமிழ்ச் சாலை, எழும்பூர், சென்னை–600 008 என்ற முகவரிக்கு 30.09.2020ஆம் நாளுக்குள் அனுப்ப வேண்டும்.**

(தொலைபேசி எண். 044–28190412, 044–28190413,
மின்னஞ்சல் முகவரி: tamilvalarchithurai@gmail.com)

1.	திருவள்ளுவர் விருது	2021 (திருக்குறள் நெறி பரப்புவோருக்கு)
2.	மகாகவி பாரதியார் விருது	2020 (பாரதியாரின் படைப்புகள் அனைத்தையும் முழுமையாகப் பயின்று ஆய்வு மேற்கொண்டு பாரதியாரைப் பற்றிய கவிதைகள் மற்றும் பாரதியின் புகழ் பரப்பும் வகையில் கவிதை, உரைநடை நூல்கள் படைத்தோர், பிற வகையில் தொண்டு செய்தோர், செய்பவர்களுக்கு).
3.	பாவேந்தர் பாரதிதாசன் விருது	2020 (சிறந்த கவிஞருக்கு)
4.	தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது	2020 (சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு)
5.	கி.ஆ.பெ. விசுவநாதம் விருது	2020 (சிறந்த தமிழ் அறிஞருக்கு)
6.	பெருந்தலைவர் காமராசர் விருது	2020 (தெருவெங்கும் பள்ளிகள் திறந்து, இலவசக் கல்வித்திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் மூலமாக தமிழ் சமுதாயம் கல்வி எனும் கைவிளக்கு ஏந்தி முன்னேற வழிவகுத்த வரலாறு படைத்த பெருந்தகையாளர் அவர்களின் அடிச்சுவட்டில், தமிழக மக்களுக்கு தொண்டாற்றி வரும் ஒருவருக்கு)
7.	பேரறிஞர் அண்ணா விருது	2020 (தமிழ்ச் சமுதாயம் முன்னேற்றம் காண அயராது பாடுபடும் ஒருவருக்கு)

சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுப் போட்டி

தமிழ்நாடு வரலாற்றில் எக்காலத்திலும் இதுவரை இல்லாத அளவிற்குத் தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழறிஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எண்ணற்ற விருதுகளும் பரிசுப் பாராட்டுச் சான்றுகளும், நலத்திட்டங்களும் வழங்கிச் சிறப்பித்தார்கள். அவர்தம் உன்னத வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களும் தமிழ் வளர்ச்சிக்கென பற்பல திட்டங்கள், 72 விருதுகள், பல்வேறு நலத்திட்ட உதவிகள் எனப் பன்முக வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் பல கோடி மதிப்பில் தமிழ் வளர்ச்சிக்கு திட்டங்கள் அறிவித்தும் உலக அளவில் தமிழ் மேம்பாட்டிற்கென தமிழிருக்கைகள் அமைத்திடவும் நிதியுதவி செய்தும், அருந்தமிழ் வளர்த்து வருகிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் மேலான ஆணைப்படி சிறந்த தமிழ் நூல்களுக்கான பரிசுப் போட்டிக்கு 2019ஆம் ஆண்டில் (01.01.2019 முதல் 31.12.2019 வரை) வெளியிடப்பட்ட நூல்கள் 33 வகைப்பாடுகளின் கீழ் வரவேற்கப்படுகின்றன. போட்டியில் ஒவ்வொரு வகைப்பாட்டிலும் ஒரு நூல் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு, நூலாசிரியருக்கு ரூ.30,000/–மும் அந்நூலைப் பதிப்பித்த பதிப்பகத்தாருக்கு ரூ.10,000/–மும் எனப் பரிசுகள் வழங்கப்பெறும்.

வகைப்பாடுகள்

1. மரபுக் கவிதை, 2. புதுக் கவிதை, 3. புதினம், 4. சிறுகதை, 5. நாடகம் (உரைநடை, கவிதை), 6. சிறுவர் இலக்கியம், 7. திறனாய்வு, 8. மொழி வரலாறு, மொழியியல், மொழி வளர்ச்சி, இலக்கணம் 9. பிற மொழிகளிலிருந்து தமிழாக்கம் செய்யப்படும் நூல்கள், 10. நுண்கலைகள் (இசை, ஓவியம், நடனம், சிற்பம்), 11. அகராதி, கலைக் களஞ்சியம், கலைச் சொல்லாக்கம், ஆட்சித் தமிழ், 12. பயண இலக்கியம், 13. வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு, 14. நாட்டு வரலாறு, கல்வெட்டு, தொல்லியல், கடலியலும் வணிகவழிகளும், அகழாய்வு, 15. கணிதவியல், வானியல், இயற்பியல், வேதியியல் 16. பொறியியல், தொழில்நுட்பவியல், 17. மானிடவியல், சமூகவியல், புவியியல், நிலவியல், 18. சட்டவியல், அரசியல், 19. பொருளியல், வணிகவியல், மேலாண்மையியல், 20. மருந்தியல், உடலியல், நலவியல் 21. தமிழ் மருத்துவ நூல்கள் (சித்தம், ஆயுர்வேதம்), 22. சமயம், ஆன்மீகம், அளவையியல் 23. கல்வியியல், உளவியல், 24. வேளாண்மையியல், கால்நடையியல், 25. சுற்றுப்புறவியல், 26. கணினிஇயல், 27. நாட்டுப்புறவியல், 28. வெளிநாட்டுத் தமிழ்ப் படைப்பிலக்கியம், 29. இதழியல், தகவல் தொடர்பு, 30. பிற சிறப்பு வெளியீடுகள், 31. விளையாட்டு, 32. மகளிர் இலக்கியம், 33. தமிழர் வாழ்வியல்

பரிசுப் போட்டிக்குரிய விண்ணப்பம் மற்றும் விதிமுறைகள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் நேரிலோ, அஞ்சல் வாயிலாகவோ அல்லது இத்துறையின் வலைதளத்திலோ இலவசமாகப் (www.tamilvalarchithurai.com) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தமிழ்வளர்ச்சி இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி எண்கள் 044–28190412, 044–28190413

அஞ்சல் வாயிலாகப் பெற 23x10 செ.மீ அளவிலான சுய முகவரியிட்ட உறையில் 10 ரூபாய் அஞ்சல்வில்லை ஒட்டி அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்பத்துடன் 10 நூற்படிகளும் போட்டிக் கட்டணம் ரூ.100/– 'தமிழ்வளர்ச்சி இயக்குநர், சென்னை' என்ற பெயரில் வங்கிக்கேட்பு வரைவோலையாக அளிக்க வேண்டும்.

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற
கடைசி நாள்: 30.10.2020.

சென்னை மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு 2019-2020 ஆண்டிற்கான திருக்குறள் முற்றோதல் குறித்து தமிழ் வளர்ச்சித் துறை அறிவிப்பு!

தெய்வமறை எனப் போற்றப்படும் திருவள்ளுவரின் திருக்குறளின் மாண்பை வருங்கால இளைய தலைமுறையினர் 1,330 குறட்பாக்கள் மூலம் அறிந்து, உணர்ந்து, அறநெறி ஆற்றலை தன்னகத்தே பெற்று தகைசால் மிக்கவர்களாக உருவாகிட வேண்டும் என்ற உன்னதமான நோக்கில் தமிழ்நாடு அரசு திருக்குறள் முற்றோதல் திட்டத்தை ஆண்டுதோறும் செயற்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான ஆணையின்படி 2018–2019ஆம் ஆண்டு முதல் 1,330 திருக்குறளையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் திருக்குறள் முற்றோதல் போட்டியில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 50லிருந்து 70ஆக உயர்த்தப்பட்டது. அதன்படி தேர்வுச் செய்யப்பட்ட மாணவர் ஒருவருக்கு ரூ.10,000/– பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள் சென்னை மாவட்டத் துணை இயக்குநர் தலைமையிலான திறனறிக் குழுவினரால் திறனாய்வுச் செய்யப்பட்டு தகுதியானவர்கள் பரிசுக்குப் பரிந்துரைக்கப்படுவர். இப்போட்டியில் பங்கேற்பவர்கள் 1,330 திருக்குறளையும் முழுமையாக ஒப்புவிக்கும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இயல் எண், அதிகாரம் எண், பெயர், குறள் எண் போன்றவற்றைக் குறித்து, கேள்வி கேட்டால் சொல்லும் திறன் பெற்றவராக இருந்தால் கூடுதல் சிறப்பு.

திருக்குறளின் அடைமொழிகள், சிறப்புப்பெயர்கள், சிறப்புகள் ஆகியவற்றையும் அறிந்திருக்க வேண்டும். திருக்குறளின் பொருளை அறிந்திருந்தால் கூடுதல் தகுதியாகக் கருதப்படும். சென்னை மாவட்டத்தில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் இந்தப் போட்டியில் பங்கேற்கலாம். ஏற்கெனவே இந்தப் பரிசை பெற்றவர்கள் மீண்டும் பங்கேற்கக் கூடாது.

போட்டியில் பங்கேற்க விரும்பும் மாணவ, மாணவியர் எழும்பூர், தமிழ் வளர்ச்சி இயக்ககம் **www.tamilvalarchithurai@gmail.com** என்ற தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். இத்துடன் விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு **044–28190412, 044–28190413** தமிழ் வளர்ச்சித் துறை அலுவலகத்தினைத் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி

முனைவர் தா. லலிதா,
தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி வளாகம், முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.

ரூ.3.78 கோடி மதிப்பீட்டில் மக்காச்சோளம் மதிப்புக் கூட்டு மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்தின் மூலமாக கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தொழுதூர் கிராமத்தில் கட்டப்பட்டுள்ள மக்காச்சோளம் மதிப்புக் கூட்டு மையத்தை திறந்து வைத்தார்கள்.

கொரோனா சிறப்பு சிகிச்சை ஒப்புயர்வு மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் 14.08.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சார்பில், புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள சிறுநீரக சிறப்பு சிகிச்சை மையத்தை, கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்திக் கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை ஒப்புயர்வு மையத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாக கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை திறந்து வைத்து, கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக கட்டப்படவுள்ள கல்வியியல் கட்டடம், நிருவாகக் கட்டடம், நூலகம், ஆண்கள் மற்றும் பெண்கள் விடுதிகள் ஆகிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நடப்பாண்டில் டெல்டா மாவட்டங்களில் 30 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத அளவான 3.87 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது

நடப்பாண்டில் மேட்டூர் அணையின் நீர்வரத்து திருப்திகரமானதாக இருந்ததாலும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்றும் கடந்த 8 ஆண்டுகளுக்கு பிறகு, குறுவை நெல் சாகுபடிக்காக, மேட்டூர் அணையிலிருந்து ஜுன் 12ம் தேதியன்று பாசன நீர் திறந்துவிடப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.05.2020 அன்றே அறிவித்தார்கள். மேலும், பொதுப்பணித்துறை மூலம் ஏ மற்றும் பி பிரிவு கால்வாய்களும் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) மூலம் C & D பாசன வாய்க்கால்களும் உரிய காலத்தில் தூர்வாருவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுத்தது. எனவே, கடந்த ஜுன் 12ம் தேதி மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டு, காவேரி டெல்டா மாவட்டங்களில் உள்ள பாசன வயல்களுக்கு 15 நாட்களுக்கு முன்பாகவும், கடைமடை பாசன பகுதிகளுக்கு 25 தினங்களுக்கு முன்பாகவும் பாசன நீர் சென்றடைந்தது.

கொரோனா நோய்க்கான ஊரடங்கு அமலில் இருந்தபோதிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, குறுவை நெல் சாகுபடிக்குத் தேவையான குறைந்த வயதுடைய சான்று நெல் இரக விதைகளை அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் முன்கூட்டியே இருப்பு வைத்து விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண்மைத்துறை விநியோகித்தது. மேலும், தேவையான இரசாயன உரங்களை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் கடைகளில் இருப்பு வைத்திடவும், விவசாயிகளுக்கு உரங்களை நடமாடும் வாகனங்கள் மூலம் விநியோகம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசின் இத்தகைய நடவடிக்கைகளினால், விவசாயிகள் நாற்றங்கால் மற்றும் நடவுப் பணிகளை முன்னதாகவே தொடங்கி, பாசன நீரை முழுமையாக பயன்படுத்தி நெல் நடவு மேற்கொள்ள வழிவகுத்தது.

மேலும், திருந்திய நெல்சாகுபடி முறைகள், நேரடி நெல் விதைப்பு ஆகிய தொழில்நுட்பங்களாலும் சமுதாய நாற்றங்கால் முறையிலும் நாற்றுகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு தக்க காலத்தில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அரசின் இத்தகைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவாக, இந்த ஆண்டில், டெல்டா

“டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெற்பயிரினையும் காப்பீடு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் 270 வருவாய் கிராமங்களை கூடுதலாக பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்து, இதுவரை 1.68 இலட்சம் ஏக்கரில் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்யப்பட்டதைவிட, 1.03 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.”

மாவட்டங்களில் 03.08.2020 அன்றைய தேதி நிலவரப்படி 3.870 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட 2.803 இலட்சம் ஏக்கரை விட 1.067 இலட்சம் ஏக்கர் அதிகமாகும். மேலும் கடந்த 30 ஆண்டு வரலாற்றில் குறுவை பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட அதிகபட்ச பரப்பு இதுவே ஆகும்.

எதிர்பாராதவிதமாக இயற்கை இடர்பாடு ஏதும் நிகழ்ந்தால், ஏற்படும் பயிர் இழப்பிலிருந்து டெல்டா விவசாயிகளை பாதுகாப்பதற்காக, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், குறுவை நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அதிக எண்ணிக்கையிலான விவசாயிகளை காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்வதற்கு அரசு சீரிய நடவடிக்கைகளை மேற்கொண்டது. டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட குறுவை நெற்பயிரினையும் காப்பீடு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு அரசு திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் 270 வருவாய் கிராமங்களை கூடுதலாக பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அறிவிக்கை செய்து, இதுவரை 1.68 இலட்சம் ஏக்கரில் பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டு பயிர் காப்பீடு செய்யப்பட்டதைவிட, 1.03 இலட்சம் ஏக்கர் அதிகமாகும்.

தமிழ்நாடு அரசு உரிய காலத்தில் அனைத்துப் பணிகளையும் முன்கூட்டியே மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த காரணத்தினால், டெல்டா மாவட்டங்களில் இதுவரை இல்லாத சாதனையாக நடப்பு குறுவை பருவத்தில் சாகுபடி செய்யப்பட்ட 3.870 இலட்சம் ஏக்கரிலிருந்து 6.50 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மகசூல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அன்பு, அமைதி, மனிதநேயம் ஆகியவற்றை மக்கள் அனைவரும் மனதில் நிறுத்தி, ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
“பக்ரீத்” திருநாள் வாழ்த்துச் செய்தி – 31.07.2020

இறை உணர்வோடும், தியாகச் சிந்தனையோடும் இஸ்லாமியப் பெருமக்களால் கொண்டாடப்படும் பக்ரீத் திருநாளான இந்நன்னாளில், எனது அன்பிற்குரிய இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த இனிய பக்ரீத் திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறை நம்பிக்கை உள்ளவர்கள் எந்த தியாகத்திற்கும் தயங்க மாட்டார்கள் என்பதை பறைசாற்றும் வகையில், இறைத்தூதர் இப்ராஹிம் அவர்கள் இறை கட்டளையை ஏற்று, தனது ஒரே மகனான இஸ்மாயிலை இறைவனுக்காக தியாகம் செய்ய துணிந்ததை நினைவுகூரும் வகையில் பக்ரீத் திருநாள் இஸ்லாமியப் பெருமக்களால் கொண்டாடப்படுகிறது.

இத்தியாகத் திருநாளில், திருக்குரான் போதிக்கும் உயரிய நெறிமுறைகளான அன்பு, அமைதி, மனிதநேயம் ஆகியவற்றை மக்கள் அனைவரும் மனதில் நிறுத்தி, அன்புடனும், சகோதரத்துவத்துடனும், ஒற்றுமையாக வாழ்ந்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இஸ்லாமிய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது மனமார்ந்த பக்ரீத் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியினை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள “ஊக்கத் தொகை திட்டம்”

தமிழ்நாட்டு விவசாயிகளின் வருமானத்தை உயர்த்துவதில், தோட்டக்கலைப் பயிர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும், ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள் மற்றும் பழவகைப் பயிர்களுக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளதாலும், வழக்கமான பயிர்களிலிருந்து நல்ல இலாபம் ஈட்டும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு விவசாயிகள் மாறி சாகுபடி மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

மனிதனின் ஆரோக்கியத்திற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 100 கிராம் பழங்களையும் 300 கிராம் காய்கறிகளையும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிகரித்து வரும் மக்கட்தொகைக்கேற்ப, உயர்ந்து வரும் காய்கறிகள் மற்றும் பழங்களின் தேவையினைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விதி 110இன்கீழ் ஆண்டு முழுவதும் காய்கறிகள் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், முக்கிய தோட்டக்கலை பயிர்களை பயிரிடும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

இந்த அறிவிப்பின்படி, ஆண்டுதோறும் அனைத்து முக்கிய காய்கறிகள் நுகர்வோருக்கு கிடைப்பதை உறுதி செய்யும் விதமாக இடைப்பருவ காலத்தில் காய்கறிகள் பயிர் செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், எக்டருக்கு 2,500/– ரூபாய் வழங்க தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மானியம் பெற, வழக்கமாக சாகுபடி செய்யும் பருவம் தவிர்த்து, பற்றாக்குறை ஏற்படும் பருவங்களில் அறுவடைக்கு வரும் வகையில் காய்கறி பயிர்களை சாகுபடி செய்வதற்கு கொள்முதல் செய்த விதை / நடவுச் செடிகளின் விலை பட்டியல், கிராம நிருவாக அலுவலர் வழங்கிய அடங்கல் / மின் அடங்கலின் நகல் மற்றும் சாகுபடி மேற்கொண்ட வயலின் புகைப்படம் ஆகிய விவரங்களுடன் தங்கள் பகுதியில் உள்ள வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்களிடம் விண்ணப்பிக்கலாம். இத்திட்டத்தின்கீழ், ஒரு விவசாயிக்கு சாகுபடி மேற்கொண்ட பரப்பின் அடிப்படையில், அதிகபட்சமாக 2 எக்டர் வரை ஊக்கத் தொகை வழங்கப்படும்.

தோட்டக்கலைத் துறையின் பிற திட்டங்களின் கீழ், மானியம் பெறாத விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் மானியம் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. **தோட்டக்கலை பயிர் ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவன் செயலி மூலம் பதிவு செய்து கொள்ளலாம். மேலும், இத்திட்டத்தின் பயன்பெற விரும்பும் விவசாயிகள், மானிய உதவி கிடைப்பதற்கான பருவம், பயிர் மற்றும் இதர விபரங்களைப் பெற தங்கள் பகுதி தோட்டக்கலைத் துறை அலுவலர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

மலரும் மருந்தாகும்

சிறுநீரகக் கல், வயிற்றுப் புண் எனும் குன்ம நோயாளிகள் வாழைப் பூவை சமைத்துச் சாப்பிட சிறுநீர் நன்கு பிரியும். வயிற்று வலி குறையும்.



E-Pass அனுமதி எவ்வித தாமதமும் தடையுமின்றி உடனுக்குடன், விண்ணப்பித்த அனைவருக்கும் வழங்க உத்தரவிட்டுள்ளேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 14.08.2020

மாண்புமிகு அம்மாவின் அரசு கொரோனா தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாத்து, அவர்களுக்கு தேவையான நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தும், சிகிச்சைகளை அளித்தும், நிவாரணங்களை வழங்கியும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. நோய்த் தொற்றின் போக்கு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பையும், நோய்த் தொற்றின் நிலையையும் கருத்தில் கொண்டு, ஊரடங்கில் படிப்படியாக தளர்வுகள் வழங்கப்பட்டு வருகிறது.

நோய்த் தொற்று பரவுவதை தடுக்க, திருமணம், அவசர மருத்துவம், நெருங்கிய உறவினர் மரணம், பணி சம்பந்தமாக பயணித்தல், வெளியிடங்களுக்குச் சென்று சொந்த ஊர் திரும்புதல் ஆகிய காரணங்களுக்காக மட்டும் மாவட்டங்களுக்கு இடையே பயணிக்க விண்ணப்பிக்கப்படும் E-Pass விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் மாவட்டம் விட்டு மாவட்டம் செல்பவர்கள் கண்காணிக்கப்பட்டு, நோய்த் தொற்று ஏற்பட்டால் அவர்களுடன் தொடர்புடையவர்களை கண்டறிந்து தனிமைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலையில், பொதுமக்கள் முக்கிய பணிகளுக்கு தடையின்றி தமிழ்நாடு முழுவதும் பயணிக்க (மாவட்டங்களுக்கு இடையே) 17.08.2020 முதல் ஆதார் அல்லது குடும்ப அட்டை விவரங்களுடன் தொலைபேசி / அலைபேசி எண்ணுடன் விண்ணப்பித்தால், E-Pass அனுமதி எவ்வித தாமதமும் தடையுமின்றி உடனுக்குடன், விண்ணப்பித்த அனைவருக்கும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

பொதுமக்களின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவை, அனைவரும் பொறுப்புடன் பயன்படுத்தி தேவையற்ற பயணங்களை தவிர்க்கவும், தவிர்க்க இயலாத பணிகளுக்கு மட்டும் E-Passக்கு விண்ணப்பம் செய்து, E-Pass பெற்று பயணிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கொரோனா நோய்ப் பரவலை கட்டுப்படுத்த அரசின் நிலையான வழிகாட்டி நடைமுறைகளை கடைபிடிக்கவும், அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவும் பொதுமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மழைக்காலத்தில் டெங்கு காய்ச்சலிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ள செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்



ஏடிஸ் எகிப்தி கொசுவின் காரணமாகவே டெங்கு காய்ச்சல் ஏற்படுகிறது. நாம் வசிக்கும் இடங்களைச் சுற்றி எங்கும் தண்ணீர் தேங்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். 10 மிலி தண்ணீர் தேங்கியிருந்தாலும் கூட இந்த கொசு அதில் ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டுச்செல்லும். அதனால், வீடு, அலுவலகம் என்று நாம் புழங்கும் இடங்களை சுற்றிலும் தேங்காய் சிரட்டைகள், பேப்பர் கப்புகள், பாட்டில்கள் போன்ற தண்ணீர் தேங்க வாய்ப்புள்ள குப்பைகள் மற்றும் வீட்டில் உபயோகம் இல்லாமல் வீட்டில் பின்புறம் போட்டு வைத்துள்ள உரல்கள் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வீட்டில் இருக்கும் தண்ணீர் தொட்டிகளில் கொசுக்கள் நுழையாதபடி நன்றாக மூடிவிட வேண்டும்.

குளிர்சாதனப் பெட்டியின் பின்புறம் சேகரம் ஆகும் தண்ணீர், ஜன்னல் ஏசியில் பொருத்தப்பட்டுள்ள தட்டில் சேகரமாகும் தண்ணீரை வாரம் ஒருமுறை அகற்றிட வேண்டும்.

தற்காப்பு முறைகள்

குழந்தைகளைக் கொசு கடிக்காமல் இருக்க முழுக்கையுள்ள ஆடைகளை அணிவிக்கலாம். இரவில் மட்டுமல்லாமல் பகலிலும் வீடுகளில் இயற்கை கொசு விரட்டிகளை பயன்படுத்தலாம். கொசு கடிக்காமல் இருக்க பயன்படுத்தப்படும் கிரீம்களை கை கால்களில் தடவிக் கொள்ளலாம். வீட்டில் உள்ள ஜன்னல்களில் வழியே கொசுக்கள் உள்ளே நுழையாமல் இருக்கக் கொசு வலைகளை ஜன்னல்களில் பொருத்தலாம் மற்றும் நாம் இருக்கும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைப்பதன் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்தலாம்

பிரண்டை

பிரண்டைக்கும், எலும்புக்கும் மிக நெருங்கிய தொடர்பு உள்ள காரணத்தினால், எலும்பும், பிரண்டையும் பார்ப்பதற்கு ஒரே மாதிரி தோன்றும். எலும்புகள் சந்திக்கக் கூடிய இணைப்பு பகுதிகளிலும் நரம்பு முடிச்சுகளிலும் வாயுவின் சீற்றத்தால், முதுகு வலி, கழுத்து வலியால் அவதிப்படுபவர்கள் பிரண்டையை துவையல் செய்து சாப்பிட வேண்டும். எலும்பு முறிவு அடிபட்ட வீக்கம், சுளுக்கு ஆகியவற்றிற்க்கு பிரண்டை பற்றுப் போட்டுவர நாளடைவில் குணமடையும். பெண்களுக்கு ஏற்படும் முதுகுவலி, மாதவிடாய் காலத்தில் வரும் இடுப்பு வலி போன்றவற்றுக்கும் இது நல்ல மருந்து. இதய பாதிப்பு உள்ளவர்கள் அடிக்கடி பிரண்டை துவையலை சாப்பிட்டு வந்தால் இரத்த ஓட்டம் சீராகும் இதயம் பலப்படும். வாய்ப்புண், வாய் துர்நாற்றம், உதடு வெடிப்பு உள்ளவர்கள் பிரண்டையை உப்புடன் வெண்ணெய் சேர்த்து தடவிவர மூன்று நாட்களில் குணமடையும். சர்க்கரை நோய், குடல் புண், மூல நோய் போன்றவற்றை குணப்படுத்தும் பிரண்டைக்காய்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/18-20
& WPP No. TN/PMG (CCR) 518/18-20

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் முன்னிலையில் 23.07.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில் துறை சார்பில், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் வல்லம் – வடகால் தொழிற்பூங்காவில், Super Auto Forge நிறுவனம், 500 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 800 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், Forged Steel and Aluminium Parts உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

Published by Dr. P. SANKAR, IAS, on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr. P. SANKAR, IAS